# வழிபாடும் வரலாறும்

ஆசிரியர்
H. வைத்தியநாதன்
P. அநுமந்தராவ்

நேஷனல் எஜுகேஷனல் ஸொஸைடி
(ரிஜிஸ்டர்ட்)
நெ. 11, எட்வர்ட் எலியட்ஸ் ரோட்
மயிலாப்பூர்

உரிமை பதிவு] 1950 [விலை ரூ. ஒன்று

முதற் பதிப்பு
30-6-50

அல்லயன்ஸ் பிரஸ்
மயிலாப்பூர் :: சென்னை

# மதப் பகுதி




கிருபை கூர்ந்து எமைக் காக்குந் தயாளா !
கீதையை அருளிய பார்த்த சாரதே !
திருவல்லிக்கேணி வாழ் மணி வண்ணா !
நித்ய கல்யாணா ! நீயே கதி கண்ணா !
அவலைக் கொடுத்தோன் காட்டினன் வழியே ;
அருள் ; அன்பினை யாம் ஈந்தனம் இனியே !

## பொருளடக்கம்

1. மதப் பகுதி 1-55

1. இந்து மதம்

[கடவுள், வேதங்கள், பிரமன், திருமால், சிவபிரான், விநாயகர், முருகன், இராமன், கண்ணன், கலைமகள், திருமகள், பார்வதி, மதத்தைக் காத்த மகான்கள்.]

2. ஸொராஸ்டிரிய மதம் ... 56
3. ஜைன மதம் .... 58
4. பௌத்த மதம் .... 60
5. கிரிஸ்தவ மதம் .... 63
6. மகம்மதிய மதம் .... 66
7. சீக்கிய மதம் .... 69

2. பண்டிகைப் பகுதி 70

[வருடப்பிறப்பு, ராமநவமி, வரலக்ஷ்மி விரதம், கோகுலாஷ்டமி, விநாயகசதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, கார்த்திகைத்தீபம், வைகுண்டஏகாதசி, திருவாதிரை, திருப்பாவை, பொங்கல், மாட்டுப்பொங்கல், ரதசப்தமி, சிவராத்திரி, வைசாகபௌர்ணமி, கிரிஸ்மஸ், ஈஸ்டர், ஹிஜிரா, ஈத், மொஹரம், ரம்ஜான்.]

3. தேசியப் பகுதி 88

4. துதிப் பகுதி 106



தசாவதாரம்

உ

# முகவுரை

அன்பே உருவாய் அவதரித்த மகாத்மா காந்தியும், வீரமே வடிவமாய் விளங்கிய சிவாஜியும் தங்கள் சிறு வயதிலேயே கடவுளைப்பற்றிய பல வரலாறுகளைப் பெரியோர்கள் வாயிலாகக் கேட்டுணர்ந்தனர். இளம் பிராயத்திலேயே, தெய்வத்தினிடம் நம்பிக்கையும் பக்தியும் அவர்கள் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிட்டனவாதலின், நேர்மையிலும் மனவுறுதியிலும் நிகரற்று விளங்கினர். ஆதலால் சிறுவயதிலேயே கடவுளைப்பற்றிய சிந்தனை மனத்திற் புகுந்துவிட்டால், அது அவர்களை எக்காலத்திலும் உண்மை ஒழுக்கங்களினின்றும் வழுவாமல் காக்கும் என்பது தெளிவு.

இதைப்பற்றியே சிறுவர் சிறுமியர்களும், மற்றுமுள்ள குடும்பப் பெண்களும் வாசித்துணர்ந்து பயனடையத்தக்க முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இதில் அடங்கியுள்ள விஷயங்கள் புதியன அல்லவெனினும் பழமையை நினைப்பூட்டுவனமாக உள்ளன.

இவ்வித நூலை எழுதும்படி எங்களைத் தூண்டி ஊக்கமளித்தவர் திருவல்லிக்கேணி தேசீயப் பெண்கள் உயர்தர கலாசாலை ஸ்தாபகரும் காரியதரிசியுமான ஸ்ரீமான் என். கே. திருமலாசாரியர் அவர்கள்; இந்நூலை எழுதுவித்ததுடன் இதனை வெளியிட்டுதவவும் முன் வந்த அவர்களது அன்பும் ஆதரவும் எங்களால் என்றும் மறக்க முடியாதனவாகும். அன்னாருக்கு எம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந் நூலுள் காணப்படும் சித்திரங்களனைத்தும் அல்லயன்ஸ் கம்பெனியார் அன்போடு உதவியவை. மிகவும் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் தம் நூலைப் போல் கருதி, இந் நூலையும் அச்சிட்டுக் கொடுத்தவரும் அல்லயன்ஸ் கம்பெனியாரே. இங்ஙனம் பேருதவி செய்தவரும், தம் தந்தையார் காட்டிய வழியிலேயே தமிழ்த் திருப்பணியைச் செவ்விய முறையில் நடத்தி வருபவருமான அல்லயன்ஸ் சகோதரர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதில் சேர்க்கப்பட்டுள்ள பாடல்களுள் 'பாரினிலே ஒரு வீரன்' என்னும் பாடல் சுதேசமித்திரனிலும், 'வாழ்க பாரதமாதா' என்னும் பாடல் தினமணியிலும், 'கும்பிடுவோம் வாரீர்' 'பாரதபூமி' என்பன அமுதசுரபியிலும் வெளி வந்தவை. அந்தப் பத்திரிகை ஆசிரியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தச் சிறு நூல் ஒவ்வொரு மாணவ மாணவியின் கையிலும், ஒவ்வொரு குடும்பத்திலும் இலங்கவேண்டுமென்பது எங்கள் அவா. அதனை நிறைவேற்றிவைக்குமாறு கலாசாலை ஆசிரியர்களையும், தமிழபிமானிகளையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—ஆசிரியர்.

# வழிபாடும் வரலாறும்

## கடவுள்

உலகத்தையும் அதில் வாழும் உயிரினங்களனைத்தையும் படைத்தவர் கடவுள். அவர் எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிந்தவர்; ஆதியந்தமில்லாதவர்; மக்களது அறிவுக்கும் செயலுக்கும் எட்டாதவர். அந்தப் பரம் பொருளான இறைவனே இந்த உலகத்தை இயங்கச் செய்கிறார். ஆக்கல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் இடைவிடாமற் புரிபவரும் அந்தப் பரம் பொருளே. இவ்விதப் பெருமை வாய்ந்த கடவுளைப் பற்றியும், அவரை அடையும் மார்க்கங்களைப் பற்றியும் அவரது கருணையையும் அருளையும் பெறும் வகையினைப் பற்றியும் மக்கள் தத்தம் மனநிலைக்கு ஏற்ற நன் முறைகளைப் பேசிச் சிரத்தையுடன் அவற்றில் நின்று வழிபடுகிறார்கள். இக் காரணம் பற்றியே பல்வேறு மதங்கள் தோன்றின.

## மதம்

மதம் என்பது கொள்கை எனப்படும். மக்கள் நல் வழியிற் செல்வதற்கு ஏற்ற மதங்களை நிலைநாட்டி, அவர்களது மனத்தில் தெய்வ பக்தியை யூட்டி ஆஸ்திகத்தைப் பரப்பிய பெரியோர்களே மதஸ்தாபகர்களாவர். இவ்வாறு தோன்றிய சான்றோர்கள் பலர். இவர்கள் கடவுளின் அவதாரங்கள் என்றும் கூறப்படுவர். இவர்கள் நாட்டிய பல்வேறு மதங்களும் பல்வேறு மார்க்கங்களாகச் சென்று கடவுளின் அருள் என்னும் பேரின்ப நிலைக்கு மக்களை அழைத்துச் செல்கின்றன.

மேற்கூறிய முறையில் பெரும்பான்மையாக உலகில் நிலை பெற்றுள்ள மதங்கள் சிலவே. அவையாவன: இந்து மதம், ஸௌராஸ்டிரிய மதம், பௌத்த மதம், ஜைன மதம், கிரிஸ்தவ மதம், முகம்மதிய மதம், சீக்கிய மதம் முதலியனவாகும்.

இந்து மதம் காலவரையறைக்கு உட்படாத வேதங்களினின்றும் வேதங்களைத் தழுவி எழுதப்பட்ட ஸ்மிருதி சாஸ்திரங்களினின்றும் தோன்றியது. பௌத்த மதம் புத்த பகவானால் நிறுவப்பட்டது. ஜைன மதம் ஜினதேவரால் ஸ்தாபிக்கப்பட்டது. கிரிஸ்தவ மதம் இயேசுநாதராலும், முகம்மதிய மதம் முகம்மது நபியினாலும் நிறுவப் பட்டன.

மேற்கூறப்பட்ட மதங்களே உலகில் பல்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கு பெரும்பான்மையினரான மக்களால் அனுஷ்டிக்கப்படுகின்றன.

இனி, அந்த மதங்களைப் பற்றியும் அவற்றில் கூறப் படும் தெய்வ வழிபாடுகளைப் பற்றியும் ஆராய்வோம்.

# இந்து மதம்

## வேதங்கள்

வேதங்களில் கூறப்பட்டுள்ள கொள்கைகளைத் தழுவிய மதமே இந்து மதம் என்று மேலே கூறப்பட்டது. வேதங்கள் மிகவும் பழைமை வாய்ந்தவை; அவை இறைவனாலேயே ஓதப்பட்டன என்றும் அனாதியானவையென்றும் கூறுவர்.

வேதம் என்பது ஞானம் அல்லது அறிவு எனப் பொருள்படும். அறிவாவது ஒருயிர் தனக்கு நேரும் நன்மை தீமையை உணர்ந்து அவற்றிற்கேற்ற செயலைப் புரிய அறிவது. மனிதனால் எளிதில் அறிய முடியாத பொருள்களை அறிய உதவுதலின் வேதம் எனப்பட்டது என்று கொள்ளலாம்.

வேதங்கள் நால்வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை முறையே ரிக் வேதம், யஜுர் வேதம், ஸாம வேதம், அதர்வவேதம் எனப் பெயர் பெறும். இவை ஸம்ஹிதை, பிராம்ஹணம், ஆரண்யகோபநிஷத்து என்ற பிரிவுகளை யுடையன.

ஒரே பரம்பொருள் தன் விருப்பப்படி பலவேறு பெயர்கள் கொண்ட தெய்வங்களாக நின்று உலகத்தையும் உலகில் வாழும் உயிரினங்களையும் காத்து அருள் புரிகிறது என்றும், மக்கள் அந்தத் தெய்வங்களை முறைப்படி பக்தியோடு வழிபட்டு, நற்செயல்களையே செய்து அனைத்துயிர்க்கும் நன்மை புரிந்து வாழவேண்டும் என்றும் அங்ஙனம் வாழ்பவன் இறைவனருளுக்குப் பாத்திரமாகி நற்கதி அடைகிறான் என்றும் வேதங்களும் அவற்றைத் தழுவி எழுந்த ஸ்மிருதிகளும் ஆகமங்களும் பிறவும் கூறுகின்றன.

'உண்மை பேசுதல், அறமே செய்தல், அவரவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கடமைகளிலிருந்து வழுவாதிருத்தல், தெய்வம், முனிவர், பிதிருக்கள் ஆகியவர்க்குரிய கடன்களை நிறைவேற்றுதல், தாயையும் தந்தையையும் கல்வியறிவு ஊட்டியவரையும் தெய்வமெனக் கருதிப் போற்றுதல், விருந்தினரை ஓம்புதல், முதலியவற்றைத் தவறுமற் கடைப்பிடிக்க வேண்டும்' எனவேதம் கட்டளையிடுகிறது. இவற்றை யொட்டியே இந்து மதக் கொள்கைகளனைத்தும் வகுக்கப்பட்டுள்ளன.

மேற்கூறியவற்றை வற்புறுத்திக் கூறப் பல நூல்கள் எழுந்தன. உயிர் போகும் நிலையிலும் அவற்றைக் கடைப் பிடித்து அறநெறியிலிருந்து வழுவாமல் மேன்மை பெற்ற பலருடைய வரலாறுகள் புராணங்களாக எழுதிவைக்கப் பட்டன.

வேதங்களை ஏடுகளில் எழுதிப் படித்து மக்கள் அவற்றிலுள்ள விஷயங்களை உணர்ந்துகொண்டனர் என்பதில்லை. எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்டு களுக்கு முன்னமேயே தோன்றிய வேதங்கள் குரு சிஷ்ய பரம்பரையாக வாய்மொழியாகவே இன்று வரை அப்படியே கற்பிக்கப்பட்டு அழியாதபடி பாதுகாக்கப்பட் டுள்ளன என்பது எந்நாட்டுச் சரித்திரத்திலும் காணப் படாத வியக்கத்தக்க செய்தியாகும். இதனாலேயே 'எழுதாக் கிளவி' என்னும் பெயர் வேதத்திற்கு அமைந் துள்ளது. இத்தகைய வேதமே இந்து மதத்திற்கு மூலா தாரமானது என்பது மிகவும் பெருமையைக் கொடுப்ப தாகும். இவற்றை யெல்லாம் மனத்திற்கொண்டே பாரதியார் 'வேதமென்றும் வாழ்க என்று கொட்டு முரசே!' என்று முழங்கியுள்ளார்.

தெய்வங்கள் வேறுபட்ட பலவகைப் பெயர் களோடு விளங்கினும் அனைத்தும் ஒரு தெய்வத்தையே

குறிக்கும் என்பதும், எந்தத் தெய்வத்தை உபாசித்துப் போற்றினாலும் எல்லாம் ஒரு பரம்பொருளையே சாரும் என்பதும் நமது மதக் கொள்கை. வானத்திலிருந்து வீழும் நீர்த் துளிகளனைத்தும் முடிவில் ஓரே பெருங்கடலைப் போயடைவதுபோல, பல்வேறு தெய்வ வணக்கங்களும் ஒரே பரம்பொருளையே சாரும் என்பது பேரறிஞர்களின் துணிபு.

இனி, இந்து மதத்தினர் போற்றும் முக்கிய தெய்வங் களைக் கவனிப்போம்.

## பிரமன்

உலகம் எவ்விதப் பிறழ்வுமின்றி முறையே இயங்கு தற்பொருட்டு இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூவகைத் தொழில்களைச் செய்துவருகிறார் என்பர். அவ்விதத் தொழில்களுள் படைப்புத் தொழிலைப் புரியும் கடவுளே பிரமதேவனாவார்.

பிரமதேவன் திருமாலது உந்தித் தாமரையில் தோன்றினார் என்பர். இவருக்கு நான்கு முகங்கள் உண்டு. ஆதலின் நான்முகன் என்ற பெயரும் இவரையே குறிக் கும். கல்வித் தெய்வமாகிய கலைமகள் இவரது மனைவியா ராவர். வெள்ளைத் தாமரையில் இவர் வீற்றிருப்பவ ரென்றும் இவரது உலகம் சத்தியலோகமெனவும் கூறப் படும். இவரது வாகனம் அன்னப் பறவையாகும்.




திருமால்

## திருமால்

உலகில் வாழும் உயிர்களைக் காத்தலாகிய தொழிலைத் திருமால் செய்கிறார். இவர் பள்ளிகொண்டிருக்கும் இடம் பாற்கடல் என்றும் வீற்றிருக்கும் இடம் வைகுந்தம் என்றும் கூறப்படும். ஆதிசேடனாகிய அரவரசனே இவருக்குப் பாயலாகவும் ஆசன மாகவும்விளங்குகிறான். கருடன் இவருக்கு வாகனமாவன். திருமாலுக்கு நான்கு புஜங்கள் உண்டு. ஒவ்வொரு புஜத்திலும் முறையே சங்கு, சக்கரம், கதாயுதம், தாமரை ஆகியவற்றைத் தாங்கியுள்ளார். பீதாம்பரமே இவரது ஆடை. நீல நிறம் வாய்ந்தவர். செல்வத்திற்குத் தெய்வமாகிய திருமகளே இவரது மனைவியாராவர். திருமகளைத் திருமால் மார்பில் தாங்கியிருப்பதாகச் சொல்வர். பூமிதேவியும் இவரது மனைவியாரேயாவர்.

காத்தலாகிய தொழில் திருமாலுக்குரியதாகலின், அவர் அவ்வப்போது உலகில் தர்மம் குறைந்து அதர்மம் ஓங்கி, நல்லோர்வாடி, புல்லோர் களித்து வாழும் நாளில் உலகிலே தோன்றி,அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டு வார். சாதுக்களைக் காத்தலும் சாதுக்களை வருத்தும் தீயோர்களைத் தண்டித்தலுமே இவரது முக்கியமான செயல்கள். அச்செயலை ஏற்ற காலத்தில் நிறைவேற்றவே அவர் உலகில் தோன்றுவார். இவ்விதத் தோற்றமே 'அவதாரம்' எனப்படும். அந்த அவதாரங்களுள் பத்து அவதாரங்கள் மிகவும் சிறப்பாகப் போற்றப்படுகின்றன. இனி, அவற்றைக் கவனிப்போம்.

வேதம் சொல்கிறது:—

முதன்முதலில் ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றி லிருந்து கனலும், கனலிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமும்

தோன்றின. பின்பு நீர் வாழ்வன முதல் மனிதர் ஈருக வுள்ள அனைத்துயிரும் படைக்கப்பட்டன.

புராணம் கூறுகிறது:—

இந்தச் சிருஷ்டிக்கு முன்பு உலகம் பிரளய வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தது. அப்பொழுது தொடங்கிப் பரம்பொருள் பத்து அவதாரங்கள் எடுத்துப் பூமியைக் காக்கலுற்றார். பத்து அவதாரங்களாவன: மச்சாவதாரம், கூர்மாவதாரம், வராகாவதாரம், நரசிம்மாவதாரம், வாமனவதாரம், பரசுராமாவதாரம், ராமாவதாரம், கிருஷ்ணவதாரம், புத்தாவதாரம், கல்கியவதாரம் என்பன.

## 1. மச்சாவதாரம்

உலகம் பிரளய ஜலத்தில் மூழ்கிக் கிடந்தபோது திருமால் குழந்தை வடிவுடன் அந் நீர் நிலையில் ஓர் ஆலிலை மேல் பள்ளிகொண்டிருந்தார். அப்போது அவர் திருவுளப்படி அவரது நாபியினின்றும் ஒரு தாமரை தோன்றி அதிலிருந்து பிரம்மா அவதரித்தார். அந்தப் பிரமன் தேவனுக்குத் திருமால் நான்கு வேதங்களைப் போதித்தருளி, அவரைச் சிருஷ்டிக்கும்படி பணித்தார். பிரம்மா அவ்வாறே சிருஷ்டிக்கும் தொழிலை மேற்கொண்ட தருணத்தில் சோமுகன் என்ற அசுரன் தோன்றி அவரிடம் இருந்த வேதங்களைக் கவர்ந்து சென்று கடலுள் ஒளிந்தான். அதைக் கண்ட நான்முகன் ஒன்றும் செய்ய இயலாமல் வருந்தவே, திருமால் மீனாக உருக்கொண்டு கடலுள் புகுந்து சோமுகனைக் கொன்று மறைகளை மீட்டுவந்து அயனிடம் கொடுத்தார். இதுதான் திருமாலின் முதல் அவதாரமான மச்சாவதாரமாகும். (மச்சம் - மீன்)

## 2. கூர்மாவதாரம்

படைப்பிலே பகலும் இரவும் போலும், புண்ணியமும் பாவமும் போலும், அமரரும் அசுரரும் உண்டாயினர். அவர்கள் எப்போதும் ஒருவர்க்கொருவர் போரிட்டு வந்தனர். அந்தப் போர்களிலே, வலி மிக்க கொடிய அசுரர்களால் நாளுக்கு நாள் நலிவுற்று வருந்தலாயினர் தேவர்கள். நல்லாரைக் கை தூக்கி விடும் திருமால் இதைக் கண்டு தேவர்களை இறப்பு அற்றவர்களாக்க எண்ணங்கொண்டனர். அவர் திருவுளப்படி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்து அமுதை எடுக்கத் தீர்மானித்தனர்.

உடனே அவர்கள் மந்தரம் என்னும் மலையை மத்தாகவும் வாசுகி என்னும் பாம்புத் தலைவனைக் கயிறாகவும் கொண்டு பாற்கடலைக் கடையலாயினர். அவ்வாறு கடையும்போது அதன் வேகத்தைத் தாங்கமாட்டாது மந்தரகிரி கொஞ்சங் கொஞ்சமாகக் கீழே இறங்கலாயிற்று. தேவரும் அசுரரும் அது கண்டு தமது முயற்சி கைகூடாமற் போமே என அஞ்சி மிகவும் வருந்தினர். அப்போது திருமால் ஆமையாக வடிவமெடுத்துக்கொண்டு மந்தரகிரிக்கு அடியில் தன்முதுகைக் கொடுத்து அதனைத் தாங்கி நின்றார். உடனே இரு திறத்தாரும் மிக்க வன்மையுடன் கடலைக் கடைந்து அமிர்தத்தை வெளியே எடுத்தனர். இத்தருணத்தில் எடுத்த அவதாரம்தான் கூர்மாவதாரம் எனப்படுகிறது. (கூர்மம்-ஆமை.)

ஆமையாக அவதரித்த ஆண்டவன், அமிர்தம் வெளிப்பட்டதும் ஓர் அழகிய ஆரணங்காக வடிவமெடுத்து அவ்வமிர்த பாண்டத்துடன் காட்சியளித்தார். மதி கெட்ட அசுரக் கூட்டம் அம்மாய மங்கையின் பேரில் மையலுற்று அவள் பேரழகைப் பருகிய வண்ணம்

உட்கார்ந்துவிட்டது. ஆனால், உண்மையை உணர்ந்த தேவர்களோ அந்த நல்லாள் அளித்த அமுதை நன்றாக உண்டு 'சாகா வரம்' என்னும் அழியாப் பேற்றைப் பெற்றனர். நடுவே மோகினியின் சூழ்ச்சியை அறிந்த ஓர் அசுரன் தேவர் கூட்டத்துள் கலந்து அமிர்தத்தை வாங்கி யுண்டான். அவனது இரு புறங்களிலும் அமர்ந்திருந்த சூரியனும் சந்திரனும் அவனுடைய செயலை அறிந்த திருமால் அவனைத் தலைவேறு உடல் வேறாகத் துண்டித்தார். எனினும் அமிர்தத்தை அருந்திவிட்டதால் அவன் சாகாமல் தப்பியதுமன்றித் தன்னைக் காட்டிக் கொடுத்த சூரியனையும் சந்திரனையும் கிரகணம் என்ற பெயராலே பழிவாங்கவும் தொடங்கினான். அவனது தலையும் உடலுமே, சூரியனையும் சந்திரனையும் பீடிக்கும் ராகு கேதுக்கள் ஆயினர் என்று புராணம் கூறுகின்றது.

### 3. வராகாவதாரம்

இதற்குப் பின்னர் அசுரர்களுக்கெல்லாம் திருமாலின் மீது வெறுப்பும் கோபமும் வளர்ந்தன. அவர்கள் எவ் வகையாலேனும் தேவர்களை அழிக்க வேண்டும் என்று தீர்மானித்தனர். அப்போது அசுர குலத்தில் இரணிய கசிபு, இரணியாக்கன் என்றும் இரண்டு சகோதரர்கள் தோன்றியிருந்தனர். அவர்களுள் இளையவனான இரணியாக்கன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு போய் பாதாளத்தில் பதுங்கிக்கொண்டான். அதனால் பூமிதேவி திருமாலை நோக்கி முறையிடவே திருமால் ஓர் அழகிய வெண்ணிறப் பன்றியாக வடிவமெடுத்துவந்து இரணியாக்கனைக் கொன்று பூமியை முன்போல் நிலை நிறுத்தினார். இந்த அவதாரந்தான் அவருடைய மூன் றாவது அவதாரமான வராகாவதாரமாகும்.

## 4. நரசிங்காவதாரம்

இவ்வாறு இரணியாக்கன் திருமாலால் கொல்லப் பட்ட செய்தியை அவனது தமையனான இரணியன் அறிந்து ஆற்றொணாத் துயரமும், திருமாலிடம் மீளாப் பகைமையும் கொண்டான். உடனே அவன் அரணியம் புகுந்து அயனை நோக்கிப் பல்லாயிர ஆண்டுகள் தவங் கிடந்தான். நான்முகன் அவன் எதிரில் தோன்றி 'உனக்கு என்ன வரம் வேண்டும்' எனக் கேட்டனர். இரணியன் தனக்கு இரவிலும், பகலிலும், வீட்டிலும், வெளியிலும், ஆயுதத்தாலும், அஸ்திரத்தாலும், மனிதனாலும், விலங் காலும் மரணம் நேரலாகாது என்னும் வரம் அருளும்படி வேண்டினன். பிரம்மதேவன் அவன் கேட்டபடியே அவனுக்கு வரங்களை அருளிச் சென்றனர்.

பல்லாண்டுகள் தவங்கிடந்ததால் உடலெலாங் குன்றி எலும்புக்கூடாய் நின்ற இரணியன் நான்முக னிடம் வரங்களைப் பெற்ற வுடனேயே வஜ்ஜிரதேகம் பெற்று ஒளிரலானான். உடனே அவன் தனக்கு இனி என்றுமே மரணமில்லை என்று தீர்மானித்து, தன் நகர் சென்று தேவருலகத்தின்மேல் படையெடுத்தான். இவனது வலிமையை அறிந்த தேவர்கள் எல்லோரும் தத்தம் இருக் கைகளைத் துறந்து அஞ்சியோடி ஒளிந்தனர். ஆதலின் இரணியன் எளிதிலே மூன்று உலகங்களையும் கைப்பற்றி அவற்றின் அதிபதியாக விளங்கினான்.

பின்பு அவன், தன்னுடைய இரண்டாவது திட்டத்தை நிறைவேற்ற எண்ணினான். அதாவது திருமாலை எங்கிருந்தாலும் தேடிப்பிடித்து அவரைக் கொல்ல வேண்டும் என்று கருதி அவரை வைகுண்டம் முதலாக எல்லா இடங்களிலும் தேடிப்பார்த்தான், எங்கும் நிறைந்த இறைவன் அந்தப் பாவியின் கண்ணிற் படவில்லை. எங்கும் திருமாலை காணமற்போகவே சலிப் புற்றுத் தன் நகர் திரும்பினான்.

ஆயினும் அச்செயலோடு அவன் நிற்கவில்லை. 'கடவுள் என்பவன் வேறு எங்குமில்லை; வேறு எவனுமில்லை; நானே தான் கடவுள்; ஆதலின் என் பெயரையே, அனைவரும் துதிக்க வேண்டும்; என் உருவத்தையே எல்லோரும்வணங்கவேண்டும்;வேள்விகளிலும்,ஹோமங்களிலும் அவிர்ப்பாகமும் எனக்கே வழங்கப்படல் வேண்டும். இக்கட்டளைகளை எவரேனும் மீறித் திருமாலின் பெயரை உச்சரித்தாலும், விஷ்ணுவின்வடிவத்தைப் பூசித்தாலும் புகழ்ந்து பேசினாலும் உடனே அன்னோரின் தலைகள் தரையில் உருளும்' என்று பறை சாற்றுவித்தான்.

இரணியனுடைய கொடுங்கட்டளைகளுக்கு அஞ்சி மூன்று உலகங்களிலும் மூல புருஷனான திருமாலை விட்டு எல்லோரும் இரணியனையே போற்றி செய்யத் தொடங்கினர். நாராயணன் நாமம் அடியோடு மறைந்து எல்லா இடங்களிலும் இரணியன் பெயரே குடிபுகலாயிற்று,

இப்படியிருக்க இரணியனுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அப்புதல்வன் தாய் வயிற்றில் இருக்கும் போதே நாரதர் வந்து அவன் செவியில் நாராயண மந்திரத்தை ஓதிச் சென்றனர், ஆதலால் அவன் பிறக்கும் போதே விஷ்ணுவைக் கண நேரமும் மறவாத பக்தியுடன் தோன்றினன். அவனே பிரகலாதன் என்னும் பெயர் வாய்ந்தவன்.

பிரகலாதனைத் தக்க வயதில் பள்ளிக்கு அனுப்பி வைத்தான் இரணியன். ஆசிரியர் தம் வழக்கம்போல் வித்தியாரம்ப சமயத்தில் 'இரணியாய நம' என்று போதித்தார், ஆனால் பிரகலாதனோ நாராயணாய நமः என்றான். ஆசிரியர் அச்சமும் வியப்பும் கொண்டு இச் செய்தியை இரணியனிடம் தெரிவித்தார்.

இரணியன் தன் புதல்வனைக் கூவி, அந்தச் சொல்லை மறந்து தன் பெயரையே உச்சரிக்குமாறு கூறினன். சிறுவன் கேட்கவில்லை. அதனால் இரணியன் சினந்து பிரகலாதனை மலைமீதிருந்து உருட்டியும், கடலில் தள்ளியும், யானையின் காலால் இடரவைத்தும், பாம்புகளைக் கொண்டு கடிக்க விட்டும் கொல்ல முயன்ருன். ஆனல் இவற்ருல் பிரகலாதனுக்கு ஒரு சிறிதும் தீங்கு நேராமல் போகவே இரணியன் அவனை விளித்து "அடேய் பயலே! நீ கூறும் அந்தத் திருமால் எங்கே உள்ளனன்?" என வினவினன்.

பிரகலாதன் கொஞ்சமும் தயக்கமின்றி இரணியனை நோக்கி "தந்தையே! திருமால் இல்லாத இடமில்லை. அவர் தூணிலும் உள்ளார். துரும்பிலும் உள்ளார். உம்மிலும் உள்ளார். என்னிலும் உள்ளார்" என்று புன் சிரிப்புத்தவழக் கூறினன்.

அதைக் கேட்ட இரணியன், "ஆயின் அந்த விஷ்ணுவை நீ இந்தத் தூணில் காட்ட வேண்டும். இல்லையேல், உன்னை என் கையிலுள்ள இந்தக் கட்கத்தாலேயே கொல்வேன்" என்று சீறி யெழுந்து, தன் எதிரில் இருந்த ஒரு தூணைத்தன் கையிலிருந்த வாளால் தாக்கினன்.

உடனே பிரகலாதனுடைய வார்த்தையையும், உயிரையும் காப்பதற்காகத் திருமால் அத்தூணில் காட்சியளித்தார். தூண் படீரென வெடித்தது. அதனுள்ளிருந்து மனித உடலும் சிங்கமுகமும் வாய்ந்தநரசிங்க உருவம் தோன்றியது.

நரசிம்மரைக் கண்ட இரணியன் அவரைப் போருக் கழைத்தனன். உடனே நரசிம்மர் இரணியனைப் பற்றி இழுத்து, தமது மடியின் மேல் கிடத்தி, தம் கூரிய நகங்கனால் அவனது வயிற்றைக் கிழித்துக் கொன்று பிரகலாதனைப் பலவாறு வாழ்த்தி மூவுலகங்களையும்

அவனுக்கு முடிசூட்டி அருளினர். இதுதான் திருமாலி னுடைய நான்காவது அவதாரமாகும்.

5 வாமனவதாரம்

பிரகலாதனுடைய மரபில் பலி என்னும் அரசன் தோன்றினன். அவனும் தேவர்களுக்கு இடையூறு செய்யக் கருதி ஓர் அரிய வேள்வி இயற்றினன், அப்போது திருமால், மிகவும் குறள் வடிவம்வாய்ந்த ஒரு பிரம்மசாரியாக அவன் எதிரில் தோன்றி மூன்று அடி மண்ணைத் தானம் கேட்டார். பலி அவ்வாறே மூன்றடி மண்ணைத்தானம் கொடுத்ததும், திருமால் நெடுமாலாக உருவமெடுத்து, தம் ஓரடியால் மண்ணையும் மற்றோ ரடியால் விண்ணையும் அளந்து, மூன்றாவது அடிக்கு இடங்கேட்டார். வேறு எங்கும் இடம் இல்லாமற் போகவே பலி தன் தலையைக் காட்டலும், விஷ்ணு அவன் தலையின் மேல் தம் திருவடியை வைத்து அவனைப் பாதலத்துள் அழுத்தி அவன் செய்த அரிய தவத்துக்காக அங்கே அவன் இருக்கையில் தாம் காவல் புரியலானர். இந்தக் குறளனாக அவர் எடுத்த ஐந்தாம் அவதாரமே, வாமனவதாரமாகும்.

6. பரசுராமாவதாரம்

இதற்குப்பின்பு திருமால், ஜமதக்னி, ரேணுகை என்பாருக்குப் புதல்வராக உற்பவித்துக் கலைப்பை ஆயுதந் தாங்கி 'பரசு ராமன்' என்னும் பெயரைப் பெற்றார். இவரது தந்தையான 'ஜமதக்னி' முனிவரைக் கார்த்த வீரியன் என்றும் அரசன் கொன்றுவிட, அக் காரணத்தால் க்ஷத்திரிய மரபையே அவர் அழிக்க எண்ணிக் கார்த்த வீரியன் முதலாக உள்ள எல்லா அரசர்களையும் கொல்ல முற்பட்டார். பிறகு தாமே தசரதன் புதல்வனாக அவதரித்து வந்தமையால், தம ஆற்றல் முழுவதையும் ரகுராமனிடம் செலுத்தி

விட்டுத் தாம் தவத்தை நாடிச் சென்றார். இது ஆறாவது அவதாரம்.

இராமாவதாரம், கிருஷ்ணாவதாரம், புத்தாவதாரம் ஆகிய மூன்று அவதாரங்கள் முறையே இராமன், கண்ணன், புத்தர்பிரான் ஆகிய மூன்று தனி அத்தியாயங்களாகப் பின்னே கூறப்பட்டுள்ளன.

## 10. கல்கியவதாரம்.

இது திருமாலின் பத்தாவது அவதாரம். இன்னும் சில காலத்தில் இவ்வுலகில் பாதகர்கள் அபரிமிதமாய்ப் பெருகி நல்லோரைப் பலவாறு இம்சிப்பார் என்றும் அச்சமயத்தில் திருமால் 'கல்கி' யாக அவதரித்துத் தீயாரை மாய்ப்பர் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

இவற்றையன்றித் திருமால் வேண்டுங்காலத்தில் சில மனிதர்களின் சக்தியுட் புகுந்திருந்து நற்காரியங்களைச் செவ்வனே நிறை வேற்றுவர் என்றும் புராணங்கள் கூறுகின்றன. இது பற்றியே செயற்கரியவற்றைச் செய்து நிறைவேற்றுபவர்களைத் தெய்வாம்சம் உடையவர்கள் என்றும் அவதார புருஷர்களென்றும் கூறுகிறார்கள்.

இவ்வாறு திருமால் எவ்வகையிலேனும் உலகைக் காத்தருள்கிறார். விஷ்ணு எனவும் பெயர் வாய்ந்த இவரையே தம் தெய்வமாகக்கொண்டு பக்திசெய்பவர்கள் வைஷ்ணவர் எனப்படுவர்.



நடராஜர்

## சிவபிரான்

முத்தொழில்களுள் அழித்தலாகிய தொழிலைச் செய்து உலகை ஒரு நிலையில் நிறுத்தும் பெருமானே சிவபிரான். இவர் இருப்பிடம் கயிலையங்கிரியாகும். பார்வதி தேவியார் இவரது மனைவியாராவர். விநாயகரும் முருகனும் இவரது புதல்வர் என்று கூறுவர்.

சடைமீது கங்கையும் பிறைச் சந்திரனும் தாங்கி, நெருப்பை நிகர்த்த தம் மேனியில் நீறுபூசித் துலங்குபவர். மானும் மழுவும் நெருப்பும் திரிசூலமும் நாற்கரங்களிலும் இலங்கத் தாங்குபவர். புலித்தோ லாடையும் யானைத் தோற் போர்வையும் உடல்மீது அணிந்தவர். பாம்புகளையே ஆபரணமாகக் கொண்டவர். காளை இவரது வாகனமாகும்.

சிவபெருமானது உருவம் இவ்வாறு கூறப்பட்டிருப்பினும் தென்னாட்டு ஆலயங்களில் லிங்க வடிவமாகவே பூஜிக்கப்படுகிறார். உத்ஸவ மூர்த்திகளின் வடிவம் மேலே வர்ணித்துக் கூறியபடி அமைக்கப்பட்டிருக்கும்.

தாண்டவக் கோலத்தில் விளங்கும் சிவபெருமான் நடராஜர் எனப்படுவர். தில்லையெனப்படும் சிதம்பரத்தில் இந்தக் கோலம் சிறப்பாகப் போற்றப்படுகிறது.

மார்க்கண்டேயர், ஞானசம்பந்தர், நாவுக்கரசர் முதலியோர் சிவபெருமானை வழிபட்டு மேனிலை எய்தினர். சிவபெருமானையே தம் தெய்வமாகக் கருதி உபாசிப்பவர் 'சைவர்கள்' எனப்படுவர்.



விநாயகர்

பாலும் தெளி தேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து (உ) னக்கு நான் தருவேன்
—கோலஞ் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

# விநாயகர்

மக்கள் தாம் தொடங்கும் நற் செயல்கள் யாவும் எவ்விதமான இடையூறும் இன்றி, நன்கு நிறைவேறுவதற்காக முதலில் விநாயகரை வழிபட்டு, பின்னர்ச் செயலில் இறங்குகின்றனர். விநாயகரைத் தொழுதபின்பு தொடங்கப்படும் காரியங்கள் விக்கினம் இல்லாமல் நிறைவேறும் என்பது இந்துக்களின் நம்பிக்கை. ஆதலால் விநாயகருக்கு 'விக்கினேசுவரர்' என்றும், யானை முகம் இருத்தலின் 'கஜமுகன்' எனவும், துதிக்கையும் நான்கு கரங்களும் உடையார் ஆதலின் ஐங்கரன் என்றும், இன்னும் இவை போன்ற பல பெயர்களும் உள்ளன.

பிள்ளையாரின் யானை முகத்தையும், பானை வயிற்றையும் பார்க்கும்போதெல்லாம் நமக்குச் சிரிப்பு வருகிறதல்லவா? அவரும் எப்போதும் சிரித்த முகத்துடனும், நன்ருக உண்டு பருத்த வயிற்றுடனும் நம் எதிரில் சந்தோஷமாகக் காட்சியளிக்கிறுர். கோயில் ஆயினும் சரி; குளக்கரை ஆனாலும் சரி; மலை ஆயினும் சரி; மரத்து அடியாக இருந்தாலும் சரி; எங்கெல்லாம் அவரை வைத்து மக்கள் வழிபட எண்ணுகிருர்களோ, அங்கே எல்லாம் பேதமின்றி அமர்ந்திருந்து பூஜையை ஏற்பார். அவல், பொறி, வெல்லம், கடலை, தேங்காய், பழம்எள்ளுருண்டை, கொழுக்கட்டை, அப்பம் முதலியன இவருக்கு நிவேதிக்கப் பெறும்.

சிவனுக்கும் பார்வதிக்கும் தோன்றிய புதல்வர் இருவர்: அவர்களுள்மூத்தவர் விநாயகர், இரண்டாம் புதல்வன் முருகன். முருகன் மட்டும் உரிய பருவத்தில் கலியாணம் செய்துகொண்டான். பிள்ளையாருக்கு விவாகமே ஆகவில்லை. அவர் இன்னும் பிரம்மசாரியாகவே இருக்கிருர். ஏனெனில் அவரைக் கணவனுக அடைவதற்கு ஏற்ற நுண்ணறிவும், அழகும் உடைய பெண் எந்த உலகத்திலும் அவர்க்குத் தென்படவில்லையாம். ஆகையால்

தமது மனத்துக்கு இசைந்தவளாக ஒரு பெண் கிடைக்கும் வரையில், தாம் திருமணமே செய்து கொள்வதில்லை என்று அவர் முடிவு செய்துகொண்டு விட்டாராம். அதனால்தான் அவர் கலியாணம் செய்து கொள்ளாமல் கிடைத்த இடத்தில் உண்டு, கண்ட இடத்தில் வீற்றிருந்து கவலையே இல்லாமல் 'குஷி'யாக இருக்கிறார் என்று ஒரு பழைய கதை கூறுகிறது.

பிள்ளையார் யானைமுகம் வாய்க்கப் பெற்றிருப்பது பற்றிப் பல்வேறு வரலாறுகள் கூறப்படுகின்றன. யானைக்கு இரண்டு கொம்புகள் உண்டல்லவா? ஆனால் பிள்ளையாரின் யானை முகத்தில் ஒரு தந்தமே காணப்படும். மற்றொன்று ஒடிந்திருப்பது போலிருக்கும். அதுபற்றி ஒரு வரலாறு உண்டு:—

வியாச முனிவர் ஒரு சமயம் 'பாண்டவர்களுடைய வரலாற்றினைக் கொண்ட பாரத இதிகாசத்தை எழுதி, அதன் வழியாக அறநெறிகள் அனைத்தையும் உலகத்தில் பரப்பவேண்டும்' என ஆவல் கொண்டார். ஆனால் கணப்பொழுதும் தடையின்றிப் பிரவாகம் போல் தமது வாக்கினின்றும் வெளிப்படும் சுலோகங்களை அத்துணை விரைவாகவும் தெளிவாகவும் தொடர்ந்து எழுத வல்ல அறிவும் ஆற்றலும் நிறைந்த கல்விமான் எவரும் இல்லையே என்னும் வருத்தம் அவருக்குண்டாயிற்று. தாம் எண்ணிய அந் நற்கருமத்தை இனிது நிறைவேற்றி வைக்குமாறு பிள்ளையாரை வேண்டிக் கொள்வதற்காக அவர் மேருமலைச் சாரலை வந்தடைந்து, அங்குப் பிள்ளையாரைக் கண்டு தமது கருத்தை வெளியிட்டார்.

மேலும், விநாயகரைப் பார்த்தவுடனே வியாசருக்கு மற்றொரு யோசனையும் உதித்தது.

'வெற்றிக்கு இறைவன் விநாயகர். கணபதியால் இயலாத காரியம் எது உள்ளது? ஆகையால் இளமையும், கல்வியும், அருளும், ஆற்றலும் மிக்க இவரையே கொண்டுதான் நமது நூலை எழுதுவிக்கவேண்டும்' என்று தமக்குள் முடிவு செய்துகொண்டு அதனையும் விநாயகரிடம் தெரிவித்தார். விநாயகர் அவ்வாறே எழுதித் தருவதாக ஒப்புக்கொண்டதும், வியாசர் கொஞ்சமும் தாமதியாமல் உடனே சுலோகங்களை விரைந்து சொல்லத் தொடங்கி விட்டார்.

பிள்ளையார் பார்த்தார்; 'இன்னும் ஏடும் எடுக்கவில்லை; எழுத்தாணியும் காணவில்லை; வியாசருடைய வாக்கினின்றும் அமுதனைய அருஞ்சுலோகங்கள் வெளிப்பட்ட வண்ணமாக இருக்கின்றன. கொஞ்சம் தயங்கினாலும் பிறந்த சுலோகங்கள் மறந்தும் மறைந்தும் போய் விடும். ஆதலால் வியாசருடைய வாக்கை நிழல் போலத் தொடர்ந்து வரையவேண்டும். ஆனால் எதன்மேல் எழுதுவது? எதனால் எழுதுவது?' என்று ஒரு விநாடி ஆலோசித்தார்.

"ஓ! இவ்வாறு செய்வேன்; மகாபாரதம் என்றென்றும் அழியாமலிருக்க அதனை அசைவற்ற இந்த மேரு பர்வதத்தின் மேல் எழுதுவேன். எழுத்தாணியைத் தேடிப் போகவேண்டியதில்லை. இதோ—என் முகத்தில் உள்ள கொம்புகளில் ஒன்றை ஒடித்து, அதனையே எழுத்தாணியாக்கிக்கொண்டு எழுதுவேன்' என்று தீர்மானித்து, தமது யானை முகத்துத் தந்தங்களினின்றும் ஒன்றை ஒடித்து, அதனையே கூரிய எழுத்தாணியாகக் கொண்டு, வியாசர் கூறிய பாரதம் முழுவதையும் மேருவின் மேல் எழுதி முடித்தார்.

இந்த வரலாற்றினை 'வேதங்கள் நான்கினுடன் ஐந்தாவதாகப் பாரதத்தையும் சேர்த்து நிலைநாட்ட

வேண்டுமென்னும் அவாவினால், வியாசமுனிவர் அந்தப் பாரதத்தைச் சொன்னபோது மேருவை ஏடாகவும், தமது கொம்பை எழுத்தாணியாகவும்கொண்டு, அந்நூலை எழுதி முடித்த விநாயகரை நாம் வணங்குவோமாக' என்னும் பொருளமைந்த கீழ் வரும் பாடலால் அறியலாகும்.

நீடாழி யுலகத்து மறைநாலொ டைந்தென்று
நிலை நிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதம்
சொன்னநாள்
ஏடாக வடமேரு வெற்பாக அங்கூ ரெழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு
கூர்வாமரோ.
—வில்லிபுத்தூரார்.

இத்தகைய அருளும் ஆற்றலும் மிக்க விநாயகர் மற்றும் பல விந்தைகளைப் புரிந்து உலகத்தோரை நல் வழிப்படுத்தியுள்ளார். 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்னும் உண்மையை உணர்த்தப் பிள்ளையார் செய்த திருவிளையாடலாகக் கூறப்படும் வரலாறென்று உண்டு.

ஒரு நாள் பிள்ளையாரும் முருகனும் பார்வதியின் மடிமீது வீற்றிருந்தனர். அப்போது சிவபெருமான் ஓர் அரிதான மாங்கனியோடு அங்கே வந்து தம் புதல்வரை நோக்கி "உங்களில் யார் எல்லா உலகத்தையும் முதலில் சுற்றி வருகிறாரோ அவருக்கே இந்தப் பழம் கொடுக்கப் படும்" என்று கூறினர்.

அவர் அவ்வாறு சொல்லி வாய் மூடு முன்னமே, முருகன் தனது வாகனமான மயில்மீது ஏறிக்கொண்டு

உலகத்தைச் சுற்றி வருவதற்காக விரைந்து பறந்து சென்றான். ஆனால் பிள்ளையாரோ எங்கும் போகவில்லை! தம் இருக்கையைவிட்டு உடனே எழுந்தார்; மெல்ல நடந்து போய் தம் தாய் தந்தையரான பார்வதியையும் சிவனையும் மூன்று முறை வலம் வந்து அவர்களுடைய திருவடிகளை வணங்கினின்றார். சிவனும் உமையும் மகிழ்ந்து, அந்த அருங்கனியைப் பிள்ளையாருக்கே கொடுத்துவிட்டனர்.

சிறிது நேரம் கழித்து, பூமியெல்லாம் சுற்றிவிட்டு முருகன் வந்து சேர்ந்தான். அதற்குள் தனது தமையனிடம் பழம் இருப்பதைப் பார்த்து மிகவும் மனம் வருந்தினான். ஏனெனில், கணபதியும் அவனுடைய வாகனமும், உண்பதில் வல்லவர்களேயன்றி, ஓடுவதில் சமர்த்தரல்லர் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆதலால் அவன் துயரம் ததும்பத் தன் தாய் தந்தையரை நோக்கினான்.

முருகனின் துயரத்தை அறிந்த ஈசனும் பார்வதியும் அவனைத் தம் அருகில் அழைத்து "சுப்பிரமணியா வருந்தாதே; எல்லோருக்கும் எல்லா உலகமும்—எல்லாத் தெய்வமும்—தாய் தந்தையரே ஆவர். தாயிற் சிறந்த கோயிலுமில்லை; தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. இந்த உண்மையை நன்கு அறிந்திருந்த கணபதி எம்மையே சுற்றி வந்து கனியை அடைந்தான். நீயோ, உண்மையை உணராமல் உலகைச் சுற்றித் திரிந்தாய்" என்று பல நீதிகளைப் புகட்டி, ஆறுதல் கூறி, அவனுக்கு அருள் புரிந்தனர்.

பிள்ளையாரின் எதிரில் நாம் ஏன் தோப்புக்கரணம் போட்டும், தலையில் குட்டிக்கொண்டும் வழிபடுகிறோம் என்பதைக் கவனிப்போம்.

ஒரு காலத்தில் கொடியவரான அரக்கர்கள் தேவர்களையும், தவசிகளையும், நல்லோரையும் மிகவும் துன்புறுத்தினார்கள்; மேலும் அமரரும் முனிவரும் தினந்தோறும் தமது கொலுமுன்பு வந்து தோப்புக்கரணம் போட்டும், தலையிலே குட்டிக்கொண்டும் தம்மை வணங்கிச் செல்லவேண்டும் எனவும் கட்டளையிட்டனர். வலியிழந்து நின்ற அமரரும் முனிவரும் என் செய்வர்? அத்தீயோரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அவ்வாறே செய்துவந்தனர்.

தமது அடியார்களுக்கு நேரிட்ட இடையூறுகளை விநாயகர் அறிந்தார். உடனே அசுரர்களின்மீது படையெடுத்துப்போய் அவ்வனைவரையும் கொன்று, தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் அருள் புரிந்தார். அப்போது தம் பகைவர் அழிவுற்றதைக் கண்ட அமரரும் முனிவரும் ஆனந்த நடமாடினர். மேலும் தாம் அதுகாறும் அசுரரின் கொலு முன்பு வெறுப்புடன் செய்து வந்த தோப்புக்கரணம் போடுதல், குட்டிக்கொள்ளுதல் முதலிய பணிகளை அன்றுடம் விநாயகரின் கொலு முன்பு விருப்புடன் செய்துவருவதற்கு ஆவலுற்று, அதற்காகக் கணபதியிடம் அனுமதி கேட்டனர். விநாயகர் அதற்கு இசைந்ததால், அவர்கள் அன்றுமுதல் அவ்வாறே செய்து வரலாயினர். அந்த வழக்கந்தான் இன்றளவும் நம்மிடையேயும் பரவி நிலைத்துள்ளது.

இத்தகைய பெருமைவாய்ந்த பிள்ளையாரைப் பூஜை செய்வதற்கு நாம் பொன்னையும் பொருளையும் தேடி அலையவேண்டியதில்லை. ஈரமான களிமண்ணைக்கொண்டு வந்து, அவரைப்போன்ற ஓர் உருவம் செய்துவைத்து, பத்ரங்களையும் புஷ்பங்களையும் சேகரித்து, அவற்றால் அர்ச்சித்தால் போதும்; அருகம் புல்லால் அர்ச்சனை

செய்து கொழுக்கட்டையையும் நிவேதித்து விட்டால் அளவற்ற மகிழ்ச்சி கொள்வாராம் ஆனைமுகத்தண்ணல்.

இந்துக்கள், பிள்ளையாருடைய பிறந்த நாளாகிய ஆவணித் திங்களில் அமாவாசைக்குப் பிறகு வரும் நாலாம் நாளைப் பண்டிகையாகக் கொண்டாடி அவரைப் போற்றுவர். அந்த நாளே 'விநாயக சதுர்த்தி' எனப்படும்.

## முருகன்.

சிவபிரானும் உமையும், அசுரரை அழிக்கவல்ல ஓர் அரும் புதல்வனைப்பெற எண்ணினர். அந்த நினைவின் படி சிவபிரான் நெற்றியினின்று ஆறு தீப் பொறிகள் உண்டாயின. அப்பொறிகளை வாயுவும் அக்னியும் எடுத்துச் சென்று ஈசனது ஆணையின்படி கங்கையில் விட்டனர். கங்காதேவி அவற்றை 'சரவணம்' என்னும் பொய்கையில் சேர்த்தார்.

சரவணப் பொய்கையைச் அடைந்ததும் அந்த ஆறு தீப் பொறிகளும் ஆறு குழந்தைகளாக மாறின. உடனே திருமாலின் கட்டளையின்படி, 'கார்த்திகை' என்னும் நட்சத்திரத்துக்கு உரிய ஆறு பெண்களும் சரவணப் பொய்கைக்கு வந்து அங்குள்ள ஆறு குழந்தைகளையும் பாதுகாத்து வளர்க்கலாயினர்.

சில நாள் கழித்து சிவனும் உமையும் சரவணப்பொய்கைக்கு எழுந்தருளினர். உமை தாய்மையின் அன்புப் பெருக்குடன் அவ் இளங்குழவிகள் ஆறையும் ஒருங்கே தழுவி யெடுத்தனர். உடனே ஆறு குழந்தைகளது உடலும் ஒன்றாகிவிட்டது. சுப்பிரமணியன் என்னும் பெயர் பூண்ட அந்தக் குழந்தை ஆறுமுகமும் பன்னிரு

மரங்களும் கொண்டு, சிவன் பார்வதி ஆகிய இருவர் கடியிலும் தவழ்ந்து விளையாடினான்.



முருகன்

அன்னையும் பிதாவும் அழகிய குமாரனைக் கைலைக்கு அழைத்துச் சென்றனர். குமரன், தான் மயில் வாகனத்தின்மேல் ஏறி, மூஷிகரூட வாகனங்கொண்ட விநாயகருடன் விளையாடிக் களித்தான். பின்பு, உலகைவாட்டி வந்த எல்லா அசுரரையும் அழித்தான்; தக்க வயதிலே

தேவகுஞ்சரி வள்ளி என்னும் இரண்டு மனைவியரையும் மணந்து, குன்றுதோறும் கோயில்கொண்டு காட்சி தரலாயினன். இணையற்ற அழகன் ஆகலின் அவனை 'முருகன்' என்றும், உலகத்தை எல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டவனுதலால் ஸ்கந்தன் என்றும், பிரணவத்தைத் தன் தந்தைக்கே போதித்தபடியால் குருநாதன் என்றும் கூறலாயினர். இந்தப் பேரருள் மிக்க பெருமானை வழிபடும் மக்கள் 'ஸ்கந்த ஷஷ்டி' என்னும் நாளையும், கார்த்திகை நாளையும் கொண்டாடு கின்றனர். மேலும் தமிழ்த் தெய்வம் முருகனே என்பதும் நம் நாட்டாரின் கொள்கை.

முருகன்பேரில் அருணகிரியார் என்னும் அடியார் பக்திப் பெருக்கினுல் பல பாடல்கள் பாடியுள்ளனர்; அப் பாடல்கள் அடங்கிய நூலே திருப்புகழ் எனப்படும். புலவரான நக்கீரரும், பிற்காலப் புலவராக குமரகுரு பரரும், முருகனருளால் மேன்மையுற்றவர்கள். அவர்கள் பாடிய திருமுருகாற்றுப்படை, கந்தர் கலி வெண்பா என்பவை இன்னும் தமிழ் நாட்டில் பாராயண நூல்களாக விளங்குகின்றன.

## இராமர்

உலகில், சூரியனைப் போலவே சூரிய குலமும் இணையற்ற புகழ் வாய்ந்தது. அந்தக் குலத்தில் தோன்றிய,



இராமர்

பராக்கிரமமே உருவான ரகு, கருணையே வடிவமான சிபி, உண்மைக்கே உறைவிடமான அரிச்சந்திரன் ஆகிய இவர்களுக்கு இவர்களே தாம் இணை.

இந்த மரபில் தோன்றியவரே, அயோத்தியை ஆட்சி புரிந்த 'தசரதர்' என்னும் சக்கரவர்த்தி. அவர் செய்த நற்றவத்தால், திருமாலே அவர்க்குப் புதல்வராக வந்து உதித்தனர். அந்தப் புதல்வர்தாம் இராமர்.

தசரதருக்குக் கோசலை, சுமித்திரை, கைகேயி என்னும் மூன்று மனைவியர் இருந்தனர். அவர்களுள் கோசலைக்கு இராமனும், கைகேயிக்குப் பரதனும் சுமித்திரைக்கு லட்சுமணனும் சத்துருக்னனும் புதல்வர் களாகப் பிறந்தனர்.

இராமர் அரக்கப்பூண்டையே அழிப்பதற்காக அவனியில் அவதரித்தவர்; ஆதலால் அவர் இளம்பருவத்திலேயே கோசிகன் பின்னே சென்று, தாடகை என்னும் அரக்கியை வதம் செய்து விசுவாமித்திரரின் அரிய வேள்வியை நிறைவேற்றி வைத்தார். கல்லாய்க் கிடந்த அகலிகையைப் பழைய பெண்ணுருவாக்கி, அருள் புரிந்தார். பின்பு, மிதிலைக்குச் சென்று எவராலும் எடுக்கவும் இயலாமல் இருந்த சிவதனுசை எடுத்துஒடித்து, சீதையை மணந்து, அயோத்தி திரும்பினார். அப்போது எதிர்ப்பட்ட பரசுராமனை வென்று தமது வீரத்தை நிலை நாட்டினார்.

சில ஆண்டுகட்குப் பின் தந்தையின் சொல்லைக் காப்பதற்காகத் தவக்கோலம் பூண்டு லட்சுமணனுடனும், சீதையுடனும் வனம் புகுந்தார். வழியிலே வேடர் தலைவனான குகனுடன் தோழமை பூண்டு, மனம் ஒன்று பட்டார்க்கு இனவேற்றுமை இல்லை என்பதை நிரூபித்துக் காட்டினார். தன்னை நாடிக் காட்டிற்கு வந்த பரதர்க்கு நல்லுரை கூறித் தமது பாதுகைகளைக் கொடுத்தருளினார்; தண்டக வனத்தில் வாழ்ந்த சூர்ப்பணகை என்னும் அரக்கியின் தூண்டுகோலால், ராவணன் எனப் பெயரிய

இலங்கை வேந்தன் மாரீசன் என்பவனை மான் உருவத்துடன் ராமரிடம் அனுப்பி அவரைச் சீதையை விட்டுப் பிரியச் செய்தான். அந்தத் தருணத்தில் ராவணன் துறவி போல் வேடமணிந்து சீதையிடம் வந்து பிச்சை கேட்டான். சீதை வெளியே வந்ததும் அவளைத் தூக்கிச் சென்று இலங்கையில் 'அசோகம்' என்னும் வனத்தில் காவலில் வைத்தான்.

சீதையை இழந்த இராமர் மிகவும் வருந்திக் காடெல்லாம் அலைந்து திரிந்தார். அப்போது அவருக்கு 'அனுமான்' என்னும் வானர வீரனுடைய நட்பு கிடைத்தது. அனுமான் இராமருக்குத் தன் அரசனான 'சுக்ரீவன்' என்னும் வானரத் தலைவனின் தோழமையை உண்டாக்கி வைத்தான்.

சுக்ரீவனுக்கு 'வாலி' என்னும் தமையன் ஒருவன் இருந்தான். அவன் வீண் சந்தேகத்தின்பேரில் நிரபராதியான சுக்ரீவனைக் கொல்வதற்காகக் கண்ட கண்ட இடமெல்லாம் துரத்தி வந்தான். ஆனால் சுக்ரீவன் அனுமானின் மதியின் வலியால் ஒருவாறு மறைந்திருந்து தன் உயிரைக் காத்து வந்தான். இதனையறிந்த இராமர், வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குக் கிஷ்கிந்தையை முடிசூட்டினார்.

பின்பு சுக்ரீவனது வானரப்படை சீதையைத் தேடி உலகின் எல்லாத் திசைகளிலும் பாய்ந்து சென்றன. அவர்களுள் தெற்கு நோக்கிச் சென்ற அனுமான் கடலைக் கடந்துபோய் இலங்கையை யடைந்து அசோக வனத்தில் சீதையைக் கண்டான்; தான்கொண்டுவந்த இராமருடைய கணையாழியை சீதையிடம் அடையாளமாகக் கொடுத்துப் பதிலுக்கு ஜானகியின் 'சூடாமணி'யைப் பெற்றுக் கொண்டான். பின்னர், அனுமான் அங்கு உள்ள வனத்தை அழித்து ராவணனை நேரில் கண்டு, அவனுக்கு அறிவுரை கூறிச் சீதையை விடுமாறு பணித்தான்.

அதனால் ராவணன் வெகுண்டு அனுமானின் வாலிலே தீயிடவும், அந்தத் தீயாலேயே இலங்கையைச் சுட்டெரித்துச் சாம்பராக்கினான் அனுமான். பின்பு இராமரிடம் சென்று, தான் சீதையைக் கண்ட வரலாற்றினைத் தெரிவித்து, தேவியின் சூடாமணியை அவரிடம் கொடுத்து வணங்கினான்.

உடனே, சுக்ரீவனுடைய படைத்துணையோடு இராமர் இலங்கையின்மேல் படையெடுத்துச் சென்றார். குறுக்கே நின்ற கடலின் இடையே, ஒரு பாலத்தை அமைத்து குரங்குச் சேனையோடு இலங்கையை அடைந்து ராவணனுடன் போர் தொடங்கினார்.

இதற்குள் ராவணனின் தம்பியான விபீஷணன் என்னும் நீதிமான், தன் தமையனுக்குப் பல நீதிகளைப் புகன்று சீதையை உடனே சிறை நீக்கி ராமரிடம் சேர்ப்பிக்குமாறு வேண்டினான். இந்தப் போதனையின் விளைவால் ராவணன் அவனைத் தன் நகரினின்றும் வெளியே போகுமாறு கட்டளையிட்டான். உடனே விபீஷணன் 'அறம் வாழும் இடத்திலேயே உயிர் வாழ்தல் தகுதி' என்றெண்ணி, இராமரிடம் சென்று சரண் புகுந்தான்.

ராவணனுக்கும் ராகவனுக்கும் பெரும் போர் நடந்தது. அக்கிரமம் அழிந்தது என்னும்படி அரக்கரெல்லாம் மாய்ந்தொழிந்தனர். முடிவில் ராவணனும் இறந்துபட்டான். உடனே விபீஷணனுக்கு இலங்கையை முடிசூட்டி, சீதையுடனும் லட்சுமணனுடனும் அயோத்தி வந்து சேர்ந்தார். அங்கே அனுமான் திருவடி தாங்க, பரதன் வெண்கொற்றக் குடைபிடிக்க, லட்சுமணனும் சத்துருக்னனும்சுவரிவீச, சீதையுடன் இராமன் அரியாசனத்திலே வீற்றிருந்து, வசிட்டரால் முடி சூட்டப்

பெற்று, உலகை எல்லாம் ஒரு குடையின்கீழ் அரசாண்டு நீதி செலுத்தினுர்.

மூத்தோர் சொற்படி நடத்தல், பகைவரிடமும் அன்பு காட்டல், சொன்ன சொல் தவருமை, பொறுமையையே பூஷணமாகக் கொள்ளல், இருதாரம் கொள்ளாமை, என்பன போன்ற அரிய நற்குணங்களின் பெருமை இராமனது வரலாற்ருல் விளங்குகிறது. மேலும், 'ராம' என்னும் சொல்லே மிக்க மகிமை வாய்ந்தது. எட்டெழுத் தாகிய நாராயண மந்திரத்திலிருந்து 'ரா' என்னும் எழுத்தும், சிவ மந்திரமாகிய 'நமசிவாய'த்தினின்று 'ம' என்னும் எழுத்தும் சேர்ந்து 'ராம' என்று ஆயது என்பது தியாகராஜ சுவாமிகள் போன்ற மகான்களின் வாக்கினுல் தெரிகிறது.

இராமனது பெருமையை அனைவரும் உணர்ந்து, அவரைப்போல் நற்குணக் கடலாக விளங்கவேண்டு மென்பதற்காகவே ஆண்டுதோறும் அவரது ஜன்ம தினத்தை 'ஸ்ரீ ராம நவமி' என்ற திருவிழாவாகக் கொண்டாடுகிருர்கள்.

## கண்ணன்

துவாபர யுகத்தில் வட மதுரையிலே 'கம்ஸன்' எனப் பெயர் வாய்ந்த கொடிய அரசன் ஒருவன் இருந்தான்.




கண்ணன்

அவன் தவசிகளுக்கும் பக்தர்களுக்கும் அளவற்ற துன்பங்களைச் செய்து அவர்கள் புரியும் அறச் செயல்களை

யெல்லாம் பாழாக்கி வந்தான். அதனால் தேவரும் முனிவரும் திருமாலிடம் சென்று கம்ஸனுடைய கொடுமைகளையும் மற்றும் கம்ஸனுக்கு ஒப்பான பல தீயோர் புரிந்து வரும் இன்னல்களையும் கூறி முறையிட்டுத் தொழுதனர். திருமால் அவர்களுக்கு அபயம் அளித்து, தாம் விரைவிலேயே 'கிருஷ்ணன்' என்னும் பெயரைத் தாங்கி அவதரிக்கப் போவதாகவும், அப்போது அறத்துக்குப் பிழை இயற்றும் பாதகரை யெல்லாம் மாய்த்து உண்மையையும் தருமத்தை யும் நிலை நாட்டப் போவதாகவும் தெரிவித்து ஆறுதல் மொழிகள் கூறினார்.

இப்படி யிருக்க, கம்ஸன் தனது தங்கையான 'தேவகி' என்பவளை 'வசுதேவன்' என்பவருக்கு வெகு விமரிசையாகக் கலியாணம் செய்து வைத்தான். மேலும் தன் தங்கையையும் வசுதேவரையும் தேரில் வீற்றிருக்கச் செய்து தானே சாரதியாக இருந்து மிகவும் சிறப்புடன் ஊர்வலம் வந்து கொண்டிருந்தான். அச்சமயத்தில் வானி லிருந்து ஓர் அசரீரி கம்ஸனைக் கூவி யழைத்து, "ஏ மூடா! இவ்வளவு ஆடம்பரமாக நீ திருமணம் செய்து வைத்த இந்த மணப் பெண்ணின் வயிற்றில் தோன்றும் எட்டாவது பிள்ளை உன்னைக் கொல்லப்போகிறான்" என்றது.

இதைக் கேட்டதும் கம்ஸன், தன் தங்கையின் மீது அளவற்ற சினங்கொண்டு அவளை உடனே மாய்க்கக் கருதித் தன் வாளை உருவினான். அதைக்கண்ட வசுதேவன் கம்ஸனுடைய கைகளைப்பற்றிக் கொண்டு, கெஞ்சும் குரலில் "ஏ, கம்ஸா! இது என்ன அறிவீனம்? உன் பகை மைக்குப் பாத்திரமானவன் இவளுக்குப் பிறக்கும் எட்டாவது குழந்தையே யன்றி, இவள் அல்லவே! அந்தக் குழந்தை பிறந்ததும் அதனை, உன்னிடம் நானே எடுத்து

வருகிறேன்; அப்போது நீயே அதனைக் கொன்று விடு. அபலையான உன் தங்கையைக் கொல்லாதே'' என்று வேண்டினன்.

கம்ஸன் அதற்கு இசைந்தான் எனினும், உடனே தேவகியையும் வசுதேவனையும் சிறையிலிட்டுக் காவல் வைத்தனன். சிறைச்சாலையில் தேவகிக்கு ஏழு குழந்தைகள் தோன்றின. அவற்றையெல்லாம் கம்ஸன் தன் வாளுக்கு இரையாக்கி, எட்டாவது குழந்தை பிறக்கும் காலத்தை எதிர்நோக்கியிருந்தான். சிறைக் காவல்களையும் பலப்படுத்தி. குழந்தை பிறந்தவுடனேயே வந்து தெரிவிக்கும்படி காவலருக்குக் கட்டளையிட்டுக் காத்திருந்தான்.

ஆவணிமாதத்துத் தேய் பிறையில் எட்டாவது நாள் ரோகிணி நட்சத்திரத்துடன் கூடி நின்றது: அன்று நடு இரவிலே தேவகிக்கு ஓர் ஆண் மகவு பிறந்தது. ஆனால் அது அழவில்லை; தேவகி வசுதேவரை நோக்கி வாய் திறந்து பேசத் தொடங்கியது. அது சொல்லிற்று:

''நீங்கள் என்னுடைய தாய் தந்தையர்; நான் உலகத்துக்கெல்லாம் தாயும் தந்தையுமாக விளங்கும் திருமால். உங்கள் சிறையை நீக்குவதற்காகவும், உலகத்தின் துன்பச் சிறையை நீக்குவதற்காகவும், இப்போது உங்களுக்குப் புதல்வனாகத் தோன்றியுள்ளேன். கம்ஸனது சிறையும் காவலும் என்னை ஒன்றும் செய்யா. ஆதலின் நீங்கள் அஞ்சவேண்டாம்.

''மேலும், தந்தையே! உடனே நான் சொல்லுகிறபடி செய்யும்; ஆயர்பாடியில் யசோதை என்பாளுக்கு ஒரு பெண் மகவு இப்போதுதான் பிறந்துள்ளது. தாங்கள் என்னைக் கொண்டுபோய் அவளருகே கிடத்தி, அங்கிருக்கும் பெண் மகவை இங்கு எடுத்து வாருங்கள்.''

இம் மொழிகளைக் கேட்ட தேவகி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை; உடனே வசுதேவன் பச்சிளங் குழந்தையான திருமாலைக் கையிலேந்தி நிற்க, அவரது கை விலங்குகளும் சிறைச்சாலைக் கதவுகளின் பூட்டுக்களும் தாமாக வாய் திறந்து வழிவிட்டன. காவலரும் தம்மை மறந்து பேருறக்கத்தில் ஆழ்ந்து கிடந்தனர்.

வசுதேவன் குழந்தையைக் கொண்டுபோய் ஆயர் பாடியில் யசோதையின் அருகில் விட்டு, அங்கிருந்த பெண் மகவை எடுத்து வந்து பழையபடி சிறைச்சாலைக்குள் புகுந்தான். உடனே கதவுகள் தாமாக மூடிப் பூட்டுக்களைத் தாங்கின; விலகியிருந்த விலங்குகளும் முன்னிருந்த படியே வசுதேவனை வந்தடைந்தன.

ஆயர்பாடியில் புகுந்த ஆண் குழந்தை யசோதையைத் தூக்கத்தினின்றும் எழுப்ப அங்கே அழுதது; சிறைச் சாலைக்குள் புகுந்த பெண் மதலை காவலாளிகளை உறக்கத் தினின்றும் எழுப்ப இங்கே அழுதது.

ஆயர்பாடியில் யசோதை விழித்து நோக்கி, தனக்குப் பிறந்தது ஆண் குழந்தை யென்றே எண்ணி அக மகிழ்ந் தாள். சிறையில் கம்ஸன் வந்து பார்த்து, தேவகிக்குப் பிறந்துள்ளது பெண்ணே எனக் கருதிப் பயம் ஒழிந்தான். "ஆனாலும், அசரீரியின் வாக்குப் பலித்துவிட்டால் என்ன செய்வது? ஆதலால், பெண்ணே ஆயினும் இதனையும் மாய்ப்பேன்" என்று கூறி, கம்ஸன் அந்தப் பெண் குழந்தையையும் தூக்கிச் சென்றான்.

கம்ஸன் ஆகாயத்திலே அந்தக் குழந்தையை எறிந்து, அது மீண்டு விழும் இடத்திற்கு நேராக வாளை நீட்டினான். ஆனால் குழந்தை கீழ்நோக்கி வராமல் மேலேயே நின்று கம்ஸனை நோக்கிக் 'கொல்' என்று சிரித்தது. அது கம்ஸனைப் பார்த்து "ஏ மூடா! என்னைக் கொல்ல நினைத்த

கொடியவனே! உன்னைக் கொல்லப் பிறந்தவன் கோகுலத்தில் வளருகின்றான்; அவனே உன்னை அழிப்பான்" என்று கூறி வானிலே மறைந்தது.

என்ன செய்வான் கம்ஸன்? அச்சமும் கோபமும் ஒருங்கே தாங்கி, 'அந்நள்ளிரவிலே கோகுலத்தில் எவர்க்கேனும் ஆண் குழந்தை பிறந்துள்ளதா?' என்பதை அறிந்து வருமாறு வேவுகாரர்களை அனுப்பினான். அவர்கள் போய்வந்து, "ஆயர்குலத் தலைவரான நந்தகோபனின் மனைவி யசோதைக்கு ஒரு புதல்வன் பிறந்துள்ளான்; அவன் பெயர் 'கிருஷ்ணன்' என்று கூறினர்.

"ஓ! இவனே நமது பகைவன்; இவனைச் சூழ்ச்சியினால் கொல்விக்க வேண்டும்" என்று கம்ஸன் தீர்மானித்து, பல அரக்கர்களையும் கொடியர்களையும் அந்தக் குழந்தையைக் கொல்லுமாறு அனுப்பி வைத்தான். ஆனால் கொல்லப்போனவர் மாண்டாரேயன்றி, குழந்தையின் உயிருக்கு எவ்விதத் தீங்கும் நேரவில்லை. அதனால் கம்ஸன் மனச் சோர்வுற்றுக் கலங்கினான்; முடிவில், கண்ணனோடு நட்புப் பாராட்டி வஞ்சித்துக் கொல்வதெனத் தீர்மானித்தான்.

ஒரு நாள் கம்ஸன், இளம்பிள்ளையான கிருஷ்ணனைத் தன் கொலுச்சபைக்கு அழைத்தான். அங்ஙனம் அவன் வரும்போது அவனைக் கொல்ல, குவலயாபீடம் என்ற யானையையும், சாணூரன், முஷ்டிகன் என்ற இரு மல்லர்களையும் நிறுத்தியிருந்தான். ஆனால், கண்ணனும் அவனோடு வந்த பலராமனும் யானையையும் மல்லர்களையும் மாய்த்து கம்ஸன் வீற்றிருக்கும் கொலுச்சபையையடைந்தனர்.

அப்போது கம்ஸன் கிருஷ்ணனைப் பலவாறு இழித்துக்கூறி, அவனைக் கொல்ல யத்தனித்தான். கிருஷ்ணன் கம்ஸனை நோக்கி, "ஏ, கம்ஸ! நீ யாரை மாய்த்தும், நல்லா

ரைக் காத்தும் அறத்தை உலகில் நிலை நாட்டுவதே மன்னன் கடமை; அதனின்றும் தவறிக் கொடுங்கோ லிழைக்கும் கொடியனுன உன்னைக் கொல்வதற்காகவே யான் இங்கு வந்துள்ளேன்" என்றுரைத்து, கம்ஸனையும் அவனுடைய துணைவரையும் அழித்து, வசுதேவ தேவகி யரைச் சிறையினின்றும் மீட்டு அனைவருக்கும் அருள் புரிந்தான்.

கருணையே வடிவமாக அவதரித்த கண்ணன் தனது குழந்தைப பருவத்தில் தீராத விளையாட்டுப் பிள்ளையாக விளங்கினுன். அவன் யசோதையின் இல்லத்திலே வளர்ந்து வந்த நாளில் இடைப்பிள்ளைகளுடன் சேர்ந்து, பசுக்களை யெல்லாம் ஓட்டிச் சென்று, பசும் புற்றரையிலே மேயவிட்டு, தான் யமுனை நதிக்கரையிலே குழலூதி நிற்பான்.

குழலோசை கேட்ட பசுக்களும், மான்களும், மயில் களும், கோகுலப் பெண்டிருங்கூட அவ்வோசையின் வழியே கண்ணனிடம் வந்து, அவனைச் சூழ்ந்து அவன் அருள் அழகிலே ஈடுபட்டுத் தம்மை மறந்து நிற்பர்.

சில சமயங்களில் கிருஷ்ணன், கோபியர் இல்லங்களில் புகுந்து, அவர்கள் உறியிலுள்ள பால், தயிர், வெண் ணெய் முதலியவற்றைத் திருடி எடுத்துத் தன் தோழர்க் குக் கொடுத்துத் தானும் உண்டு களித்திருப்பான். அப் போது அந்த மனைக்கு உரியவர் வந்து கேட்டாலோ, "இது என் இல்லம் என்று எண்ணி வந்துவிட்டேன்; மன்னித்தருள்க" என்று விளையாட்டாகக் கூறுவான். உடனே அந்தப் பெண்டிர் சிரித்தும் சினந்தும் சென்று யசோதையிடம் புகார் செய்வர். யசோதை ஒருவேளை கண்ணனைக் கடிந்தும், மற்ருெரு சமயம் கோபியரைக் கடிந்தும் பேசி, தன்னுல் இயன்ற வரையில் கண்ணனை வெளியே விடாமல் காவல் புரிவள்.

இவ்வாறு நடந்து வருகையில் ஒரு நாள், அவள் மிகவும் சினந்து கண்ணனை ஓர் உரலுடன் சேர்த்துக் கட்டி வைத்தாள். கண்ணன் மெல்ல மெல்ல உரலையும் இழுத்துக்கொண்டு நகர்ந்து போய் அங்கிருந்த இரண்டு மரங்களின் நடுவில் புகுந்து சென்றான். கட்டப்பட்டுப் பின் தொடர்ந்த உரல் அந்த இரண்டு மரங்களின் இடையில் சிக்கிக்கொண்டது. அப்போது கண்ணன் அதனை வலித்திழுக்க, அம்மரங்கள் முறிந்தன. உடனே அந்த மரங்களினின்றும் இரண்டு தேவ புருஷர்கள் தோன்றினர். அவர்கள் கண்ணனை நோக்கி, "நாங்கள் நளகூபரன், மணிக்கிரீவன் என்னும் பெயரை உடையவர்கள். சாபத்தால் மரங்களானோம்; தங்களால் சாபம் தீர்ந்து சுய உருப்பெற்றோம்" என்று கூறிக் கிருஷ்ணனை வணங்கிச் சென்றனர்.

மற்றொரு நாள் கண்ணன் மண்ணிலே விளையாடிக் கொண்டிருக்கும் போது மண்ணை அள்ளியுண்டான். இதையறிந்த யசோதை அவனை அதட்டி வாயைத் திறக்கச் சொன்னாள். கண்ணன் வாயைத் திறந்ததும் யசோதை அதில் மண்ணையா கண்டாள்? இல்லை; அண்ட சராசரம் அனைத்தும் இயங்குவதைக் கண்டாள். தன்னையும் கண்ணனையும்கூட அங்கே கண்டாள் யசோதை. அதனால் அறிவு கலங்கி வியப்புற்றுப் பின் இறைவன் மாயையால் தெளிவு பெற்றாள்.

பிறகு கிருஷ்ணன் தக்க பருவத்தில் ருக்மிணி, ராதா, ஸத்யபாமா, காளிந்தி, ஜாம்பவதி முதலிய பல பெண்களை மணம் புரிந்தான். மற்றும் பல்லாயிர கோபியரையும் தன் அடியார்களெனக் கொண்டு, அவ்வெல்லோருக்கும் பேரின்ப நிலையின் பரம ரகசியங்களான தத்துவங்களைத் தனது அற்புதமான லீலைகளால் உணர்த்தி உலகுக்கு உய்வகை காட்டினான்.

# கலைமகள்

கலைகளனைத்திற்கும் தலைவியாகப் போற்றப்படும் தெய்வமே கலைமகளாவள். கலைமகளே பிரம்ம பத்தினி என்று மேலே கூறப்பட்டது. கலை என்பதனுள் உலகிலுள்ள எல்லாத் தொழில்களும், கல்வியும், இசை முதலியனவும் அடங்கும். இவையனைத்திற்கும் இறைவியாக நின்று சரசுவதி தேவி உலகிற்கு அருள் புரிகிறுள்.



கலைமகள்

வெள்ளைக் கலை உடுத்து, வெண்டாமரையில் வீற்றிருப்பாளென்றும், புத்தகமும் படிகமாலையும் இரு கைகளில் ஏந்தி ஏனைய இரு கரங்களில் வீணை ஏந்தியிருப்பாளென்றும் நூல்கள் வாணிதேவியை வர்ணிக்கின்றன.

எண்ணும் எழுத்தும் கலைமகளது வடிவமே. உலகில் எழுந்துள்ள, எழுகின்ற, எழும் நூல்கள் அனைத்தும் அவளது உருவமே. இதனை மனத்தில் எண்ணியே கலைமக

ளைத் துதித்துப் பூஜிக்க விரும்புங்காலத்தில் புத்தகங்களை அடுக்கி அவற்றைப் போற்றித் தொழுகிறார்கள். பொதுவாக ஒருவர் உண்டு வாழ உதவும் தொழிலுக்குதவும் ஆயுதங்களனைத்தும் கலைமகளது வடிவமே என்று கருதி நம் நாட்டினர் தத்தம் ஆயுதங்களைக் கலைமகளுக்குரிய நாளாகிய ஸரஸ்வதி பூஜையன்று மலரிட்டு அர்ச்சிக்கின்றனர்.

கலைமகள் வாழிடம் கற்றோரது நாவே. அறிவிற் சிறந்து, அரிய விஷயங்களை எடுத்துரைக்கும் பெரியோர்களது நாவிலே சரசுவதி தேவி நர்த்தனம் செய்கிறாள் என்று கூறுகின்றனர். ஆதலின் கல்வியே கலைவாணியினது வடிவம் என்பது நம்மனோர் துணிபு. அறிவுத் தெய்வமே சரசுவதி தேவி.

காளிதாஸன், கம்பன், காளமேகம் போன்ற புகழ் பெற்ற புலவர்கள் கலைமகளை நேரிற் கண்டு களித்தவர்கள் என்றும் அவளது அருளால் மிக்க மேன்மை எய்தினர் என்றும் கூறும் பல வரலாறுகள் உண்டு.

## மஹா லக்ஷ்மி

ஒரு பாயின்மேல் பச்சிளங் குழந்தையொன்று படுத்திருக்கிறது; கால்களையும் கைகளையும் ஆட்டியும், சிரித்தும் விளையாடிய வண்ணமிருந்த அதனைப் பசிப்பிணி எங்கிருந்தோ வந்து பற்றிக்கொள்ளுகிறது; உடனே குழந்தை வீறிட்டு அழத் தொடங்குகிறது.

குழந்தையின் தந்தை, தமையன், மற்றும் உள்ள பல உறவினர் அச்சிசுவைச் சமாதானப்படுத்த பலவாறு முயல்கின்றனர். ஆனால் அவர்கள் முயற்சியால் குழந்

தையின் தவிப்பும் அழுகையும் அதிகமாகின்றனவேயன்றி அடங்குகிறதில்லை.

குழந்தையின் அழுகுரல், பக்கத்து வீட்டுப் பெண் மணியோடு பேசிக் கொண்டிருந்த தாயின் காதில் விழுகிறது; உடனே அவள் ஓடோடியும் வருகிருள்; குழந்தையை வாரி எடுத்து மார்பகத்தே அணைத்துக் கொள்ளுகிருள். தாயமுதம் குழந்தையின் கொடிய தாபத்தைத் தணித்து விடுகிறது; 'தாய் அன்பு' என்னும் இணையற்ற தனி இன்பப் பெருக்கிலே திளைத்துக் களித்துச் சிரிக்கிறது அச்சின்னக் குழந்தை!

அந்தத் தாயைவிட எத்தனையோ மடங்கு பேரன்பு மிகுந்தவளான ஓர் அன்னை—உலகத்திலுள்ள எல்லா உயிர்களுக்கும் வாய்த்திருக்கிருர்; அவர் தாம் மகா லக்ஷ்மி. திருமகள், மலர்மகள் முதலியன அவரைக் குறிக்கும் பெயர்களேயாம்.

சின்னக் குழந்தையின் தாயார், தன் மகவு அழக்கூடும் என்னும் நினைப்பு இல்லாமல் அண்டை வீட்டுக்குப்போய் இருப்பதைப்போல—உயிர்களுக்கெல்லாம் மாதாவான மகா லக்ஷ்மியும் சில தருணங்களில் தம் கருணை நோக்கைச் செலுத்தாமல் எங்கேனும் போய் விடுவதுண்டு. அந்தச் சமயங்களில்தாம் பசியும், பஞ்சமும், பரிதவிப்பும் ஓங்கி வளர்ந்து உயிர்களை மாய்க்கின்றன. அவ்வில் சின்னக்குழவி கதறி அழுததைப்போல, வருந்தும் மக்களும உருகித் துதித்தால், திருமகள் உடனே ஓடிவந்து கருணையுடன் அருள்புரிவார். இதில் சற்றேனும் ஐயமில்லை.

"லக்ஷ்மி என்ருல் செல்வம்; அந்தச் செல்வம் 'செல் வோம்' என்று ஓரிடம் விட்டு மற்ருேரிடம் போய்க் கொண்டே இருக்கும்; இது, செல்வமாகிய திருமகளின் சுபாவம்"—என்றெல்லாம் சிலர் சொல்வதுண்டு. ஆனல்

திருமகள் யார்? அவர் ஓரிடம் விட்டு மற்ருேரிடம் தாவும்படி அவருக்கு என்ன நேரிடுகிறது? என்பதையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

திருமகள் அல்லது லக்ஷ்மி என்ருல், உலகத்தில் வாழ்க்கையின் லட்சியமாக உள்ள பணத்தையே குறிக்கும் என்பர் சிலர். எல்லா நலன்களுக்கும் காரணமாகவுள்ள—இணையில்லா திருப்தியுடன் கூடிய—மகிழ்ச்சியே 'திருமகளாம்' என்று கொள்வது மிகவும் பொருந்தும். துயரத்தைத் துடைக்கும் ஆனந்தமே திருமகள். அந்தத் திருமகள், தாம் வசிக்கும் இடத்தில் எப்போதாவது அதர்மம் மேலோங்குமாயின், அநீதி தோன்றுமாயின், கோபம் குடி புகுமாயின், பொருமை தலை காட்டுமாயின், வஞ்சனை நிகழுமாயின், உண்மை குறையுமாயின், இறுமாப்பு உதிக்குமாயின், அந்த நொடியிலேயே தமது அருளையும் அவ்விடத்தில் குறைத்துக் கொண்டு, வளங்களுக்கெல்லாம் காரணமான தமது பார்வையை வேறு இடத்தில் பொழிவதற்கு ஏற்ற செயல்களை வகுக்கிருர்; நாளடைவில், புன்மை மிகுந்த முற்கூறிய இடத்தை நீங்கி மற்ருேரிடத்திற்கே போய்விடுகிருர்.

மேலே சொன்ன தீமைகளில் ஒன்றேனும் நிகழாமல், உண்மை, ஒழுக்கம், நீதி, நேர்மை, தருமம், வண்மை, அஹிம்ஸை, இவை போல்வன கொஞ்சமேனும் கோணமல் குன்ருமல் நிலை நிற்குமாயின், அவ் விடங்களை விட்டு அருளுக்கே இருப்பிடமாகிய திருமகளும் ஒரு நாளும் பிரிந்து போகார். அங்கே மகிழ்ச்சிக்கும் உயர்வுக்கும் எந்நாளும் குறைவு நேராது.

மேற்கூறியவற்றிற்கு உதாரணமாக ஒரு கதை உண்டு.—தேவேந்திரன் திருமகளின் அருளால் மகிழ்ச்சியிலே திளைத்திருந்தான்; ஒரு சமயம் கருவமும், ஓரளவு கோபமும் அவனிடம் குடி புகுந்தன. ஒருநாள் 'துர்வாஸர்',

என்னும் முனிவர் மகிமை நிறைந்த மலர்மாலை ஒன்றினை பவனி வந்துகொண்டிருந்த தேவராஜனுக்கு அருளினர். அப்போது யானைமீதிருந்த இந்திரன் அந்த மாலையை அசட்டையுடனும் அகம்பாவத்துடனும் வாங்கினன்; அதனைத்தான் அணியவில்லை; யானையின் மத்தகத்தின் மீது வைத்தான். யானை அந்த மாலையைத் தன் துதிக்கையால் எடுத்துக் கீழே எறிந்து, தன் காலாலும் அதைத் தேய்த்துப் பாழாக்கியது.

இதைக் கண்ட முனிவர்க்குச் சினம் பொங்கியது. அவர் இந்திரனை நோக்கி "ஏ, புலந்திர! தீய குணங்கள் வாழும் இடத்தில் திருமகள் வாழ்தல் அரிது; ஆதலால் உன் மகிழ்வு அழியக்கடவது" என்று சபித்துச்சென்றனர்.

உடனே, திருமகளின் திருநோக்கு தேவர் கோனை விட்டகன்றது. துன்பம், துயரம், பகைமை, போர் முதலியன மூண்டன. இந்திரன், பதவியை இழந்தான்; பட்டினத்தை இழந்தான்; மனைவியை இழந்தான்; மகிழ் நலங்கள் அனைத்தையும் அறவே இழந்தான். பகைவர்க்குப் பயந்து, ஒரு தாமரைத் தண்டினுள் ஒளிந்துகொண்டு, தாயான திருமகளை நோக்கித் தவங்கிடந்தான்.

அவன் நிலைக்கு இரங்கி, கருணையே வடிவமான மகாலக்ஷ்மி பாற்கடலிலே வந்து தோன்றினள்; இந்திரன் அவரைத் துதித்து மீண்டும் அந்தத் திருமகளின் அருளைப் பெற்றுப் பழையபடி அரசும் ஆனந்தமும் அடைந்தான். ஆதலால், தீயன குடி புகுந்த இடத்தில் திருமகள் குடி புகாள் என்னும் உண்மை இதனால் விளங்குகிறது அல்லவா?

பாற்கடலிலே திருமகள் அவதரித்தனர்என்று மேலே கூறினேம். அவரது கணவரான திருமால் தமது மனைவி பாற்கடலில் அவதாரம் செய்ததைக் கண்டு மகிழ்ச்சி

யுற்றார்; மேலும் அவருக்கு மற்றொரு எண்ணமும் உதித்தது. பூலோகத்தில் பெண்ணுலகுக்கு உயர்வு அளிக்கும்படி செய்வதற்குத் தாமே ஒரு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். உடனே அவர் திருமகளைப் பாற்கடலினின்றும் அன்புடன் வரவேற்றுத் தம் திருமார்பிலே தரித்துக் கொண்டு ஒளிரச் செய்தார்.

இழி குணங்கள், பொறாமை பூசல்கள், கோப தாபங்கள், சண்டை சச்சரவுகள் முதலியன உள்ள இடங்களைத் திருமகள் திரும்பியும் பார்க்கமாட்டாள் என்று முன்னே கூறப்பட்டது. மேலும் இழுக்கு நிறைந்த உள்ளம், அழுக்கு நிறைந்த ஆடை, குப்பை நிறைந்த வீடு, கோதிப் பின்னாத முகூந்தல் தலியனவும் திருமகளின் வெறுப்புக்குப் பாத்திரமானவைகளேயாம்.

ஆகையால், குடிசையாயினும் மெழுகிக் கோலமிட்டு, கந்தை ஆயினும் கசக்கிக் கட்டி, கூழே ஆயினும் குளித்தே குடித்து, மாலைதோறும் தவறாமல் மனையிலே மணிவிளக்கு ஏற்றிவைத்து, மலர் தூவித் துதி புரிவர்க்குத் தப்பாமல் நாளும் நாளும் மகிழ்வு பொங்கும்.

## பார்வதி தேவி

வீரம், சக்தி ஆகியவற்றுக்கு இறைவி பார்வதிதேவி. உமை, பவானி, துர்க்கை, சக்தி காளி முதலிய பெயர்கள் பார்வதியைக் குறிப்பனவே. ஹிமவானின் புதல்வியார் அவர் என்று கூறப்படுகிறார். கடுந்தவம் இயற்றி, கயிலை நாதனைக் கணவனாகப் பெற்றார் என்று புராணம் கூறுகிறது.

வீரத்திற்குரியவர் துர்க்கை தான் என்பதற்குப் பல சான்றுகள் உள. எவராலும் வெல்லமுடியாத மஹிடாசுரன், சாமுண்டாசுரன், பண்டாசுரன் போன்ற கொடியோர்களைத் துர்க்காதேவியே எதிர்த்து நின்று, கடும்போர் புரிந்து, அவர்களை மாய்த்து அனைத்துயிர்க்கும் இன்ப வாழ்வை அளித்தார் என்று நூல்கள் கூறுகின்றன. துர்க்கையின் உருவம் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் பயங்கரமாகவே வருணிக்கப்பட்டுள்ளது. ஆயிரங் கைகளும் கண்களும் வாய்ந்த தெய்வம் துர்க்கை என்பர். கோரைப்பற்களும், இரத்தம் சிந்தும் தலையை ஏந்திய கையும், தீஜிறத்தொடு பிதுங்கி நிற்கும் விழிகளும் காண்போர்க்கு அச்சத்தை விளைப்பனவாகும். இவ்வித கோரவடிவினளாகப் பார்க்களங்களில் ஒரு புறம் காட்சியளிப்பார். பசுமை நிறமும், ரதியையும் வெட்கமடையச் செய்யும் சௌந்தரியமும் வாய்ந்த பார்வதிதேவி என்று மற்றொருபுறம் கவிகளால் போற்றப் படுகிறார். ஓங்காரத்தின் உட்பொருள் உமாதேவியே என்றும் கூறுவர்.

## மதத்தைக் காத்த நம் முன்னோர்கள்

மேலே கூறப்பட்ட தெய்வங்களை வழிபட்டுக் கொண்டே பல்லாயிர ஆண்டுகளாக பெருமையோடு நிலைத்திருக்கும் இந்துமத விருக்ஷத்திற்கு அவ்வப்போது சிறிது தளர்ச்சி நேர்ந்த காலத்தில் பல பெரியோர்கள் தோன்றி, உரம் அளித்து, பிரசாரமாகிய நீரை வார்த்துப் போற்றினர். அதனால் அந்தமரம் வாட்டம் நீங்கிமீண்டும் பசுமையுற்றுத் தழைத்தது. அங்ஙனம் தழைக்கச் செய்த பல பெரியோர்களுள் சங்கரர், ராமானுஜர், மத்வர்

போன்ற பேரறிஞர்களும் ஆழ்வார்களும், நாயன்மார்களும் இன்னும் இவர் போன்ற பலரும் சிறப்பாகப் போற்றற்குரியர்; ஆதலின் அவர்களைப் பற்றிச் சிறிது கவனிப்போம்.

## ஸ்ரீ சங்கராசாரியர்

சங்கராசாரியர் அருளிய மதம் 'அத்வைதம்' எனப்படும். அவர் 'காலடி' என்னும் ஊரில் பிறந்து, சிறு வயதிலேயே கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்று, இறைவனின் திருவுள்ளப்படி இளம்வயதிலேயே துறவு பூண்டார். பின்பு, நாடெங்கும் சென்று, தமது மதத்தைப் பரப்பி, மக்களை நல்வழிப் படுத்தினர்.

## ஸ்ரீ இராமாநுஜர்

இவர், சென்னைக்கு வெகு அருகிலேயுள்ள ஸ்ரீ பெரும்பூதூரில் வாழ்ந்தவர். இவருடைய ஆசிரியர் ஒரு சிறந்த மந்திரத்தை இவருக்கு அருளி, அந்த இரகசியமான மந்திரத்தை வேறெவருக்கும் தெரிவிக்கக் கூடாதெனவும் கட்டளையிட்டிருந்தார். ஆனல் இராமாநுஜரின் உள்ளத்தில் அம்மந்திரத்தைப் படித்தவர்முதல் பாமரர் வரையில் எல்லோருக்கும் உபதேசித்து அனைவரையும் உய்விக்க வேண்டும் என்னும் கருணை சுரந்தது. உடனே எல்லோரையும் வலிந்தழைத்து அவர் தாம் கற்றுணர்ந்த மந்திரத்தையும், அதன் பயனையும் கூறியருளினர். மேலும், பாரத கண்டத்தின் எல்லாப் பாகங்களிலும் தமது கொள்கையைப் பரப்பி விருத்தாப்பிய வயதில் இறைவனடி சேர்ந்தார். இவர் அருளிய மதத்துக்கு விசிஷ்டாத்வைதம் என்று பெயர்.



ஸ்ரீ இராமாநுஜர்

# ஸ்ரீ மத்வாசாரியர்

தென் கன்னடத்தைச் சேர்ந்த உடுப்பியின் அருகில், கடற்கரையிலே ஒரு நாள் ஓர் இளந்துறவி உட்கார்ந்திருந்தார். அப்போது அவர் நடுக்கடலிலே புயலில் சிக்கித் தவிக்கும் ஒரு கப்பலையும், அது மூழ்கிவிடும் என்று அஞ்சிக்கரையிலே தவிக்கும் அதன் எஜமானனையும் கண்ணுற்றார். உடனே அவர் அக்கப்பல் வியாபாரியை நோக்கி "ஐயா! உமது கப்பலை நாம் கரை சேர்ப்போம். ஆயின், நீர் அதிலுள்ள பொருள்களுள் நாம் விரும்பும் ஒன்றைக் கொடுக்க வேண்டும்" என்றனர்.

வியாபாரி மகிழ்ச்சியுற்று அதற்குஒப்புக்கொள்ளவே துறவி தம் காஷாய வஸ்திரத்தை வீசி அக்கப்பலை அருகில் வருமாறு அழைத்தார். உடனே வியாபாரி வியக்கும் வண்ணம் அந்தக் கப்பல் கடலையும் புயலையும் கடந்து கரைவந்து சேர்ந்தது.

வியாபாரி கப்பலிலுள்ள பொன்னையும் பொருளையும் அத்துறவிக்கு வாரி வழங்கினான் ஆனால் அவரோ அக்கப்பலிலிருந்த சில மண் கட்டிகளை மட்டுமே விரும்பி ஏற்றார். அந்தக் கட்டிகளுள் ஒன்றில் அழகான கிருஷ்ண விக்ரகம் ஒன்று இருந்தது. அவர் அதனை உடுப்பியில் பிரதிஷ்டை செய்து வைத்து - தமது மதமான 'துவைதத்'தையும் எங்கும் நிலைநாட்டினார். அவர் தாம் ஸ்ரீமத்வாசாரியர்.

## ஆழ்வார்கள்

திருமாலையே தம் தெய்வமெனக் கொண்டு போற்றி, துதிபாடி, அவரது அருளைப் பெற்றுப் பல அற்புதங்களை



இயற்றி, அணையவிருந்த மக்களின் அறிவுச்சுடரை ஆழ்வார்கள் கொளுத்திவிட்டனர். திருமாலின் மங்களகுணங்களில்

முழுகி மிகவும் ஈடுபட்டுப் போற்றி அவற்றில் ஆழ்ந்து கிடந்தனராதலின் இவர்கள் ஆழ்வார்கள் எனப் பெயர் பெற்றனர். இவர் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசை யாழ்வார், திருமங்கையாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், திருத்தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், நம்மாழ்வார் எனப் பன்னிருவராவர். இவர்கள் அவ்வப்போது திருமால்மீதும் அவரது அவதாரங்கள்மீதும் பக்திப் பெருக்கினால் மனங்கனிந்து பாடிய பாடல்கள் "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

## நாயன்மார்கள்

சிவபெருமானையே தம் தெய்வமெனக் கொண்டு அவரது பக்தியில் ஈடுபட்டுப் பலவாறு துதிபாடிப் போற்றிய பெரியோர்கள் 'நாயன்மார்' எனப்பட்டனர். இறைவனருளால் அவர்கள் அவ்வப்பொழுது நிகழ்த்திய பல விந்தைச் செயல்கள் மக்களுக்கு இறைவன் நினைவை யூட்டி அவர்களை நல்வழிப் படுத்தின. அந்த நாயன்மார்கள் அறுபத்துமூவராவர். அவர்களுள் திருஞான சம்பந்த நாயனார், திருநாவுக்கரசநாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் அனைவரினும் சிறப்பாகப் போற்றப் படுகின்றனர்.

இவர்களையன்றி மாணிக்கவாசகசுவாமிகள் என்பாரும் சிவத்தொண்டு செய்து மக்களுள்ளத்தைப் பண்படுத்தினர்.

மேலே கூறப்பட்ட மூவர்பாடிய இனிய பாடல்கள் "தேவாரம்" எனவும் மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள்



மாணிக்கவாசகர்

"திருவாசகம்" எனவும் இன்றும் தமிழ் நாட்டில் நிலவு கின்றன.

இங்ஙனம் ஆழ்வார்களும் நாயன்மார்களும் தனித் தனியே நின்று ஆஸ்திக மதத்தை பரவச் செய்தனர். அவர்கள் இன்றும் விஷ்ணுவாலயங்களிலும் சிவன் கோயில்களிலும் நின்று மக்களின் துதியை ஏற்று அருள் புரிகின்றனர்.

தமிழ் நாட்டில் இவர்களையன்றிப் பல சேர, சோழ பாண்டிய பல்லவ மன்னர்களும் இந்தத் தெய்வத் திரு பணியைச் செய்து அழியாப் புகழ் பெற்றுள்ளனர்.

வட நாட்டிலும் இவ்வாறே துகாராம், கபீர்தாசர் நாமதேவர், ஜயதேவர், துளசிதாசர், ஞானதேவர், மீராபாய், கிருஷ்ணசைதன்யர் போன்ற மகான்கள் தோன்றி மக்களை நல்வழிப் படுத்திச் சென்றனர்.

அன்று முதல் இன்று வரை அறத்தை நிலைநாட்டத் தோன்றிய ஆன்றோர் பலராவர். கண்ணன் கீதையில் 'அறத்திற்கு அழிவு நேரும்போதெல்லாம் நானே தோன்றி அறத்தை அழியாமற் காத்து நிலைநிறுத்துவேன்' என்று கூறியுள்ளார். அது பொய்யான வாசகமன்று என்பதை, சரித்திரத்தைப் புரட்டிப் பார்ப்பவர்கள் தெளிவாக உணர்வர். ஆதலின் உலகம் உள்ளவரை அறத்திற்கும், அறத்தையே போதிக்கும் மதத்திற்கும் எக்காலத்திலும் அழிவு நேராது என்பது திண்ணம்.

# ஸொரர்ஸ்டிரிய மதம்

பார்ஸி மதமே ஸொராஸ்டிரிய மதம் எனப்படும். ஸொராஸ்டர் என்னும் மகானால் நிறுவப்பட்ட மதமாதலின் அதற்கு அப்பெயர் ஏற்பட்டது. ஸொராஸ்டர் தம் கொள்கைகளையும், அவற்றை அனுசரிக்கும் முறைகளையும் கூறியுள்ள பொன் மொழிகள் 'காதா' எனப்படும்.

ஸொராஸ்டர், தெய்வத்தை 'ஆஹுராமஜ்டா' என விளிக்கின்றார்; இயற்கைச் சக்திகள் அனைத்தையும் படைத்தும், அவற்றை அடக்கி ஆண்டும் இயக்குபவர் ஆஹுராவே என்பது அவர் கொள்கை. தீயின் ஒளியே தெய்வத்தின் அறிகுறியென்றும், அதனையே வழிபட்டு வணங்கவேண்டுமென்றும் அவர் கூறியுள்ளார்.

'எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும்; சிறப்பாக உழவுத் தொழிலுக்குதவும் பிராணிகளிடத்தில் மிகவும் அன்பு காட்டிப் போற்ற வேண்டும். இச்செயலே ஆஹுராரிடம் நம்மை அடை விக்கும்' என்பது அவரது உயரிய உபதேசம்.

உலகில் இன்னல்களும் துயரமும் நிறைந்திருப்பது இயற்கை என்றும், அவற்றை வென்று விலக்குதல் மக்களால் இயலும் என்றும், அவர் போதித்துள்ளார்.

"சுதந்திர நிலைவே மனிதனுக்கு வேண்டும்; மக்களே தத்தம் செயல்களுக்குப் பொறுப்பாளிகள்; மனிதனது தன்னம்பிக்கையே அவனுடைய பாக்கியத்தை நிர்ணயிக் கும். கொடியரைக் கொடுங்குணத்தாலேயே வெல்ல வேண்டும். எந்தச் செயலும் இறுதியில் நன்மையையே விளைக்கும்; மக்கள் மெய் மொழி மனம் இம்மூன்றையும்

மாசுபடியாமல் தூய்மையால் காக்கவேண்டும். தீயின் இன்ளொளியைப் போற்றி ஆஹுரரைத் துதிக்க வேண்டும். இவையே மாந்தர் கைக்கொள்ள வேண்டியவையாம்" என்பவை போன்றன அவரது முக்கியக்கொள்கைகள்.

பாரஸீக தேசத்திலே தோன்றி வளர்ந்த இந்த ஸொராஸ்டிர மதம், உலகிலுள்ள ஏனைய மதங்கள் அனைத்திலும் மிகவும் பழமையானது என்பது அம்மதத்தினர் நம்பிக்கை. ஸொராஸ்டர் பிறந்த பொழுதே குழந்தைக்குரிய அழுமியல்பு இன்றிச் சிரித்துக்கொண்டிருந்தாரென்றும் ஆதலின் அவர்க்கு, 'சிரிக்கும் தேவன்' என்னும் பெயர் உண்டாயிற்று எனவும் அவர்கள் புகழ்கின்றனர்.

ஸொராஸ்டர், பாரஸீகத்தில் மட்டுமேயன்றி, இந்தியா சீனா முதலிய வேற்று நாடுகளுக்கும் சென்று தமது மதத்தைப் பரவச்செய்தார். அவர் தம் எழுபத்தேழாவது வயதில் பூத வாழ்வை நீத்தார். ஸொராஸ்டிரிய மதத்தினர் இன்று உலகின் பலபாகங்களிலும் வாழ்கின்றனர்.

# ஜைன மதம்

பாரதநாட்டில் பரவியுள்ள மதங்களுள் ஜைனமத மும் சிறந்ததாகும். ஜினதேவர் என்னும் மகானுல் நிறுவப்பட்ட மதமாதலின் அப்பெயர் பெற்றது. நேர்மை யான நம்பிக்கை, நேர்மையான அறிவு, நேர்மையான ஒழுக்கம் என்ற மும்மணிகளே மனிதனை நிர்வாண மெனப்படும் மோட்ச நிலையை அடைவிக்கும் என்பது ஜைன மதத்தின் சித்தாந்தமாகும். இந்த முக்குணங்களுக் கும் மாருன கொள்கைகளே மனிதனைப் பிணித்துத் தீய நெறியிற் செலுத்தித் துன்புறுத்துகின்றன என்பது இம்மதத்தின் திடமான நம்பிக்கை.

இரக்கம் என்பதையே அடிப்படையாகக் கொண்டு எல்லாத் தருமங்களும் இதில் வகுக்கப்பட்டுள்ளன. ஆசை யும், துவேஷமும் எல்லாத் துயரங்களுக்கும் காரணமாகின் றன என்று கூறப்பட்டுள்ளது.

ஜைனமதாசாரியர்கள் தீர்த்தங்கரர் என்று போற்றப் பட்டுள்ளனர். அவர்களே அந்த மதத்தில் தெய்வங் ளாவர்.

பார்ச்சுவநாதர் என்பவர் ஜைனமதக் கொள்கைகளை முதன் முதலில் வகுத்தார். அவரை இந்திரனது அவ தாரம் என்பர். அவர் காசியில் இருந்து அரசாண்ட சூரிய வம்சத்து மன்னரான விச்வ சேனரின் புதல்வ ராவர். அன்னுர் சொன்ன மார்க்கங்களை மகாவீரர் விஸ்தரித்து, மெருகிட்டு மக்களுக்குப் போதித்தார். அவர்களது போதனைகளே ஜைனமதக் கொள்கைக ளாகும். இவ்விருவருக்கும் முன்னமேயே ஜைனமதம் தோன்றிவிட்டது என்பது சிலருடைய சித்தாந்தம்.

இனி, பார்ச்சுவநாதர், மஹாவீரர் சரித்திரங்களைக் கவனிப்போம்.

## பார்ச்சுவ நாதர்

பார்ச்சுவ நாதர் இருபத்துமூன்ருவது தீர்த்தங்கரராவர். இவருக்கு முன் இருபத்திரண்டு தீர்த்தங்கரர்கள் கூறப்பட்டுள்ளனர். பார்ச்சுவ நாதர் நூறு ஆண்டுகள் வாழ்ந்தாரென்றும் அவர் தமது முப்பதாவது வயதில் வீட்டைவிட்டு வெளியேறி உபவாசவிரதம் அநுஷ்டித்து ஸம்மேத பர்வதத்தில் ஞானோதயம் பெற்ருர் என்றும் கூறுவர். அது பற்றியே அந்தப் பர்வதம் இன்று பார்ச்சுவநாதபர்வதம் என அழைக்கப்படுகிறது. இவர் கி. மு. 722-இல் மோக்ஷத்தை அடைந்தார்.

## மகாவீரர்

கி. மு. 599-இல் வைசாலி என்னும் நகரத்தில் மகா வீரர் தோன்றினுர். இவரது பிள்ளைப் பெயர் வர்த்தமானர் என்பதாகும். இவரும் தமது முப்பதாவது வயதில் அனைத்தையும் துறந்து, வீட்டைவிட்டு வெளியேறி, ஊண், உடைகளையும் மறந்து, காடுகளில் அலைந்து திரிந்து பன்னிரண்டாம் ஆண்டின் இறுதியில் ஞானோதயம் அடைந்தார். அதன்பின்பே அவருக்கு மகாவீரர் என்னும் பெயர் ஏற்பட்டது. அனைத்தையும் வென்றவர் என்று பொருள்படும் ஜினர் என்ற பெயரும் அவருக்குச் சூட்டப்பட்டது. மஹா வீரர் 24-வது தீர்த்தங்கரராவர்.

மகாவீரர் நாட்டிய முக்கியக் கோட்பாடுகளாவன :— மனிதன் அடையத்தக்க உயர்ந்த பதவி மோட்சமாகும். அதை அடைய நன்னம்பிக்கை, நல்லறிவு, நல்லொழுக்கம் ஆகியவை வாய்ந்து விளங்கவேண்டும். தயை என்ற குணம் வேண்டும். ராகத்துவேஷங்களை அகற்றவேண்டும். பிரதிபலனை எண்ணிச் செயலில் இறங்கலாகாது. பிறர் மகிழ்ச்சியையே தம் மகிழ்ச்சியாகவும், பிறர் துயரத்தையே தம் துயரமாகவும் கருதவேண்டும். அனைத்துயிரிடத்தும் அன்பும், கருணையும் காட்டவேண்டும். மக்களை அஹிம்ஸை, சத்தியம், கள்ளாமை, பிரமசரியம், பொருளாசையில்லாமை என்பன மோக்ஷத்தை அடைவிப்பனவாகும்.

# பௌத்த மதம்

பௌத்த மதமும் உலக மக்களால் சிறந்ததாகக் கருதப்படும் மதங்களுள் ஒன்ருகும். புத்தர் பெருமானுல் நிறுவப்பட்ட மதமாதலின் அப்பெயர் பெற்றது. 'உலகத்தில் பற்றற்று வாழும் மனிதனே மேனிலையையும் சாந்தியையும் பெறுவான். நன்று தீது என்று பேதம் பாராட்டாமல் அனைத்துயிரிடத்தும் அன்பும் கருணையும் காட்டிஞல் அதுவே நன்னெறியிற் சேர்ப்பிக்கும்' என்பன பௌத்த மதக் கொள்கைகளாகும். பௌத்தமதம் நம் நாட்டில் மாத்திரமன்றி பர்மா, இலங்கை, ஸயாம், திபெத், கிரீஸ், எகிப்து, ஸிரியா, சைஞ, ஜப்பான் ஆகிய வெளி நாடுகளிலும் பரவியது. இன்றும் உலக மக்களுள் மூன்றில் ஒரு பகுதியினர் பௌத்த மதத்தினராகவே உள்ளனரெனின் அம்மதத்தின் தூய்மையை எடுத்தியம்பவும் வேண்டுமோ?

பௌத்த மதத்தை நாட்டிய புத்தர்பிரான் தமிழ் நூல்களுள் ' தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்; பிறர்க்கு அறம் முயலும் பெரியோன்; பிறர்க்கு அறம் அருளும் பெரியோன்; தன்னுயிர்க்கிரங்கான் பிற உயிர் ஓம்பும் மன்னுயிர் முதல்வன்' என்றெல்லாம் போற்றப் பட்டுள்ளார். புத்தருக்குப் போதி விருக்ஷத்தினடியில் ஞானேதயமானபோது அவருடைய மதத்திற்கு அடிப் படையாக நான்கு ஸத்தியங்கள் அவர் மனத்துட் புகுந்தன. அவற்றை அஸ்திவாரமாகக் கொண்டே புத்த மதம் எழுந்து ஓங்கியது. அந்த நான்கு சத்தியங்களாவன :—1. துக்கம், 2. துக்கோற்பத்தி, 3. துக்க நிவாரணம், 4. துக்கநிவாரண மார்க்கம் என்பன. இவை சத்திய சதுஷ்டயம் எனப்படும். இனி புத்தருடைய வரலாற்றினைக் கவனிப்போம்.

# புத்தர்

காசிமா நகரத்தின் வடகிழக்குத் திசையில் சுமார் நூறுமைல் தூரத்திலுள்ள கபிலவாஸ்து என்னும் நகரை கி. மு. ஆருவது நூற்ருண்டில் சுத்தோதனர் என்ற அரசர் ஆண்டுவந்தார். அவருடைய மனைவியான மாயாதேவி, சித்தார்த்தர் என்ற புதல்வரைப் பெற்ருள். சித்தார்த்தர் தக்க வயதில் 'யசோதரா' என்னும் கன்னிகையை மணந்து 'ராகுலன்' என்ற புதல்வனுக்குத் தந்தை ஆனுர்.

இல்லறத்தில் இருந்தும் சித்தார்த்தரின் உள்ளத்தில் ஏதோ ஒரு துயரம் குடிகொண்டிருந்தது. இவ்வுலக வாழ்வில் ஒரு குறைவும் இல்லாமலிருந்தும் தம் மனத்தை வாட்டி வரும் அத்துயரம் யாதாயிருக்குமென்பதைச் சித்தார்த்தர் ஆராய்ந்து கண்டுபிடித்தார். அதாவது துன்பத்திற்கிடமான இந்தத் தேகத்தின்மேல் மதியீனத்தால் வைத்திருக்கும் பற்றே அத்துயரத்திற்குக் காரணம் என்பதை அவர் அறிந்து, பற்றைத் துறந்து பரமானந்த நிலையை எய்துவதற்குரிய ஞானத்தை அடைய வேண்டும் என்று தம் மனத்தில் உறுதி பூண்டார்.

ஓர் இரவு, தம் மனைவியும் மகனும் அயர்ந்து தூங்கும் தருணத்தில் சித்தார்த்தர் ஒருவருக்கும் தெரியாமல் அரண்மனையை விட்டு வெளியேறிக் கானகத்துள் நுழைந்தார். அதன் பின்பு ஏழு ஆண்டுகள் வரையில் அவர் பலவாறு முயன்றபின் ஒரு நாள் ஒரு போதி மரத்தடியில் அவருக்குத் திடீரென்று ஞானேதயம் உண்டாயிற்று. அன்றே அவர் புத்தர் எனப் பெயர் பெற்ருர்.

உடனே அவர், தாம் கண்ட உண்மையை உலகமெங்கும் பரவச்செய்து மானிடரைப் பாவத்தினின்றும்

மீட்கவேண்டும் என்னும் ஆவலுடன் விரைந்தெழுந்தார். மனிதன் பாவம் செய்வதாலேயே பிறவி எடுக்கிறான்; பிறவி தொடர்வதாலேயே துயரமும் தொடர்கிறது; பிறவி இல்லையேல் துயரமே இல்லை; ஆதலின் பிறவியைத் தொலைக்கும் பெரும் புண்ணியமாகிய 'அஹிம்ஸை' என்னும் விரதத்தையே அனைவரும் கடைப்பிடிக்க வேண்டும்; பொய் சொல்லக்கூடாது; தீயவற்றை மனத்தில் நினைத்தலும் கூடாது; பிறன் பொருளை இச்சித்தல் கூடாது என்பன போன்ற நீதிகளை அங்கங்கே போதித்து அறநெறிக்குப்புத்துயிர் அளிக்கலாயினார். படித்தவர்முதல் பாமரர் வரையிலும், மன்னன் முதல் ஏழை வரையிலும் எல்லோரும் புத்தர் காட்டிய அறநெறிப் பாதையிலே நடந்து அவரது கொள்கைகளைக் கடைப்பிடிக்கத் தொடங்கினர்.

அது முதல் புத்தமதக் கொள்கைகள் உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் பரவலாயின. இவ்வாறு உலகத்தையே உய்விக்க அவதரித்த புத்தர்பிரான் பிறந்த காலம் கி. மு. 557-ம் ஆண்டு என்றும், அவர் தமது எண்பதாவது வயதிலே தேக வியோகம் அடைந்தார் என்றும் தெரிகிறது.

புத்த தருமங்களும் மேற்கூறிய வரலாறும் "திரிபிடகம்" அல்லது பிடகத்திரயம் என்னும் நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. புத்தர், பௌத்த தருமம் பௌத்த சங்கம் ஆகிய மூன்றையும் மும்மணிகளெனப் பௌத்தர் போற்றுவர். புத்தர் என்பது புத்தருடைய சரித்திரமாகும். பௌத்த தருமம் என்பது அவர் ஓதிய அருளறங்களாகும். பௌத்த சங்கம் என்பது பௌத்தரில் துறந்தோர்களின் கூட்டமாகும். பௌத்தரில் இல்லற நெறியில் நிற்பவர் உபாஸகர் எனப்படுவர்.

## கிரிஸ்தவ மதம்

கிரிஸ்தவ மதம் இன்று உலகில் பெரும் பாகத்தை ஆட்கொண்டிருக்கிறது. இந்த மதத்தை ஸ்தாபித்தவர் இயேசுநாதராவர். அன்பு, பொறுமை, இரக்கம், தீமை புரிந்தோர்க்கும் நன்மையே செய்யும் இயல்பு முதலியன கிரிஸ்தவமதத்தின் உயர்ந்த தத்துவங்களாம். 'அனைத்தையும் இயக்கும் கடவுள் ஒருவர் உண்டு; அவரது முன்னிலையில், நாம் அறியாமற் செய்த அடாச்செயல்களையெல்லாம் எடுத்தியம்பினால் அவற்றை இறைவன் மன்னித்துஅருள்புரிவான். ஏனெனில் இரக்கமும் அன்புமே இறைவனது ஒப்பற்ற குணங்கள்' என்று இயேசுநாதர் கூறியுள்ளார்.

## இயேசுநாதர்

சரித்திர ஆசிரியர்கள் முதல் - தற்காலப் பள்ளி மாணவர்வரை வருஷத்தைக் கணக்கிடும் காலம் இயேசுநாதர் பிறந்தத்திலிருந்தேயாம். இயேசுகிரிஸ்து பிறந்ததற்கு முன்னுள்ள காலம் கி. மு. எனவும், பிற்பட்ட காலம் கி. பி, என்றும் வழங்கிவருகின்றன.

இயேசுகிரிஸ்து பிறந்து இன்றைக்கு 1950 ஆண்டுகள், ஆகின்றன. அவர் அரேபியாவைச் சேர்ந்த 'பெத்லகேம்'' என்னும் ஊரில் ஒரு மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். அவரது தந்தையின் பெயர் யோசேப்பு; தாய் மரியாள் என்பவர். அவர்கள் ஏழைகள்.

இயேசு என்னும் சொல்லுக்கு 'ரக்ஷகர்' என்று பொருள். அதற்கேற்ப, அவர் ஊர் ஊராய்ச் சென்று தீச்செயல் புரிவோரைக் கண்டித்து அவர்களை நல் வழியில் திருப்பிக் காப்பாற்ற முயன்றார், 'மனிதர் எல்லோ

ரும் ஒற்றுமையுடன் வாழவேண்டும்; பொய் சொல்லக் கூடாது; பிறர் பொருளை இச்சித்தல் கூடாது' என்ற உபதேசங்கள் அடங்கிய பிரசங்கங்களைச் அடிக்கடி செய்து வந்தார். அந்தப் போதங்களைக் கேட்ட மக்களில் பல்லோர் ஏசுநாதருக்குச் சீடர்களாகி, அவர் கூறியபடி நல்ல மார்க்கத்தில் நடக்கத் தலைப்பட்டனர்.

இச்செயல் சுயநலக்காரர்களான சில தீயோருக்குப் பிடிக்கவில்லை. அக்காலத்தில் அந்நாட்டு அரசாங்கமும் அவர்களுக்கே சாதகமாக இருந்தது. ஆதலால் அவர்கள் ஏசுவின்பேரில் ஏதாவது குற்றஞ்சாட்டி அவரை ஒழித்து விடத் தக்க சமயத்தை எதிர் பார்த்திருந்தார்கள்.

இயேசுநாதர் தாம் உபதேசிப்பதோடு மட்டும் நில்லாமல் ஏழைகளின் கவலைகளையும், நோயாளிகளின் பிணிகளையும் தீர்த்து வந்தார். அவருடைய அருளின் வலிமையால் முடவர்கள் நடந்தனர். குருடர்கள் பார்வையைப் பெற்றனர். பசியால் தவித்தவர்களுக்கு அப்பம் கிடைத்து அவர்களது களையை ஆற்றியது. இவ்வாறு பல அற்தச் செயல்களைப் புரிந்தும், அடிக்கடி போதமளித்தும் அவர் எல்லோருக்கும் கடவுளிடம் பக்தியை உண்டாக்கி வந்தார். அதனால் "பரம்பொருள் ஒருவர் உண்டு; அவரை நம்பவேண்டும்" என்றும் உறுதி ஒவ்வொருவர் உள்ளத்திலும் வேரூன்றலாயிற்று.

இவற்றையெல்லாம் கண்ட பகைவர்கள் "ஏசுநாதர் தம்மையே கடவுள் என்று சொல்லிக் கொண்டார்" என்று குற்றஞ்சாட்டி, அவரை அரசனிடம் கொண்டு போய் விட்டனர். கொடுங்கோலனான அரசன் ஏசுவைச் சிலுவையில் அறைந்து கொல்லும்படி கட்டளையிட்டான். விரோதிகளான பாவிகள் ஏசுநாதரைப் பிடித்துப் பல வாறு துன்புறுத்தியபின் அவரைச் சிலுவை என்னும்

மரத்தில் சார்த்தி, தலை கை கால் முதலிய அவயவங்களில் ஆணிகள் அடித்துத் தொங்கவிட்டார்கள். அப்பொழுதும் ஏசுநாதர் அவர்களைக் கோபியாமல் "தேவனே! அறியாமற் செய்யும் இவர்களது பாவங்களை மன்னியுங்கள்!" என்று கடவுளைப் பிரார்த்தித்து அச்சிலுவையிலேயே உயிர் நீத்தார்.

அவர் இவ்வுலகை நீத்தபின் அவருடைய மகிமைகள் உலகமெங்கும் பரவின. அவரைப் பின்பற்றிய சீடர்கள் அவருடைய கொள்கைகளை எங்கும் பரப்பினார்கள். அவர் அளித்த போதங்கள் அடங்கிய 'பைபிள்" என்னும் நூல் கிறிஸ்தவ வேதம் என்று போற்றப்படுகிறது.

## மகம்மதிய மதம்

மகம்மதுநபிநாயகத்தினால் தாபிக்கப்பட்ட மதம் மகம்மதிய மதமாகும். இம்மதத்தைத் தழுவி நிற்போரும் உலகில் அளவின்றி யுள்ளனர். முகம்மது நபி அவ்வப்போது சொன்ன அமுதமொழிகளே 'குரான்' என்னும் நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. அதுவே மகம்மதியரது வேதமாகும்.

'மக்கள் இனம் ஒன்றே; பிறப்பினால் எவ்வித குல பேதமோ இனபேதமோ இல்லை. கொடியோரைத்தவிர எல்லா மக்களிடத்தும் அன்புகாட்டி வாழவேண்டும். பிற மதத்தையும் பிற மதத்தினரையும் இழிவாக எண்ணாமல் அவர்களையும் அவரது கொள்கைகளையும் போற்றவேண்டும். பெண்களும் ஆண்களும் ஒரே அந்தஸ்துக் குரியவராவர். சாந்தியும் சமாதானமுமே அனைவரது லட்சியமாக விளங்கவேண்டும். எல்லாம் வல்லவனும், அனைத்தையும் ஆளுபவனும் ஓரிறைவன் உளன்; அவனே எல்லாமதத்திற்கும் தலைவன்' என்பன முகம்மதிய மத சித்தாந்தங்களாகும்.

## மகமதுநபி

மகம்மது, அரேபியாவிலுள்ள மெக்கா என்னும் ஊரில் பிறந்தார்; அவர் தாய் வயிற்றில் இருக்கும்போதே அவரது தந்தையும், பிறந்த சின்னாட்களில் தாயும் மரித்தனர். ஆதலால் அவர் தமது தாய்மாமன் பராமரிப்பில் வளர்ந்துவர நேர்ந்தது.

அக்காலத்தில் அரேபியாவிலே கொலை, கொள்ளை முதலான தீச்செயல்கள் எங்கும் தாண்டவமாடின;

மனித உணர்வு நீங்கிய மக்கள் விலங்கினங்களுக்கு ஒப்பாக நடந்து வந்தனர். மகம்மது தம் சிறு பிராயத்தி லேயே தீயாரைக் கண்டித்து நீதியை நிலைநாட்ட வேண்டு மென்னும் ஆர்வங் கொண்டார்.

அவர், அழகியும் பணக்காரியுமான கதீஜா என்னும் மாதிடம் வேலை பார்த்து வந்தார். இவருடைய நல்லொழுக் கத்தையும், தெய்வ சிந்தனையையும் கண்ட கதீஜா, தாமே இவரை மணம் புரிந்துகொண்டார். நாளுக்குநாள் மகம் மதுவின் மனத்தில் கடவுளைப் பற்றிய ஆராய்ச்சி வலுத்தது. அதனால் அவர் ஒவ்வொரு நாளும் மாலை வேளையில் ஒரு மலைக்குப்போய் அங்கே அமர்ந்து மணிக் கணக்காக ஆத்ம சிந்தனையில் ஆழ்ந்திருக்கலானார்.

இவ்வாறு அவர் செய்த தவம் வீணாகவில்லை. ஒரு நாள் அவர் நிஷ்டையில் வீற்றிருக்கும்போது கடவுள் ஒருவர் உண்டென்றும், அவர் எல்லாம் வல்லவரென்றும் அறிந்தார். தாம் அறிந்த உண்மையை மகம்மது உடனே தம் மனைவியிடம் தெரிவித்தார்; பின்பு மற்றை யோர்க்கும் கூறி, பாவச்செயல்கள் புரிவாரைக் கடவுள் தண்டிப்பார் என்றும் எச்சரித்தார். மக்களிற் சிலர் மகம்மது காட்டிய கொள்கைகளைப் பின்பற்றி நல்லோரா கவும் திருந்தலாயினர்.

கடவுள் என்னும் பெயரால் மகம்மது புரிந்து வரும் மதபோதனையைக் கேட்ட அந்நாட்டினர், தங்கள் கருத் துக்கும் செயலுக்கும் அவரால் பெருங்கேடு வந்ததாக எண்ணினர். எவ்வகையாலேனும் அவரைக் கொல்லலே தகுதி என்றெண்ணி அவரை மாய்த்தற்குரிய வழிகளைத் தேடினர். அதையறிந்த மகம்மது மெக்காவை விட்டு மெதினா என்னும் ஊருக்கு விரைந்தேகினார்.

மெதினாவில் வாழ்ந்துவந்த மக்கள் மகம்மது நபியை அன்போடு வரவேற்று உபசரித்ததுமன்றி தெய்வத்

தன்மை நிரம்பிய அவரையே தமக்கு அரசராகவும் கொண்டனர். மகம்மது நபியின் கொள்கைகளைத் தழுவி அனைவரும் அவர்க்குச் சீடரும் ஆயினர். மகம்மது காட்டிய அம்மதத்திற்கு 'இஸ்லாமிய மதம்' என்னும் பெயர் ஏற்பட்டது.

இஃதிங்ஙனமிருக்க, மெக்கா வாசிகள், மகம்மது ஊரைவிட்டு வெளியேறியும் அவரை விடவில்லை. எப்படியும் அவரைக் கொல்லவே வேண்டும் என்று தீர் மானித்து, ஒரு பெரும் படை திரட்டிக் கொண்டு வந்து மகம்மதுவின்மேல் போர் தொடுத்தனர். வெகு காலம் நீடித்த அந்தப் போரில் கடவுளை நம்பிய மகம்மதுவே வெற்றிபெற்றூர்; அவரது நேர்மையினுல் உடனே மனந் திருந்திய மெக்கா வாசிகள் தமது அறியாமைக்காக வருந்தி மன்னிப்புக் கோரியதுடன் மகம்மது நபியை மெக்காவுக்கு அழைத்தும் சென்றனர்.

மகம்கது நபி, மெதினுவுக்கு மட்டுமேயன்றி, மெக்கா வுக்கும் அரசரானுர். அரேபியா முழுவதுமே அவரது ஆளுகைக்கு உட்பட்டது. மகம்மது நபியால் உண்டாக்கப் பட்ட மதம் அரேபியா முழுமையும் பரவியதோடல் லாமல், வெளிநாடுகளிலும் அங்கங்கே புகுந்து நிலைத்தது. அந்த மதத்தைத் தழுவினவர் மகம்மதியராவர். அம்மதக் கொள்கைகளை விளக்கும் நூல் 'குரான்' என்றும் வழங்கப்படுகின்றது. குரான் நபிநாயகத்தின் அமுத மொழிகளாகும். இவ்வுலகை மகம்மது நபி நீத்த காலம் கி. பி. 632-ம் ஆண்டு எனத் தெரிகிறது.

## சீக்கிய மதம்

சீக்கிய மதத்தை ஸ்தாபித்தவர் குருநானக். குரு நானக், லாகூருக்கு அருகிலுள்ள ஒரு சிற்றூரில் 1469-ம் ஆண்டிற் பிறந்தவர். அவர் தம் இளம்பருவத்திலேயே சம்ஸ்கிருதம், பாரஸீகம் ஆகிய இரண்டு மொழிகளையும் நன்கு கற்று, அம்மொழிகளில் கவிதை இயற்றும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

அவர் தமது 32-ம் வயதில் துறவு பூண்டு, இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் உள்ள புண்ணிய ஸ்தலங்களுக்கெல்லாம் யாத்திரையாகச் சென்று திரும்பினர் பின்பு அவர் தாம் ஆராய்ந்து கண்டறிந்த அரிய உண்மைகளை அனைவருக்கும் போதிக்கத் தொடங்கினர்.

குரு நானக், ஜாதி வித்தியாசங்களையும், உயர்வு தாழ்வுகளையும் அறவே வெறுத்தார்; அவர், மகம்மதியம் இந்து ஆகிய இரண்டு மதங்களினின்றும் சில கோட்பாடுகளைத் தொகுத்து ஒன்றுசேர்த்து, தாம் புதிதாகத் தேர்ந்தெடுத்த அம்மதத்திற்கு 'சீக்கிய மதம்' என்று பெயரிட்டார்; இந்துக்களிலும், மகம்மதியரிலும் பல்லோர் அம்மதத்தைத் தழுவி 'சீக்கியர்' ஆயினர். தூய உள்ளமும் நல்லொழுக்கமும் படைத்த குருநானக் 1539-ம் ஆண்டில் மண்ணுலகைவிட்டு மறைந்தார்.

# பண்டிகைப் பகுதி

## ஆண்டுகள்

"நீ எந்த ஆண்டில் பிறந்தாய்?" என்று யாரேனும் நம்மைக் கேட்டால், "ஆயிரத்துத் தொளாயிரத்து" என்று ஆரம்பித்து, ஆங்கில வருஷத்தைத்தான் கணக்கிட்டுச் சொல்லுவோம், இதுகாறும் நமது உரிமைகளையும், பெருமைகளையும் நாம் மறந்திருந்தது போலவே, நம் நாட்டில் தொன்றுதொட்டு வழங்கிவந்த நமது ஆண்டுகளின் பெயர்களையும் நாம் இன்னும் மறந்தே இருக்கிறோம். நாட்டுப்புறத்தில் வசிக்கும் பண்ணைக் கிழவன் "தாது ஈஸ்வர" பஞ்சத்தில் தான் 'அரிச்சுவடி' படித்ததாகக் கூறுகிறான். ஆனால் அந்தத் 'தாது ஈஸ்வர' வருஷங்களுக்குப்பின் எத்தனை ஆண்டுகள் கழிந்தன என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க விரும்பினால் நாம் பஞ்சாங்கத்தின் பக்கங்களைத்தான் புரட்டிப் பார்க்க வேண்டியிருக்கிறது.

"நாம் இருக்கும் நாடு நமது" என்பதை ஒவ்வொருவரும் அறிந்து கொண்டோம்; அதைப்போலவே ஆண்டுகளுக்காக அன்னியரிடம் கை ஏந்தி நிற்காமல் நமது பழமை பொருந்திய வருஷங்களையும் நாம் ஒவ்வொருவரும் அறியவேண்டும்.

# வருடப் பிறப்பு

மக்கள் காலத்தை அளக்க மணி, வாரம், பக்ஷம், மாதம், ஆண்டு என்ற பெயர்களை வைத்து எல்லை கட்டியுள்ளனர். இவற்றுள் ஆண்டு முந்நூற்றறுபத்தைந்து நாட்களைக் கொண்டது. ஒவ்வொரு முந்நூற்றறுபத்தைந்து நாட்கள் சென்றதும் ஓராண்டு முடிந்தது என்று எல்லையிட்டு, புதிய ஆண்டின் தோற்றத்தை விழாவாகக் கொண்டாடுகிறார்கள். சந்திரனது பிறை வளர்ந்து தேய்வதை அளவாகக்கொண்டு அந்த முப்பது நாட்களை மாதமாக வைத்து ஆண்டினைக் கணக்கிடும் முறைக்குச் சாந்திரமானம் என்பது பெயர். சூரியன் மேஷம் முதலிய பன்னிரண்டு ராசிகளில் சஞ்சரிப்பதை அளவாகக் கொண்டு ஆண்டு கணக்கிடப்படுவது ஸௌரமானம் எனப் பெயர் பெறும். இந்த முறைப்படி பன்னிரண்டு மாதங்கள் கொண்டது ஒரு வருஷம் ஆகும்.

தமிழ் மக்கள் ஸௌரமானப்படி ஆண்டு விழா கொண்டாடுகிறார்கள். தெலுங்கர்கள் சாந்திரமானப்படி ஆண்டு விழா கொண்டாடுகின்றனர். அவை முறையே வருஷப்பிறப்பு எனவும் யுகாதி எனவும் பெயர் பெற்றுள்ளன. புதிய ஆண்டு பிறக்கும்போதே புதிய இன்பமும் சுரக்க வேண்டுமென்றும் ஒருகால் அவ்வாண்டிலே துன்பம் தோன்றினும் அதனை இன்பமென அநுபவித்து வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டும் என்றும் கருதி அவ்வாண்டு விழாவில் விருந்துணவோடு வேப்பம்பூவும் கலந்து சமைத்து உண்டு மகிழ்வர். விருந்துணவு மகிழ்ச்சியையும் வேப்பம்பூவுணவு துன்பங் கலந்த இன்பத்தையும் குறிப்பனவாகும் எனப் பெரியோர் கூறுவர்.

ஆங்கிலேயர் கிறிஸ்துபிறந்தநாளை விழாவாகக்கொண்டாடி அதன் இறுதியிலிருந்து தம் ஆண்டின் துவக்கத்தைக் கொண்டுள்ளனர். கிறிஸ்மஸ் விழா முடிந்ததும் ஆங்கிலேயருக்குப் புதிய ஆண்டு பிறக்கிறது.

## ஸ்ரீராமநவமி

திருமால் தசரதகுமாரனாக அவதரித்த நாளை ஸ்ரீராம நவமி எனக் கொண்டாடுகின்றனர் இந்துக்கள். இராமனது வரலாறு முன்னமே கூறப்பட்டது. நவமி என்பது ஒரு திதியின் பெயர். மேஷ மாதத்தில் வளர் பிறையில் நவமியன்று இவ்விழா கொண்டாடப்படுகிறது.

## வரலக்ஷ்மி விரதம்

நினைத்த வரங்களைக் கொடுக்கும் தாயாகிய திருமகளைக் குறித்துச் செய்யப்படும் நோன்பு இது. இது பெண்டிராலேயே அனுஷ்டிக்கப்படுகிறது. எல்லாப் பெண்டிரும் இந்த நோன்பைக் கொண்டாடுகின்றனர் என்பதில்லை. தெலுங்கு நாட்டில் எல்லா வீடுகளிலும் தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களிலும் இந்நோன்பை நோற்கின்றனர். கலசம் வைத்து அதில் திருமகளை ஆவாஹனம் செய்து பூஜிக்கின்றனர் சிலர். எல்லாப் பாக்கியங்களையும் அளிக்கும் திருமகளைத் துதித்து என்றும் இன்ப வாழ்வு பெற இல்லத் தலைவியராகிய மகளிர் இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். இது ஆடி மாதத்தில் ஒரு வெள்ளிக் கிழமையன்று கொண்டாடப்படுகிறது. திருமகளைப்பற்றி ஏனைய விஷயங்கள் முன்னே விளக்கப்பட்டுள்ளன.

## கோகுலாஷ்டமி

தேவகிக்கும் வசுதேவருக்கும் திருமால் கண்ணனாகப் பிறந்த தினமே இப்பெயரோடு கொண்டாடப்படுகிறது. நக்ஷத்திரம், திதி ஆகியவற்றின் பிரதானத்தினால் இவ்

## அறுபது ஆண்டுகளின் பெயர்கள்

| | | |
|---|---|---|
| பிரபவ | ஸர்வஜித்து | பிலவங்க |
| விபவ | ஸர்வதாரி | கீலக |
| சுக்கில | விரோதி | சௌமிய |
| பிரமோதூத | விக்ருதி | சாதாரண |
| பிரஜோற்பத்தி | கர | விரோதிகிருது |
| ஆங்கீரஸ | நந்தன | பரிதாபி |
| ஸ்ரீமுக | விஜய | பிரமாதீச |
| பவ | ஜய | ஆனந்த |
| யுவ | மன்மத | ராக்ஷஸ |
| தாது | துன்முகி | நள |
| ஈஸ்வர | ஹேவிளம்பி | பிங்கள |
| வெகுதான்ய | விளம்பி | காளயுக்தி |
| பிரமாதி | விகாரி | சித்தார்த்தி |
| விக்கிரம | சார்வரி | ரௌத்திரி |
| விஷு | பிலவ | துன்மதி |
| சித்ரபானு | சுபகிருது | துந்துபி |
| சுபானு | சோபகிருது | ருத்ரோத்காரி |
| தாரண | குரோதி | ரக்தாக்ஷி |
| பார்த்திப | விசுவாவசு | குரோதன |
| விய | பராபவ | அக்ஷய |

## மாதங்கள் 12

சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி.

## ருதுக்கள் 6

இளவேனிற் காலம், முதுவேனிற் காலம், கார்காலம், கூதிர் காலம், முன்பனிக் காலம், பின்பனிக் காலம்.

## நட்சத்திரங்கள் 27

அசுவினி, பரணி, கார்த்திகை, ரோகிணி, மிருகசீர்ஷம், திருவாதிரை, புனர்ப்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி.

## இராசிகள் 12

மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம் தனுசு, மகரம், கும்பம், மீனம்.

## திதி 15

பிரதமை, த்விதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, பௌர்ணமி அல்லது அமாவாசை.

மேற்கூறிய பதினைந்து நாட்களும் ஒரு பக்ஷம் எனப்படும். ஒரு மாதத்தில் தேய்பிறை, வளர்பிறை என்று இரண்டு பக்ஷங்களும், ஒரு வருஷத்தில் உத்தராயணம், தட்சிணாயனம் என்று இரண்டு அயனங்களும் உள்ளன.

விழா முன்பின்னாகக் கொண்டாடப்படும். அதுபற்றியே கோகுலாஷ்டமி, ஸ்ரீஜயந்தி என்று வெவ்வேறு பெயர்களாலும் இவ்விழா அழைக்கப்படுகிறது. கண்ணனைப் பற்றிய வரலாறு முன்னமேயே விரிவாக எழுதப்பட்டுள்ளது. ஆவணி மாதத்துக் கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி திதியில் இவ்விழா கொண்டாடப்படும்.

## விநாயக சதுர்த்தி

விநாயகரைக் கொண்டாடி அவரருளைப் பெற இவ்விழா ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆவணி மாதத்துச் சுக்ல பக்ஷத்துச் சதுர்த்தி திதியே விநாயகருக்குரிய நாளாகும். விநாயகரது வரலாறும் பெருமையும் தனியாக முன்னே எழுதப்பட்டுள்ளன.

## நவராத்திரி

இது ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும் விழாவாதலின் இப் பெயர் பெற்றது. துர்க்கை, லக்ஷ்மி. ஸரஸ்வதி ஆகிய மூன்று பெண் தெய்வங்களையும் போற்றற்குரிய நாட்கள் இவை என்பர். இந்த மூன்று பெண் தெய்வங்களும் முறையே வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றுக்கு உரியவர்கள் என்பது முன்னே விளக்கப் பட்டது. இம்மூன்றும் மக்களுக்கு இன்றியமையாதன வாதலின் இது சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. துர்க்கை, லக்ஷ்மி, ஸரஸ்வதி ஆகிய மூவரையுமே ஒன்பதாவது நாளிறுதியில் பூஜிக்கின்றனரென்றாலும் அது ஸரஸ்வதி பூஜை என்றே அழைக்கப்படுகிறது. மூவரையும் அர்ச்சித்து அவர்களது அருளையும் பெறுதலாகிய வெற்றியைக் குறிப்பிடும் நாளே விஜயதசமி என்று சொல்லப்படுகிறது.

## தீபாவலி

ஐப்பசி மாதத்து அமாவாசை திதியை யொட்டிக் கொண்டாடப்படும் விழா தீபாவலியாகும். தீபாவலி என்னும் சொல் தீபங்களின் வரிசை என்று பொருள்படும். வட நாட்டார் இவ் விழாவைப் பெயருக்கேற்ற முறையில் கொண்டாடுகிறார்கள். அன்று தத்தம் இல்லங்களில் பல் வேறு விதமாக அலங்கார தீபங்கள் ஏற்றி வைத்து அவர்கள் ஆனந்த முறுகிறார்கள்.

ஆனால் நம் நாட்டிலே இந்த விழா சதுர்த்தசியன்று கொண்டாடப்படுகிறது. அன்று பொழுது புலரும் முன் எண்ணெய் தேய்த்து நீராடி, கோடியாடை யுடுத்து, இனிய உணவுகளை உண்டு மகிழ்ந்து கொண்டாடுதல் தென்னாட்டினர் வழக்கம். சிறுவர்கள் பட்டாசு, வாணங்கள் முதலியன வெடிக்க விட்டு மகிழ்ச்சியுறும் விழா தீபாவலி.

இந்த நாளில் கண்ணபிரான் நரகன் என்னும் அசுரனை மாய்த்ததாகவும், அவ்வசுரன், தான் இறக்குந் தருணத்தில் இவ் விழாவை மேற் கூறிய முறையில் கொண்டாடவேண்டுமெனக் கிருஷ்ணனிடம் வரம்கேட்டு கொண்டான் என்றும் அதனாலேயே இவ் விழா 'நரக சதுர்த்தசி' எனப் பெயர் பெற்றதென்றும் பெரியோர் கூறுவர்.

## கார்த்திகைத் தீப விழா

கார்த்திகை மாதத்தில் பௌர்ணமி திதியன்று கார்த்திகை விழா கொண்டாடப்படுகிறது, அன்று பெண்டிர் அந்தி மயங்கும் நேரத்தில் அணி அணியாக தீபங்களை

ஏற்றித் தத்தம் இல்லத்தின் பல்வேறு பகுதிகளிலும் வைத்துத் தொழுது மகிழ்வர். ஒவ்வொரு வீதியிலுமுள்ள வீடுகள்தோறும் எண்ணெய் திரியிடப்பட்டு எரியும் தீபங்களின் வரிசை காண்போர் கண்களையும் மனத்தையும் கவரும் அழகு வாய்ந்தவையாகும். தென்னாட்டில் உள்ள ஆலயங்களிலும் இம்முறையிலேயே இவ் விழா கொண்டாடப்படுகிறது. திருவண்ணாமலை கிருத்திகா தீபம் உலகப் புகழ் வாய்ந்தது.

கோயில்களில் இறைவன் சந்நிதி முன் பனைமரத்தை வெட்டி நட்டு அதைச் சுற்றிக் காய்ந்த ஓலைகளைச் சுற்றிக் கட்டிக் குறித்த வேளையில் அதில் தீபத்தை ஏற்றி அனைத்தையும் ஒளிவிடச்செய்து துதிப்பர். பின்சுளுந்துக்கட்டில் அவ்வொளியை ஏற்றித் தத்தம் வீட்டிற்கு எடுத்துச் செல்வர். எல்லாத் தேவர்களும் கர்வங்கொண்டு திரிந்தார்களென்றும் அப்போது அவர்களது அகந்தையை அகற்ற இறைவன் ஒளிப்பிழம்பாக அவர் முன் நின்று அவர்களை அறிவு கொளுத்தினர் என்றும் அந்த ஒளிப்பிழம்பின் நினைவு நாளே இந் நாள் என்றும் பெரியோர் கூறுவர். மகாபலி சக்கரவர்த்தி வாமனரான திருமாலால் பாதாளத்தில் அமுக்கப்பட்டபோது ஆண்டிற்கொரு முறை தான் பூவுலகைக் காண விரும்புவதாக வரம் கேட்டார் என்றும் திருமால் அங்ஙனமே அருள் செய்தாரென்றும் அதன்படி கிருத்திகை நாளிலே பலிச்சக்ரவர்த்தி உலகைக் காண வருவதாகவும் அதனாலேயே அந்நாளில் மக்கள் இவ்வுலகைத் தீபாலங்காரஞ் செய்து அழகு படுத்துகின்றனரென்றும் வேறொரு வரலாறு உள்ளது.

## வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதத்துச் சுக்ல பக்ஷத்து ஏகாதசி திதியே வைகுண்ட ஏகாதசியாகும். ஏகாதசி திதியன்று உண்ணு விரதமிருந்து நோன்பியற்றும் அடியார்களுக்குத் திருமால் தாம் வைகுண்ட லோகத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சியை அளிப்பார் என்பது பெரியோர் துணிபு. இந்த ஏகாதசி விரதத்தின்பெருமையை விளக்கும் கதையாகவே ருக்மாங்கத மன்னனின் வரலாறு உள்ளது. இந்த நாளில் இரவு பகலில் உணவும் நித்திரையும் துறந்து திருமால் நாமங்களையே சொல்லித் துதிப்பர்.

## திருவாதிரை

மார்கழி மாதத்துத் திருவாதிரை நட்சத்திரத்தில் சிவபெருமானது நர்த்தனக் கோலத்தை மக்கள் சிறப்பாக தொழுவர். அந்த நாளே ஆதிரை நாளாகும். தாருகா வனத்து அசுரர்கள் சிவபெருமானோடு போரிட்ட காலத்தில் அவர்கள் யானை, புலி, முதலியவற்றை ஏவ இறைவன் அவற்றை மாய்த்தாரென்றும் இறுதியில் அசுரர் அபஸ்மார தேவதையை ஏவ அதனைக் காலால் மிதித்து அதன் மேல் நின்று நர்த்தனம் செய்தாரென்றும் அந்த நாளே இந்த ஆதிரை நாளென்றும் கூறுவர்.

## திருப்பாவை

தவமும் தலமும் மிகுந்த தமிழ் நாட்டில், புகழும் புண்ணியமும் மிகுந்தது ஸ்ரீ வில்லிபுத்தூர். அப்பதியில் வேயர் குலத்தினரும், சோழியர் மரபினருமான விஷ்ணு சித்தர்' என்ற அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு

சமயம் மதுரையிலே, பாண்டியன் சபையில் நடந்த சமய வாதங்களில் வெற்றி பெற்றுத் 'திருமாலே உயர்ந்தவர்' என்னும் கொள்கையை ஸ்தாபித்தார். அதனால், எம்பெருமான் மிகவும் களிப்பெய்தி அப்போது அரசவையிலே கட்டியிருந்த பொற்கிழி தானாகவே விஷ்ணு சித்தரின் கரங்களில் வந்து சேருமாறு செய்தனர். மேலும், வெற்றி கொண்ட விஷ்ணுசித்தர் யானைமீதமர்ந்து நகர் வலம் வருகையில் திருமால் திருமகளோடும் புவி மகளோடும் கருடனேறி வந்து வான வீதியிலே காட்சி அளித்தனர். அவரைக் கண்ட விஷ்ணு சித்தர், மானிடரின் தீய நோக்கினால், அம் மாயனுக்கும் மங்கைக்கும் தோஷம் ஏதேனும் நேருமோ என அஞ்சி, பல்லாண்டு பாடினர். அன்று முதல் அவருடைய திருநாமம் 'பெரியாழ்வார்' என வழங்கலாயிற்று.

பெரியாழ்வார் வில்லிபுத்தூர் கோயிலிலே மாலுக்காகக் காலந் தவறாமல் மாலை தொடுத்துக் கொடுக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அதற்காக மலர்களையும் திருத்துழாயையும் சேகரிக்கும்பொருட்டு அவர் ஒவ்வொரு நாளும் அதிகாலையிலே நந்தவனத்துக்குச் சென்று வந்தனர்.

ஒருநாள், ஆடித் திங்களில் பூர நட்சத்திரம் கூடிய நன்னாள்; அன்று இந்த வேதியர் பூங்காவில் புகுந்தபோது துழாய்ப் பாத்தி ஒன்றில் துள்ளி விளையாடும் பெண் குழந்தை யொன்றைக் கண்டெடுத்தனர். அருளே வடிவமாகத் தோன்றிய அந்தக் குழந்தைக்கு 'கோதை' எனப் பெயரிட்டு அதனை அன்புடன் வளர்த்து வந்தார் பெரியாழ்வார்.

கோதை மானிடப் பெண்களில் ஒருத்தி அல்லள்; உயிர்களுக்கெல்லாம் அருளையூட்டும் அன்னையான

மண்மகளே, பெரியாழ்வார் செய்த நல்வினைப் பயனால் அவருடைய இல்லத்திலே 'கோதை' என்னும் பெயருடன் வளர்ந்து வந்தனர். ஆதலால் அவர் "திருமாலை அன்றி வேறு எவரையும் கணவனாக அடையேன்"



என்று கூறி, திருமாலை நோக்கித்தம்மை ஏற்றுக்கொள்ளுமாறு தவங்கிடந்தனர். மேலும், பெரியாழ்வார் மாலுக்காகத் தொடுத்துவைக்கும் மலர் மாலைகளின் அழகைச்

சோதிக்க ஒவ்வொருநாளும் தம் தந்தைக்குத் தெரியாமல் தாம் சூடிப் பார்த்தபின்பே கோயிலுக்கு அனுப்பி வைத்தனர்.

திருமாலுக்காகத் தாம் கட்டி வைத்திருந்த மாலையைத் தமது மகள் சூடி நிற்பதை ஒருநாள் பெரியாழ்வார் பார்த்துவிட்டார். மாலைக்கு மாசு நேர்ந்துவிட்டதாக அவர் நினைந்து, மிகவும் மனம் வருந்திக் கோதையைக் கண்டித்தார். ஆனால், அன்றைய இரவே திருமால் அவர் கனவில் தோன்றி கோதை சூடிக் கொடுக்கும் மாலையே தமக்கு உகந்ததென்றும் அவர் சூடாத மாலைகளைத் தாம் ஏற்றுக்கொள்ள இயலாதென்றும், கோதை உலகத்தைக் காக்க அவதாரம் செய்த 'ஆண்டாள்' என்றும் கூறிச் சென்றார். இதைக் கேட்டதும் பெரியாழ்வார் வியப்பும், பிரமிப்பும் மிகுந்து கோதையைப் பலவாறு புகழ்ந்து பேசி அன்று முதல் அவரை ஆண்டாள் என்று அழைக்கலாயினர். அன்று தொடங்கிக் கோதையின் திருநாமம் ஆண்டாள் என வழங்கலாயிற்று.

ஆண்டாள் கண்ணனையே கணவனாக அடைய வேண்டி மார்கழி மாதத்தில் ஒரு நோன்பு தொடங்கினார். அதற்காகத் "திருப்பாவை" என்னும் முப்பது பாடல்களை இயற்றி, அவற்றால் கண்ணனைப்பாடி யழைத்து ஆராதித்தார். அந் நோன்பினால் களிகூர்ந்த கண்ணன் ஆண்டாளை ஆவலுடன் தம்மிடம் வருவித்து, அவரைத் திருமணம் புரிந்து தம்மிலே ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

ஆண்டாள் பாடிய திருப்பாவைப் பாடல்களைக் கற்றுணர்ந்து ஓதாத மானிடர்கள் பூமிக்குப் பாரமாகப் பிறந்தவராவர் என்று கூறுகிறது திருப்பாவையின் முடிவுரை. ஒவ்வொருவரும் அந்தப் பாடல் முப்பதையும் மார்கழி மாதத்தில் நாள்தோறும் பாடி ஆண்டாளின்

அருளைப் பெறவேண்டுமென்று வைணவர் கூறுவர். இந் நாளில், மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையைச் சைவர் பாடிப் போற்றுவர்.

## பொங்கற் பண்டிகை

ஆண்டுதோறும் தைமாதப் பிறப்பன்று இந்தப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. அழகும், ஆரோக்கியமும், பயிர்வளமும், பொங்கிப் பெருகத் தொடங்கும் நாள் இந் நாளே யாதலின் பொங்கல் நாளெனக் கூறப்படுகிறது. சூரியதேவன் மகரராசியில் அன்றுதான் சஞ்சரிக்கத் தொடங்குகிறுனென்றும் ரவி மகரத்தில் புகுந்தால் மங்களமும் இன்பமும் இயற்கையாகவே உலகில் பொங்கித் ததும்பும் என்றும் கூறுவர். அன்று மகர ராசியில் சூரியன் ஸங்கிரமணம் (சஞ்சரிக்கத் தொடங்குதல்) செய்வதால் அந்த நாள் மகர ஸங்கிராந்தி என்றும் கூறப்படுகிறது. மழையாலும் பனியாலும் அது காறும் வாடிக்கொண்டிருந்த மக்கள் மகர சங்கிராந்தி தொடங்கி அவற்றிலிருந்து விடுதலை பெறுவதோடு மழையாலும் பனியாலும் வளம்பெற்ற பயிர்களின் பயனையும் பெறத் தொடங்குகின்றனர். இவ்வாறு பல்வகையில் சிறப்புற்று விளங்கும் இப் பண்டிகைக்கு முன்னும் பின்னுமுள்ள நாட்களில் முறையே போகிப் பண்டிகை, கனு அல்லது மாட்டுப் பொங்கல் பண்டிகை என்பன கொண்டாடப்படுகின்றன.

பொங்கற் பண்டிகையன்று பாலும்சோறும் பொங்க, கரும்பும் நெல்லும் அகத்தே நிறைய, அவற்றைக் கண்டு மகிழ்ந்து, சூரிய தேவனைப் பூஜை செய்து, பின்பு அறுசுவையோடு உணவருந்தி ஆனந்தமாக இருப்பர். அன்று

மங்களத்தைக் குறிக்க மஞ்சள் குலையைச் சோறு பொங்கும் பானையின் கழுத்தில் சுற்றி வைப்பர். மஞ்சள் குங்குமத்தோடு மணக்கும் மங்களமும், பொங்கும் பாற் சோற்றுப்பானையும், என்றென்றைக்கும் எங்கள் குடியிலே நிலைத்திருக்கவேண்டும் என்று சூரிய தேவனை வரங்கேட்டுப் பிரார்த்திப்பர். 'இந்துக் குடும்பத்தில் பிறந்த சகோதரர், 'தம் சகோதரியோடு உறவு முறையும் அன்பும் அபிமானமும் தமக்குச் சிறிதும் குன்றுமற் பொங்கிவாழ வேண்டும்' என்பதற்கு அறிகுறியாக அன்று சகோதரிக்குத் தம்மாலான சீர் . சிறப்புக்களைச் செய்து மகிழ்வர். குடும்பத்தின் ஒற்றுமையை நிலைநாட்ட நம் முன்னோர்கள் எத்தகைய முறையைக் கையாண்டுள் ளனர்என்பதை இதனால் அறியமிகவும் வியப்பேற்படுகிற தல்லவா? செல்வவந்தர்கள் தம்மை அடுத்து வாழும் ஏழைகளுக்கு அன்று விசேஷ வெகுமானங்கள் வழங்கி அவரைச் சந்தோஷப்படுத்தித் தாமும் இன்புறுவர்.

## மாட்டுப் பொங்கல்

மக்கள் உண்டு வாழப் பேருதவி புரியும் ஆடு மாடு களைப் பூஜிக்கும் நாளாக, பொங்கலையடுத்த மறுநாளைக் கொண்டாடுகிறார்கள். மாட்டினங்கள் பல்குதற்கும் மக்கள் உண்டு களித்தற்கும் காரணமான பசுக்களைச் சிறப்பாக அன்று பூஜிப்பர். அன்று எல்லா மாடுகளையும் அலங்கரித்து, மணி கட்டி, மஞ்சளாட்டி, மாலைசூட்டித் தொழுது 'எம் உழுதொழிலும் மக்களினமும் செழித்து வளம்பெற உழைக்கும் உத்தம ஆனினமே! என்றும் இங்ஙனமே எம்மை வாழ்விப்பாயாக" என்று வேண்டிக் கொள்வர்.

அன்று இளம் பெண்கள் முன் நாள் தம் சகோதரர் அளித்த சீர்களை அன்போடு ஏற்ற மகிழ்ச்சி ததும்ப, காக்கையினங்களைக் கூவியழைத்து அமுதருத்துவர். 'உறவுடன்கலந்து உண்டு மகிழ்ந்து வாழும் காக்கைகளே! உங்களைப்போல் யாமும் எம் உடன் பிறப்பும் கிடைக்கும் பொருளை என்றும் ஒன்றாக இருந்து ஒற்றுமையோடு உண்டு களித்து வாழ வேண்டும்; தன்னைச் சேர்ந்தோர் பசித்து வாட, தான் மாத்திரம் உண்டு மகிழவிரும்பும் புன்மைக்குணம் எம் வாழ்க்கையில் தலைகாட்டலாகாது. கூழானாலும் உங்களைப் போல் நாளும் எம் இனத்தவரைக் கூவி அழைத்து ஒரு சேர உண்டு மகிழவேண்டும்' என்று வரங்கேட்கும் பாவனையாகக் காகங்களுக்கு உணவளிப்பர்.

மேற்கூறியவற்றால் தமிழர்களுடைய உறவுப் பண்பு எவ்வளவு உன்னத நிலையில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதும் அந்நிலையிலிருந்து தாழாதபடி இருக்க எவ்வித ஞாபகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பதும் நன்கு விளங்கும்.

## ரதசப்தமி

சூரியன் மகரத்தில் பிரவேசிப்பதாகத் தை மாதம் முதல்தேதியன்று பண்டிகை கொண்டாடப்படினும் உண்மையில் சப்தமிதிதியன்றே அவனது ரதம் வடக்கு முகமாகத் திரும்புகின்றதாதலின் அந்த நாள் ரத சப்தமி எனப்படுகிறது.

## சிவராத்திரி

திருமாலை இரவும் பகலும் துதித்துப் போற்ற வைகுண்ட ஏகாதசி கொண்டாடப்படுவதுபோல் சிவபெரு

மானை அம் முறையிலேயே துதிக்க சிவராத்திரி விதிக்கப் பட்டுள்ளது. மாசிமாதத்து அமாவாசை திதியன்று சிவராத்திரி விழாவாகும். அன்று இரவில் சிறிதும் கண்ணயர்தல் இல்லாமல் வில்வ இதழ்களைக் கொண்டு சிவபெருமானை இடையீடின்றி அர்ச்சிப்பர்.

இவற்றைப்போலவே, மகம்மதியர்களுக்கு மொஹரம் ரம்ஜான் முதலிய விழாக்களும், கிரிஸ்தவருக்குக் கிரிஸ்துமஸ், ஈஸ்டர் முதலிய பண்டிகைகளும் முக்கியமானவை. இவ்வாறு ஒவ்வொரு மதத்தினரும், தத்தமக்கு உரிய முறைப்படி விழாக்களைக் கொண்டாடி, 'எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் உண்டு' எனும் உண்மையை உணர்ந்து நன்னெறியிலே செல்கின்றனர். இத்தகைய நன்னெறியிற் செல்லும் வரை மக்கள் நலமே எய்துவர் என்பது திண்ணம்.

## வைசாக பௌர்ணமி

இது பௌத்த மதத்தினர் கொண்டாடும் சிறந்த பண்டிகை நாளாகும். புத்தர் பிரான் அவதரித்த புனித நாள் இந்நாளே யாதலின் அது உத்ஸவதின மாயிற்று.

கிரிஸ்மஸ்:—டிசம்பர் மாதம் இருபத்தைந்தாம் தேதி கிரிஸ்மஸ் விழாவாகக் கிரிஸ்தவரால் கொண்டாடப் படுகிறது. இயேசுநாதர் அவதரித்த புண்ணிய தினம் இந் நாள் தான். ஆதலின் இவ்விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

அன்று தத்தம் இல்லங்களைக் கிரிஸ்தவர் மிகவும் அழகாக அலங்கரிப்பர்; காலையில் மாதா கோயிலுக்குச் சென்று பிரார்த்தனை செய்வர்; அநாதைகளுக்கும் ஏழை களுக்கும் அன்னமும் ஆடையும் அளித்து அவர்களைக் களிப்புறுத்துவர்; வாழ்த்துக்களும் ஆசிகளும் ஒருவருக் கொருவர் செய்துகொள்வர்.

ஈஸ்டர்:—ஏசுநாதர் உலக வாழ்வை நீத்த நாளே ஈஸ்ட ராகக் கொண்டாடப்படுகிறது.

ஹிஜிரா:—இது முகம்மதிய மதத்தினரின் வருஷத்தைக் குறிக்கும் பெயராகும். முகம்மது நபி பகைவரிடமிருந்து தப்ப மெக்காவிலிருந்து மெடினாவிற்கு ஓடிய நாளே வருஷப் பிறப்பு நாளாக முகம்மதியரால் கணக்கிடப் படுகிறது.

பக்ரீத்:—நபிநாயகத்திற்கு நேர்ந்த ஆபத்துக்கள் அனைத்தினின்றும் அவரை அல்லாகாத்த நாளே பக்ரீத் பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது.

## மொஹரம்

அல்லாவின் புதல்வியாரான பாதிமாவிற்கு இருபுதல் வர் இருந்தனர். ஹாஸன், ஹுசேன் என்பன அவர்களின்

பெயர்கள் டமாஸ்கஸ்நகர் கலீபா, பேராசையினால் ஹாஸனை விஷமருத்திக் கொன்றுவிட்டான். நபிநாயகம் அளித்த அரசை ஹாஸன் பெற்று ஆண்டு வந்ததே கலீபாவிற்குப் பொருமையை உண்டு பண்ணிற்று. தன் சகோதரனைக்கொன்ற பழியைத் தீர்க்கக் கலீபாவுடன் ஹுசேன் கலீபாவின் முற்றுகையிலகப்பட்டு உண்ண ஹுசேன் போர் செய்து வெற்றி பெற்றான்: எனினும் இறுதியில் பத்து நாட்கள் உணவும் நீருமின்றி வருந்தி முடிவில் கொலையுண்டான். இந்த இருவரது மரணத்தைப்பற்றிய துயரத்தையே மகம்மதியர் மொஹரம் என்ற பெயர் வாய்ந்த பண்டிகையாகப் பத்து நாட்கள் கொண்டாடுகின்றனர். மகம்மதிய குருக்கள் இந்நாட்களைத் துக்கதினமாகவே கொண்டாடி உபவாச பிருந்து அல்லாவைத் தொழுவர். ஏனைய மகம்மதியர் ஹாஸன், ஹுசேன் பெயரைக் கூவி யழைத்து மார்பில் அடித்துக்கொண்டு துயருறுவர். பின்பு பத்தாவது நாளில் தளியா எனப்படும் ஹுசேனின் ஞாபக சின்னங்களை ஒரு நீர் நிலையில் கலக்கிவிட்டு, ஏழைகளுக்குத் தானமளித்துத் தம் விரதங்களை முடித்துக் கொள்வர்.

ரம்சான்:—இதுவும் முகம்மதியப் பண்டிகையே. ஹிஜிராவின் ஒன்பதாவதுமாதமே ரம்சானாகும். குரான் வேதம் இம்மாதத்தில் தான் உலகுக்கு அளிக்கப்பட்டது. ரம்ஸான் மாதத்து முதற் பிறைச் சந்திரன் தோன்றிய நாளிலிருந்து ஒரு மாதம் இப்பண்டிகை கொண்டாடப்படும். காலையில் வெளிச்சம் பரவத்தொடங்கும் நேரத்திலிருந்து மாலையில் வெளிச்சம் மங்கும் வரையில் உபவாச மிருந்து குரானை அனைவரும் பாராயணம் செய்வர். இங்ஙனம் செய்வதால், தாம் அல்லாவினது அன்பிற்குப் பாத்திரமாகத்தக்க தூய நிலையை அடைவதாக அவரது நம்பிக்கை.

# தேசீயப் பகுதி

## ஆகஸ்டு பதினைந்து

பாரதத்தாய் சொல்லுகிறள் :—" நான் புல்லோர்களுக்குப் பயந்து பொறிக்குள் கிடந்த காலம் போய்விட்டது; ஆனை மேல் அமர்ந்து ஆதிக்கம் செலுத்தும் காலம் வந்துவிட்டது. அன்னியர் என் பொருளையும், என் மக்களிடம் உள்ள அருளையும் கொள்ளை யிட்டனர். என் குழந்தைகளை அடிமைகள் ஆக்கிக் கொடுமைகள் புரிந்தனர். என் சேய் களின் ஆக்கத்தைப் பறித்து ஏக்கத்தை நிறைத்தனர். என் கண்மணிகளின் அருளையெல்லாம் அபகரித்து இருளை நிறைத்துச் சென்றனர்.

"இதோ பாருங்கள் :—தளைகளால் தழும்பேறிய என் மலர்க் கரங்களை! ஆம்; என் கைத்தளை கழன்றது; விலங்கு விலகியது; யாரால்...? எந்த வீரப்புதல்வனின் தீரச் செயலினல்...?

"அதோ பாருங்கள்:—அருள் ஒளிரும் குளிர் முகத்தில் அரும்பித் தவழும் புன்னகையோடு அமரர் இடையே வீற்றிருக்கும் என் குலப்புதல்வனை! அந்தப் புதல்வன் தான் என் கைத்தளையை நீக்கிக் கண்ணீரைத் துடைத் தான்; என் பகைவரை ஓட்டிப் பதவியைப் படைத்தான், என் மக்களின் மனத்துட் புகுந்து சினத்தைத் தீர்த்தான். இனத்துட் புகுந்து எல்லோரையும் ஓரின மாக்கினன் என் மண்ணில் பிறந்த அவன்— இன்று விண்ணிலும் நிறைந்து விளங்குகிறன்.

"இனி, என் மக்களின் மனத்தில் இருள் இல்லை; கொலை இல்லை; பொய், பொறுமை, போர் முதலியன இல்லவே இல்லை. ஏன்?

"என் குழந்தைகளின் மனம் குற்றம் புரிதலைமறந்தே விட்டன; அதோ பாருங்கள்! என் மணி மக்கள் எல்லோரும் 'அஹிம்ஸை' என்னும் அறநெறிப் பாதையிலே நடக்கிறார்கள். மற்றைய குற்றப் பாதைகள் இருந்த இடமே தெரியாமல் மறைந்தொழிந்தன. இதுவும் அவன் செயல்தான்; அவன் கொடைதான்; அவனுடைய அருள்தான்.

"அவன் பெயர் என்ன தெரியுமா? அவனை நான் கூப் பிடும் பெயர் என் தவப்புதல்வன்! நீங்கள் அழைக்கும் பெயர் 'மஹாத்மா காந்தி'

"அதோ—அவன் என்னை நோக்கி கைகூப்பிவணங்கு கின்றான்; என் புகழைப் பாடிப் பாடிப் புகழ்ந்துரைக் கின்றான் அவ்விண்ணுலகத்திலும்!

"ஓ, இந்நாள்தான் நான் அடிமைத் தளையகன்று சுதந் திரம் பெற்ற தூய நாள் அல்லவா? ஆம்; இந்த நாள் புனிதமான நாள்; புகழ்ச்சிக்குரிய நாள். உலக சரித்திரத் திலேயே பொறித்து விட்ட உண்மை நன்னாள் இதுவே ஆகும். ஆதலால் இந்நாளிலே, என் இதயம் தழைக்க—உள்ளங்குளிர—உடலம்பூரிக்க—நீங்கள் எல்லோரும் என்னைப் புகழ்ந்து பாடுங்கள்! மகிழ்ந்து ஆடுங்கள்!"

## வந்தே மாதரம்

வந்தே மாதரம்

ஸுஜலாம் ஸுபலாம் மலயஜ சீதலாம்
    ஸுஸ்ய ச்யாமலாம் மாதரம்
        வந்தே மாதரம்

ஸுப்ரஜ்யோத்ஸ்நா புலகித யாமிநீம்
    புல்ல குஸுமித த்ருமதல ஸோபிநீம்
ஸி ஹாஸிநீம் ஸுமதுர பாஷிணீம்
    ஸுகதாம் வரதாம் மாதரம்
        வந்தே மாதரம்

த்ரிஸ்த்கோடி கண்ட கலகல நிநாத கராலே
    த்வாத்ரிம் ஸத் கோடி புஜைர் த்ருத கர கரவாலே
கே போலே மா! துமி அபலே
    பஹுபல தாரிணீம் நமாமி தாரிணீம் ரிபுதல வாரி
        [ணீம் மாதரம்
        வந்தே மாதரம்.

துமிவித்யா துமிதர்ம துமிஹ்ருதி துமிமர்ம
    த்வம்ஹி ப்ராணா : ஸரீரே
பாஹுதே துமி மாஸக்தி ஹ்ருதய துமிமா பக்தி
    தோமாரஈ ப்ரதிமா கடீ மந்திரே மந்திரே
        த்வம்ஹி துர்க்காதச ப்ரஹரண தாரிணி

கமலா கமலதல விஹாரிணி வாணி
    வித்யாதாயிநி நமாமி த்வாம்
நமாமி கமலாம் அமலாம் அதுலாம்
    ஸுஜலாம் ஸுபலாம் மாதரம்
        வந்தே மாதரம்

ஸ்யாமலாம் ஸரலாம் ஸுஸ்மிதாம்
    பூஷிதாம் தரணீம் பரணீம் மாதரம்
        வந்தே மாதரம்

—பங்கிம் பாபு.

## பாரத நாடு

1. பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள்
பாரத நாடு (பாருக்)
ஞானத்திலே பர மோனத்திலே—உயர்
மானத்திலே அன்ன தானத்திலே
கானத்திலே அமுதாக நிறைந்த
கவிதையிலே உயர் நாடு (பாருக்)
தீரத்திலே படை வீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங் கண்டு
தருவதிலே உயர் நாடு (பாருக்)
நன்மையிலே உடல் வன்மையிலே—செல்வப்
பன்மையிலே மறத் தன்மையிலே
பொன் மயி லொத்திடு மாதர் தம் கற்பின்
புகழினிலே உயர் நாடு (பாருக்)

2. பாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனிவோர் பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கானம் நலம் திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறும் நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம் பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கில்லை ஈடே

இன்னல் வந் துற்றிடும் போததற் கஞ்சோம்;
ஏழைய ராகி இனி மண்ணில் துஞ்சோம்;
தன்னலம் பேணி இழி தொழில் புரியோம்;
தாய்த்திரு நாடெனில் இனிக் கையை விரியோம்.

கன்னலும் தேனும் கனியும் இன் பாலும்
கதலியும் செந்நெலும் நல்கு மெக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே.

3. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்தது மிந் நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனை கூறி மனத்தி லிருத்தி என்
வாயுற வாழ்த் தேனோ.

—பாரதியார்.

## நமது இந்தியா

4. நமது இந்தியா நமது இந்தியா நமது இந்தியா
இமய முதல் குமரி வரை நமது இந்தியா
எங்கும் புகழ் தங்கி வளம் பொங்கும் இந்தியா
அமரர்களும் அவனியிலே பிறக்கும் இந்தியா
அருந்துணைவன் காந்திதனை அளித்த இந்தியா (நமது)
முப்புறமும் கடல் சூழும் ஒப்பில் இந்தியா
முடியெனவே மலையணிந்த வடிவம் இந்தியா
எப்புவிக்கும் இன்பளிக்கும் இணையில் இந்தியா
எவ்வுயிர்க்கும் அன்பளிக்கும் ஈடில் இந்தியா (நமது)
கங்கை நதி யமுனை யொடு காவிரி பாயும்;
தங்கம் வெள்ளி தானியங்கள் விளையும் இந்தியா
வங்க சிங்கம் சுபாஷ் சந்த்ர போஸினைத் தந்தே
மங்காத ஒளி மிகுத்து மலர்ந்த இந்தியா (நமது)
காவியமும் கற்பனையும் காதல் காதையும்
சீவனுள்ள சிற்பங்களும் செந்தமிழ்த்தாயின்
கோவில்களும் திருக்குளமும் கோடி கோடியாய்
ஓவியமும் உலகினுக்கே காட்டும் இந்தியா (நமது)
கருணை முகில் அருள் மழையைப் பொழியும் இந்தியா
தரும நெறி சத்தியத்தைத் தழுவு மிந்தியா
இரணியனை ராவணனை எதிர்த்த இந்தியா
இன்று சுய ராஜ்யம் பெற்ற திந்த இந்தியா (நமது)

—அனுமந்தராவ்.

## 5. பாரத பூமி

### பாரத பூமி — பாரத பூமி

காருலாவு மலைகளும்
நீருலாவு நதிகளும்
ஏருலாவு வயல்களும்
சீருலாவு நகர்களும்
ஈறிலாத பெருமைதாங்கும் ஏற்ற மிக்க பூமியாம்
மாறிலாத நேசம் தாங்கும் மாந்தர் வாழும் பூமியாம்
(பாரத)

வேதஞ் சொன்ன முனிவரும் - இதி
ஹாசஞ் சொன்ன முனிவரும்
நீதி சொன்ன பெரியரும் - உயர்
நெறிகள் சொன்ன அறிஞரும்
காதலாலே கடவுள் புகழைப் பாடி யுருகும் பக்தரும்
தீதிலாத தவமியற்றும் சித்தரும் வாழ் பூமியாம் (பாரத)

சரண மென் றடைந்தவர்
பகைவரேனும் அருளவும்
மரணம் வந்து நேரினும்
வாய்மை யோ டிலங்கவும்
கருணையோடு பொறுமை கொண்டு கானஞ்சென்று
காட்டிய
பெருமையோடு ராம னென்ற தெய்வம் நின்ற
பூமியாம் (பாரத)

" பயனை எண்ணிப் பணிசெயேல்!
கடமை யென்றே செயல் புரி!
பயன ளித்தல் என் கடன்;
பார்த்தனே! தளர்வுறேல்!
பயம் தவிர்ந்து போர் புரிந்து பகை ஒழிந்து மகிழ்"
என்றே
நயம் நிறைந்த கீதை நவின்ற கண்ணன் வாழ்ந்த
பூமியாம் (பாரத)

'சத்யமும் அஹிம்ஸையும்
சாந்தி பெற சாதனம்;
நித்ய மிவை தாங்கினல்
நேர்மை நெறி சேரலாம்'
என்று கூறித் தர்மயுத்தம் செய்ய நம்மை ஊக்கியே
நின்று நாட்டின் பந்தம் தீர்த்த காந்தி மகான்
தோன்றிய (பாரத)

—வைத்திய நாதன்.

## பாரதக் கொடி

**பாரதக் கொடியே! பணிந்தோம் உன்னடியே.**

1. நீலவர்ண மாலின் தர்ம
ஆழிவாழும் நற்கொடி!
வேலைதாண்டி நாடு தோறும்
சாந்தி கூறும் பொற்கொடி!
காலதூதர் போலவாட்டும்
அடிமைப்பேயை ஓட்டுவாய்!
ஞாலம்யாவும் இன்பமாக
வாழ மார்க்கம் காட்டுவாய். (பாரத)

2. ரத்தம் சிந்தும் கொள்கை யோங்கும்
இயநாட்டை ஏசுவாய்.
'சுத்தம் பெற அஹிம்ஸை தாங்கு'
என்று நீதி பேசுவாய்.
ஆதிபத்ய ஆசை கொண்ட
பேரைக் காணக் கூசுவாய்
சாதிவித்தி யாசமோட
தேசமெங்கும் வீசுவாய் (பாரத)

3. தாயின் தளையை நீக்கும்போரில்
சோர்ந்து நின்ற போதினில்
வேயின் இசையைப் போலப் பாடி
வீரமூட்டித் தூக்கினை!
காயும் துன்பம் கவனியாது
பாய்ந்து முன்னே தாவி நீ
பாதை காட்டி யெங்கள் இந்தி
யாவின் பந்தம் நீக்கினை; (பாரத)

4. இந்தியர்கள் வாழும் தேசம்
தேடிச் செய்தி சொல்லுவாய்!
சிந்தியாமல் அவரைத் தாழ்வு
செய்யும் நாட்டை வெல்லுவாய்!
சோக மேக இன்ப முற
அசோக சக்ரம் பூணுவாய்
ஏகமாக பேதம் நீங்க
மூன்று வர்ணம் பேணுவாய் (பாரத)

5. பச்சை வர்ணம் பாரிலெங்கும்
பசுமை நோயை வாட்டுக!
அச்ச மற்ற அமர வாழ்வை
மஞ்சள் வர்ணம் காட்டுக!
இச்சை யான வெண்மை யூடே
ஆடும் சக்ரம் சுற்றியே
துச்ச மான இருளகற்றித்
தூய வாழ்வை நாட்டுக! (பாரத)

—வைத்தியநாதன்.



## பாரத வாழ்த்து

### வாழ்க பாரத மாதா!

இமயக் கிரீடம் இலங்க
விந்த்ய மேகலை விளங்க
குமரிச் சிலம்பு குலுங்க
ஒலிகட லாடை துலங்க
சிந்து கங்கை கோதாவரி காவிரி யாதிய மாலைகள் ஆட
மந்த மாருதம் வந்து நின் கூந்தலின் மேல்
தவழ்ந்தே விளையாட
இந்து சீக்கியர் முஸ்லீம் பார்ஸியர் கிரிஸ்தவர்
ஏத்தொலி கூட
பந்தம் போக்கிய பாரத வீரர்கள் வந்தே மாதரம் பாட

(வாழ்க)

சத்தியப் பாதையில் நின்று
காந்தி மகானின்பின் சென்று
சுத்த அஹிம்சையால் வென்று
சுதந்திரக் கோயி லடைந் தாய்!
பாழும் நோய் துயர் பஞ்சங்கள் யாவையும்
பகலவன்முன்பனியாக
சூழும் நாற்பது கோடிமக்கள் சுகவாழ்வின ராகவே வைக.
ஆழி தாங்கிய மூவர்ணக் கொடியினுல் அறம்
நிலை நாட்டவே நிமிர்ந்தாய்
வேழம் தாங்கிய சீரிய அணையின்மேல் ஆசியராணியா
யமர்ந்தாய்

(வாழ்க)

—வைத்தியநாதன்



## நம் நாட்டின் தந்தை

பல்லவி

காந்தியைப் போலொரு சாந்த சொரூபியைக்
கண்டதுண்டோ? புவிமேல்—நம் (காந்)

அனுபல்லவி

தீத்தனை யாலுடல் தேய்ந்தநம் பாரத
தேவியின் பேரிடர் தீர்த்த மகாரத (காந்)

சரணங்கள்

மன்னனும் ஏழையும் ஒன்றென நின்றனன்;
இன்னலெ லாம்சிறை இருட்சிறை சென்றனன்;
மன்னுயிர் யாவுமே என்னுயிர் என்றனன்;
புன்னகை வீசியிப் புவிதனை வென்றனன் (காந்)

அஹிம்ஸையை ஏந்தினன் ஹரிஜன பாந்தவன்;
அன்னியர் ஆட்சியாம் ஆழ்கடல் நீந்தினன்;
அகில சராசரம் புகழ்ந்திட வாழ்ந்தனன்;
அவனென்றும் அழிவுறு திருந்தெலமைச் சூழ்ந்தனன்
(காந்)

வீணர்க ளாம் நமை வீரர்க ளாக்கினன்;
'மேவிடும் சாத்விகம் விரும்பு' மென் றாக்கினன்;
பூணும் சுதந்திரப் புதுமையும் நோக்கினன்
பொங்கிய சேவையால் தியாகத்தைத் தேக்கினன்
(காந்)

—அனுமந்தராவ்



# நவம்பர் பதின்மூன்று

[நவம்பர் மாதம் பதின்மூன்றாம் நாளே, மனிதருள் மாணிக்கமென உலகம் போற்றும் உத்தமரான நம் நாட்டுப் பிரதமர் ஜவஹர் பிறந்த நாளாகும்.]

பாரினிலே ஒரு வீரன்—நம்
பாரத நாட்டினை ஆளுங் குபேரன்
நேருவென்றே பெயர் சொல்வார்—உள
நேர்மையில் யாரே இவன்றனை வெல்வார்?

கருப்பன் என்றால் கண்ணை மூடும்—நிறக்
கருவச் சீமான்களும் வருவித்துக் கூடும்
விருப்பினைத் தாங்கிய வேந்தன்—அவ்
வெள்ளையர் மனத்தையும் கொள்ளைகொள் ஏந்தல்.

கடலினைக் கடந்ததுமுண்டோ?—புகழ்
ககன மளாவிடு மிருந்ததுமுண்டோ?
குடவிளக் காகிய நாமோர்—பொற்
குன்றதன் மேலின்று பொலிவது கண்டீர்.

வெள்ளையர் நாட்டினில் நாமோ ?—அங்கு
வெற்றிக்கும் வாழ்த்துக்கும் கனவு கண்டோமோ?
வள்ளல் நம் நேருவினாலே— நமக்கே
வாய்த்தது கீர்த்தி இவ்வையக மேலே.
மண்ணினில் அவர் பலகாலம்—நிறை
மாண்புடன் வாழ்ந்திட இறைவனை நாளும்
எண்ணியே போற்றுவம் தானே—ஒளிர்
இன்று நம் நேருவின் பிறந்த பொன்னாளோ!

—அநுமந்தராவ்.

# ஜனவரி இருபத்தாறு

[இந்திய நாட்டிற்காக இந்திய மக்களின் பிரதிநிதிகளாலே வகுக்கப்பட்ட புதிய அரசியல் சட்டம் அமுலுக்கு வந்த பொன்னாளான குடியரசு நாள் இந்நாளேயாகும்.]

## கும்பிடுவோம் வாரீர்!

கும்பிடுவோம் வாரீர்! கும்பிடுவோம் வாரீர்!
குடியரசு வந்ததென்று கொடிவிளக்கை ஏற்றிநின்று
கும்பிடுவோம் வாரீர்!

அம்புவியில் யாமடைந்த வெம்பவங்கள் மாய்ந்தன;
அன்னியரின் ஆட்சியென்னும் இன்னலின்று ஓய்ந்தன;
அம்புகொண்டு துளைத்தநெஞ்சின் துன்பப்புண்கள் ஆறின;
அண்ணல்காந்தி மண்ணில்கொண்ட எண்ணம்நிறை வேறின;
...... கும்பிடுவோம் வாரீர்!

தளைவிரித்தே நிலைபெயர்த்தோர் கண்களெல்லாம் உறுத்தவே,
தவம்நிறைத்தே பாரதத்தாய் தனியரசு செலுத்தவே,
கிளைவிரிக்கும் நிழல்தருக்கள் கீழ்இசைக்கும் பறவைபோல்
திருவிளக்கும் அருள்சுரக்கத் தேசகீதம் பாடிநாம்
— கும்பிடுவோம் வாரீர்!

சிறைபுகுந்தும் தடியடியால் செயலிழந்தும் வாடினோம்;
சிறுமைகளை எண்ணிஎண்ணி உரிமைக்குமன் றாடினோம்;
குறைமிகுந்தும் வாய்திறந்தே கூறவுந்திண் டாடினோம்;
குற்றமற்றும் பற்றலாரின் கொடுமைகஞ்சி ஓடினோம்:
— கும்பிடுவோம் வாரீர்!

அரசனென்றும் புருசனென்றும் அடிமைசெய்து வாழ்ந்தபேர்
அறிவுகொண்டார்; அருளுங்கண்டார்; அனைவரும் ஒன்றாகினோம்;
முரசொலிக்கச் சங்கநாதம் முழங்கிடநாம் கூடியே
முன்பெவருங் கண்டிராத இன்பமிதை நாடியே
— கும்பிடுவோம் வாரீர்!

அநுமந்தராவ்



## நம் கடமை

தேசத்தொண்டே நம் தெய்வத் தொண்டாமே
தெரிந்தே மகிழ்ந்தே இதைப் புரிவோமே

காசினியே புகழ் பேசிடுமே
கனிந்தருள் நிறைந்தொளி வீசிடுமே
மாசில தாஞ்சிவம் நாம் செய்யும் அன்பெனும்
நேசமஹான்களின் வாசமதாலொளிர் (தேசத்)

சொப்பனத்திலும் பிறழ்ந்து சத்தியம் விடோம்
துப்புமிக்க தர்மநீதி நெறியிலே கெடோம்
இப்புவிக்குளிந்த நாட்டை எவர்க்குமே கொடோம்
எப்பகைவன் வந்திட்டாலும் தலைவணங்கிடோம்

மலர்களில் சிறந்தது மணமிகு ஜாஜி
மதியினில் மிகுந்தவர் நமது ராஜாஜி
உலகினில் கங்கையின் புண்யம் போலே
ஓங்கினம் எங்கணும் நேருவினாலே

அடிமை யாமின்றல்லவே
அரசரானோம் சொல்லவே
கொடுமை யாவும் தீய்ந்தன
கொலையும் புலையும் மாய்ந்தன

இமயந்தொடங்கி குமரி வரையில் இந்தியர்கள் நாடு
அமரர் வியக்குமிந்த நாடு அண்ணல் காந்தி நாடு
அமுத மணித்த நாடு தமிழை யளித்த நாடு
ஆனந்தக் கூத்தாடு அல்லும் பகலும் பாடு [தேசத்]

## தேசிய வாழ்த்து

வாழிய செந்தமிழ் வாழ் நற்றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு
வந்தே மாதரம் வந்தேமாதரம்
வந்தே மாதரம்

பாரதியார்

ஜனகணமன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா!
பஞ்சாப ஸிந்து குஜராத மராடா
திராவிட உத்கல வங்க
விந்த்ய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்க
தவ சுப நாம ஜாகே
தவ சுப ஆசிஷ மாகே
காஹே தவ ஜய காதா

ஜனகண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

—டாகூர்.

# துதிப் பகுதி

## விநாயகர்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடு மரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர் கொடு பணிவேனே.
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே !
முப்புர மெரிசெய்த அச்சிவ னுறை ரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா !
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமானே.

—அருணகிரிநாதர்

## முருகன்

1. உலகு குளிரவெமது மதியிலொழுகு மதமு கிரணமே
உருகு மடிய ரிதய நெகிழ வுணர்வி லெழுந லுதயமே
கலையு நிறையு மறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவன முடியும் வெளியி லளியு மொளியி
[னிலயமே
அறிவு ளறிவை யறியு மவரு மறிய வரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியை யணைய மதலை வருக
[வருகவே
வளமைதழுவ பருதி புரியின் மருவு குமரன் வருகவே.
2. இழுமெ னருவி சொரியு மிமய முதல்வி புதல்வன்
[வருகவே
இயலு நடையும் வடிவு மழகு மெழுத வரியன் வருகவே
ஒழுகு கருணை முழுகு கமல வதனன் வருக வருகவே
ஒருவனிருவரொடுகைதொழுகலுபயசரணன் வருகவே
விழுது விடுவெ ணிலவு பொழியு நகையன் வருக
[வருகவே
விளரி பயிலு மளியு ஞிமிறும் விரவு குரவன் வருகவே
மழலை முதிர முதிரு மதுர வசனன் வருக வருகவே
வளமை தழுவு பருதி புரியின் மருவுகுமரன் வருகவே.

—குமரகுருபரர்.

# திருமால்

1. பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்
[கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே!
[எனனும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகரு
[ளானே.

2. குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார் படுதுய ராயின
[வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும் அருளொடு
[பெருநில மளிக்கும்
வலந்தரு மற்றுந் தந்திடும் பெற்ற தாயினு மாயின
[செய்யும்
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
[நாராயணா என்னும் நாமம்

—ஆழ்வார்கள்.

# சிவபிரான்

தலையே நீ வணங்காய்—தலை
மாலை தலைக் கணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

கண்காள் காண்மின்களோ—கடல்
நஞ்சுண்ட கண்டன் றன்னை
யெண்டோள் வீசிநின் றாடும்பிரான் றன்னைக்
கண்காள் காண்மின்களோ.

செவிகாள் கேண்மின்களோ—சிவ
னெம்மிறை செம்பவளம்
எரிபோல் மேனிப் பிரான்றிற மெப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.

மூக்கே நீ முரலாய்—முது
காடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்.

வாயே வாழ்த்து கண்டாய்—மத
யானையுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத்தாடும் பிரான்றனை
வாயே வாழ்த்து கண்டாய்.

நெஞ்சே நீ நினையாய்—நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும் மலைமங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

கைகாள் கூப்பித் தொழீர்—கடி
மாமலர் தூவி நின்று
பிபவாய்ப் பாம்பரையார்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

ஆக்கையாற் பயனென்—அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையாலட்டிப் போற்றி யென்னுதவிவ்
வாக்கையாற் பயனென்?

கால்களாற் பயனென்—கறைக்
கண்டனுறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களாற் பயனென்?

தேடிக்கண்டு கொண்டேன்—திரு
மாலொடு நான்முகனுந்
தேடித் தேடொணுத் தேவனை யென்னுள்ளே
தேடிக்கண்டு கொண்டேன்.

—அப்பர்.

## கலைமகள்

1\. வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள்
வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்
கொள்ளை யின்பம் குலவு கவிதை
கூறு பாவல ருள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் ஓதியுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உண்ணின் றொளிர்வாள்
கள்ளமற்ற முனிவர்கள் கூறும்
கருணைவாசகத் துட்பொருளாவாள்.

2\. தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வ மென்ற கருத்துடையோர்கள்
உயிரினுக் குயிராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்

—பாரதியார்.

## திருமகள்

1. பாற் கடலிடைப் பிறந்தாள்—அது
பயந்தநல் அமுதத்தின் பான்மை கொண்டாள்;
ஏற்குமோர் தாமரைப்பூ—அதில்
இணை மலர்த் திருவடி இசைந்திருப்பாள்;
நாற்கரந் தானுடையாள்—அந்த
நான்கினும் பலவகைத் திருவுடையாள்;
வேற் கரு விழி யுடையாள்—செய்ய
மேனியாள்; பசுமையை விரும்பிடுவாள்.
பொன்னிலும், மணிகளிலும்,—நறும்
பூவிலும், சாந்திலும், விளக்கினிலும்,
கன்னியர் நகைப்பினிலும்—செழுங்
காட்டிலும், பொழிலிலும், கழனியிலும்,
முன்னிய துணிவினிலும்—மன்னர்
முகத்திலும் வாய்ந்திடும் திருமகளைப்
பன்னி நற் புகழ் பாடி—அவள்
பத மலர் வாழ்த்தி நற்பதம் பெறுவோம்.

2. பொன்னரசி, நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவ ரத்தினம்போல் மேனி அழகுடையாள்,
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள்; ஸ்ரீதேவி
தன்னிரு பொற்றாளே சரண் புகுந்து வாழ்வோமே!

—பாரதியார்.

## பார்வதி

1\. செழியர் பிரான் திருமகளாய்க் கலைபயின்று முடி
 செங்கோ லோச்சி [புனைந்து
முழுதுலகுஞ் சயங் கொண்டு திறை கொண்டு நந்தி
 முனைப்போர் சாய்த்துக் [கண
தொழுகணவற் கணிமணமா லிகைசூட்டித் தன் மகு
 சூட்டிச் செல்வந் [டஞ்
தழைவுறுதன் னரசளித்த பெண்ணரசி யடிக்கமலந்
 தலைமேல் வைப்பாம்.

—பரஞ்சோதி முனிவர்.

2\. மலையிலே தான்பிறந்தாள்; சங்கரனை மாலையிட்டாள்;
உலையிலே யூதி உலகக் கனல் வளர்ப்பாள்;
நிலையில் உயர்த்திடுவாள்; நேரே அவள் பாதம்
தலையிலே தாங்கித் தரணி மிசை வாழ்வோமே.

—பாரதியார்.

## அனுமான்

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாக ஆரியற் காக வேகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலா
 [ரூரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை
 அளித்து காப்பான்.

—கம்பர்.

# புத்த பெருமான்

மாரனை வெல்லும் வீரநின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய் நின்னடி
பிறர்க்கற முயலும் பெரியோய் நின்னடி
துறக்கம் வேண்டாத் தொல்லோய் நின்னடி
எண்பிறக் கொழிய பிறந்தோய் நின்னடி
கண்பிறர்க் களிக்குங் கண்ணோய் நின்னடி
தீமொழிக் கடைத்த செவியோய் நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய் நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய் நின்னடி
உரகர் துயர மொழிப்போய் நின்னடி
வணங்குத லல்லது வாழ்த்தலென் னாவிற்
கடங்காது...

—சீத்தலைச்சாத்தனார்.

## அல்லா

அல்லா, அல்லா, அல்லா !
பல்லாயிரம் பல்லாயிரம் கோடி கோடி யண்டங்கள்
எல்லாத்திசையிலுமோர்எல்லையில்லாவெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்
சொல்லாலும் மனத்தாலும் தொடரொணாத பெருஞ்
[சோதி
அல்லா, அல்லா, அல்லா !
கல்லாதவராயினும் உண்மை சொல்லாதவ ராயினும்
பொல்லாதவ ராயினும் தவமில்லாதவராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவராயினும்
எல்லாரும் வந்தேத்து மளவில் யமபயங் கெடச் செய்
[பவன்
அல்லா, அல்லா, அல்லா !

—பாரதியார்

## ஏசுநாதர்

தேறுந் தயையின் முனிவோய் நீ
சினத்திற் கருள்செய் கனிவோய் நீ
கூறுங் கலையற் றுணர்வோய் நீ
கூறுந் தொனியற் றுரைப்போய் நீ
மாறும் பொருள்யா வினுநின்றே
மாறு நிலைகொள் மரபோய் நீ
ஈறுந் தவிர்ந்துன் புகழ்க்கடலாழ்ந்து
எனக்கே கரைகாட் டருளாயோ ?

—வீரமாமுனிவர்.

## வாழ்த்து

எங்கும் நிறைந்த இறைவா! சரணம்

இரங்கும் கருணைக் கடலே! சரணம்

மங்காப் புகழ்சேர் மன்னே! சரணம்

நலமே நல்கிக் காப்பாய் சரணம்

THE ALLIANCE PRESS, 156, Brodies Road, Mylapore

திருவல்லிக்கேணி

# தேசீய கலாசாலைப் பகுதி

கலாசாலை நிர்வாகத்தினர்:—

ஸ்ரீ. டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி அவர்கள்

தலைவர்

அங்கத்தினர்

1. ஸ்ரீ. எஸ். வேங்கடேச ஐயங்கார். அவர்கள்.
2. " சி. ஆர். பட்டாபிராமன். "
3. " கே. ராமைய செட்டியார். "
4. " எஸ். ராமசுவாமி நாயுடு "
5. " எஸ். சௌந்தரராஜன். "
6. " கே. எஸ். நாராயண ஐயங்கார். "
7. " எஸ். எஸ். வாஸன். "
8. " என். கே. திருமலாசாரியர் அவர்கள்.

(ஸ்தாபகர்; காரியதரிசி)



டாக்டர் டி. எஸ். திருமூர்த்தி அவர்கள்

## திருவல்லிக்கேணி

கண்ணனுடன் தோழமை பூண்ட ஆடவர்களுள் சிறந்தவன் அர்ச்சுனன்; அவனைப் 'பார்த்தன்' எனவும் கூறுவர். பாண்டவ-கௌரவ யுத்தத்தில் கண்ணன் அர்ச்சுனனுடைய தேரிலே சாரதியாக வீற்றுச் செயல் புரிந்தான். அதனால் கிருஷ்ணனுக்குப் 'பார்த்தசாரதி' என்றும் பெயர் ஏற்பட்டது.

போர் முனைக்குச் சென்றதும் பார்த்தன் சுற்று முற்றும் பார்த்தான்; "உற்றுரையும் மற்றுரையும் கொன்றேனும் இவ்வுலகத்தை ஆள்வதனுல் என்ன பயன்? எனக்கு வேண்டாம் இந்தப் பதவியும் பாவமும்! நான் பழையபடி காட்டுக்கே போகிறேன்" என்று தேரை விட்டுப் பாய்ந்தோட யத்தனித்தான்.

கண்ணன் அர்ச்சுனனைத் தடுத்து நிறுத்தி "ஏ, ஞான மறறவனே! நில்; நான் கூறுவதைக் கேள்; பொருவதோ அல்லது போர் நீங்கிப் போவதோ, உன் செயலில் இல்லை. அனைத்தும் என் உள்ளத்தின்படியே ஆகும்; என் விருப்ப மின்றி ஓர் அணுவும் அசையாது. ஆதலால், நீ செய்வன ஒன்றுமே இல்லை; நீயும், உன்னைப்போன்ற உயிருற்றவை யும், உயிரற்றவையும், எங்கும், யாவும், என் எண்ணத் தால் இயங்கும் பாவைகளேயாம். ஆதலால் உன் சித்தந் தெளிவு பெற நான் சொல்வதைக்கேள்." என்று கீதையை சொல்லி, ஆதியும் அந்தமும் இல்லாத தனது விசுவரூபத் தையும் அர்ச்சுனனுக்குக் காட்டி அருள் புரிந்து, அவனைப் போர் முகத்தில் நிறுத்திப் பாரதப்போரை நடத்தி முடித் தான். அந்தப் பார்த்தசாரதிப் பெருமான்தான் திருவல்லிக் கேணியில் எழுந்தருளியுள்ள திருமால்.

இந்த மூர்த்தியைத் தவிர ஸ்ரீ ராமபிரான் ரங்கநாதர், தெள்ளியசிங்கப் பெருமான். கஜேந்திர

வரதர் ஆகிய மூர்த்திகளின் சந்நிதிகளும் உள்ளன. இவையனைத்தும் கீழ்க்காணும் பாடல்களில் திருமங்கையாழ்வாரால் போற்றப்பட்டுள்ளன. அப்பாடல்களாவன:—

1. விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழ
செற்றவன் தன்னை, புரமெரி செய்த
சிவனுறு துயர்களை தேவை
பற்றலர் வியக் கோல் கையில் கொண்டு
பார்த்தன் தன் தேர்முன் நின்றானை
சிற்றவை பணியால் முடி துறந்தானைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

2. வேதத்தை வேதத் தின்சுவைப் பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனர் களிற்றைக்
குவலயத் தோர் தொழு தேற்றும்
ஆதியை அமுதை என்னை யாளுடை
அப்பனை ஒப்பவ ரில்லா
மாதர்கள் வாழும் மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

3. வஞ்சனை செய்யத் தாயுருவாகி
வந்த பேய் அலறி மண் சேர
நஞ்சமர் முலை யூடு உயிர் செகவுண்ட
நாதனைத் தானவர் கூற்றை
விஞ்சை வானவர் சாரணர் சித்தர்
வியன் துதி செய்யப் பெண்ணுருவாகி
அஞ்சுவை அமுதம் அன்று அளித்தானைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

4. இந்திரனுக் கென்று ஆயர்கள் எடுத்த
எழில் விழவில் பழ நடை செய்
மந்திர விதியில் பூசனை பெறாது
மழை பொழிந்திடத் தளர்ந்து ஆயர்
எந்தம் மோடு இனவா நிரை தளராமல்
எம்பெருமான் அருளென்ன
அந்த மில் வரையால் மழை தடுத்தானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

5. இன் துணைப் பதுமத்து அலர் மகள் தனக்கும்
இன்பன்; நற் புவி தனக்கு இறைவன்
தன் துணை ஆயர் பாவை நப்பின்னை
தனக்கு இறை மற்றையோர்க் கெல்லாம்
வன் துணை பஞ்ச பாண்டவர்க்காகி
வாயுரை தூது சென்றியங்கும்
என் துணை எந்தை தந்தை தம்மானைத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

6. அந்தகன் சிறுவன் அரசர் தமரசற்
கிளையவன் அணியிழையைச் சென்று
எந்தமக்கு உரிமை செய்யெனத் தரியாது
எம்பெருமான் அருளென்ன
சந்தமல் குழலாளலக்கண் நூற்றுவர்தம்
பெண்டிரும் எய்தி நூலிழப்ப
இந்திரன் சிறுவன் தேர்முன் நின்றானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே.

7. பரதனும் தம்பி சத்துருக்கனனும்
இலக்குமனோடு மைதிலியும்
இரவும் நண்பகலும் துதி செய்ய நின்ற
இராவணாந்தகனை எம்மானை

குரவமே கமழும் குளிர் பொழி லூடு
　　குயிலொடு மயில்கள் நின்றால
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
　　திருவல்லிக் கேணிக் கண்டேனே.

8. பள்ளியி லோதி வந்த தன் சிறுவன்
　　வாயில் ஓராயிர நாமம்
ஒள்ளிய வாகிப் போத ஆங்கு அதனுக்கு
　　ஒன்றுமோர் பொறுப்பில னாகி
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண் புடைப்பப்
　　பிறை யெயிற் றனல்விழி பேழ்வாய்
தெள்ளிய சிங்க மாகிய தேவைத்
　　திருவல்லிக் கேணிக் கண்டேனே.

9. மீனமர் பொய்கை நாள் மலர் கொய்வான்
　　வேட்கையி னோடுசென் றிழிந்த
கானமர் வேழம் கையெடுத் தலறக்
　　கரா அதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து
　　சென்று நின்று ஆழி தொட்டானை
தேனமர் சோலை மாடமா மயிலைத்
　　திருவல்லிக்கேணிக் கண்டேனே.

10. மன்னு தண் பொழிலும் வாவியும் மதிளும்
　　மாடமாளிகையும் மண்டபமும்
தென்னன் தொண்டையர் கோன் செய்த நல்மயிலைத்
　　திருவல்லிக்கேணி நின்றானை
கன்னிநல் மாட மங்கையர் தலைவன்
　　காமரு சீர்க் கலிகன்றி
சொன்ன சொல் மாலை பத்துடன் வல்லார்
　　சுகமினி தாள்வர் வானுலகே.

—திருமங்கை ஆழ்வார்.

# கலாசாலைக் கொடி

சீர்மை வாய்ந்த திருவல்லிக்கேணியில் மேலோங்கி வளரும் நமது தேசிய கலாசாலைக் கட்டிடத்தின்மேல் கீதாசாரியனையும், கீதையிலுள்ள தத்துவங்களான மூன்று மணிகளையும் தாங்கியவாறு, வானளாவப் பறக்கிறது நம் கலாசாலைக் கொடி. அதனை வணங்குங் காலத்தில் பாடுதற்குரிய பாடல் கீழே கொடுக்கப் பட்டுள்ளது :...

ஜயக்கொடியே ! ஜயக்கொடியே ! ஜயக்கொடியே !!

1. வற்றுதல் இல்லா அன்பெனும் ஊற்று
 மாதயையாலே தான் பெருகி
நற்றவத் தொண்டாம் நதியெனப் பாய்ந்து
 பயிராம் உயிர்க்கு செழிப்பீந்து
முற்றிடும் தியாகக் கடலிடைக் கலந்த
 போதமளித்தாய் பொற் கொடியே
சுற்றமும் நீயே துணைவரும் நீயே
 சுற்றிவந் துன்னை வணங்குவோமே.
(ஜயக்கொடியே)

2. தெய்விக மூட்டும் திருவல்லிக்கேணி
 தேசியக் கல்விச் சாலையிலே
செய்வன யாவும் செயமுற வென்றே
 சிறந்து நிலைத்தாய் மணிக்கொடியே
மெய்மொழி மனங்கொள் வெம்பவ நோயை
 வேரறுத்திட நீ உதித்தாயே
உய்வகை எல்லாம் ஊட்டிடும் உன்னை
 உளம் புறம் ஒன்றி வாழ்த்துவோமே
(ஜயக்கொடியே)

—அநுமந்தராவ்.

## திருமகள்

பாட்டு

பல்லவி

பூஜை செய்வோமே பூ—மா தினை (பூஜை)

அனுபல்லவி

ஆசிகள் பெறநிதம் அனைவருங்கூடி.. (பூஜை)

சரணங்கள்

மாசிலதாய மனக் கோயிலிலே
நேசமெனும் சிங் காசன மேலே
தேசுறை திருவை நிலைக்கச் செய்தே
பேசியவர் புகழ் மாரி பெய்தே (பூஜை)

பக்தியின் வகையாம் நவமணி பூட்டி
மாலை தொடுத்து மாண்புறச்சூட்டி
'ப்ரக்ருதி, விக்ருதி' என்று துதித்து

.....................................................................................

ப்ரேமை கற்பூர ஆரதி எடுத்து (பூஜை)

—அநுமந்தராவ்.

---

1. யானை மாமுக தேவனே வினை தீர்க்கும் நாயகனே [நமோ

மானை நேர்விழி தேவகுஞ்சரி வள்ளி நாயகனே நமோ
கீர்த்தி மேவுபா வாணர் போற்றிடும் தேவிபாரதியே [நமோ

ஆர்த்த போரிடை கீதையோதிய பார்த்த சாரதியே! [நமோ

மாலி மாலய மங்கை தங்கிடு பங்க சங்கரனே நமோ
பாலுள் நெய்தனைப் போலபாரிடை நிறைபரம் [பொருளே நமோ

—வைத்தியநாதன்.

## ஆண்டாள்

பாட்டு

பல்லவி

திருவடிகளே சரணம்—ஆண்டாள்
திருவடிகளே சரணம்
செகத்தினை சுகத்தினில் புகுத்திடும் மகத்துவ (திரு)

அனுபல்லவி

இருள் தனை நீக்கி எழில் நிறைவாக்கும்
அருட்கடலான அன்னையின் ஞானத் (திரு)

சரணம்

நரனெனும் வண்டு பக்தித் தேனுண்டு
பரவசமாகி போதை கொண்டு
"பரம புருஷனே! பக்த பாந்தவனே
சரணம் சரணம்" எனவே, மலர்ந்த (திரு)

—அநுமந்தராவ்.

## கலைமகள்

1. பாட்டு:—

பல்லவி

அமையு மறிவின் தேவதையே
ஆதரி நீ ஸரஸ்வதியே (அமை)

அனுபல்லவி

உமையும் பூவின் மாதும் போற்றும்
உனது இனிய அமுதைத் கருதி (அமை)

சரணங்கள்

மதியின் நிலவைப் போல நிறமும்;
மந்தகாச வதனமும்;
இதயம் போல யாழும்; துகிலும்;
எழிலும்; தரித்த இறைவி! வாணி! (அமை

அரிய 'ஸாரஸ்வத' நிதியே
அயன் சதியே நீ கதியே
தகருணைத் தாமரையில் நீடும் [டோம்.
அருள் தேனுண்டோம் நிறைவு கொண் (அமை)

—அநுமந்தராவ்.

## திருமால்

நாராயண ஜய நாராயண ஜய
நாராயண ஜய நமோ நமோ.
ஸாது ஜன பரிபாலகா
ஸர்வலோக நாயகா
ஆதி மூல மான தேவ
தேவனே வனமாலியே! (நாராயண)
ஸ்ரீதர கருணா ஸாகர! சரணம்
ச்ரித மந்தார பரந்தாமா!
சேஷ சயன மணி பூஷண வரம்ருது
பாஷண கருடா ஸனு நமோ (நாராயண)

## கண்ணன்

### 1. கும்மி

கும்மியடிப் பெண்ணே கும்மியடி—நகை
குலுங்கக் குலுங்கக் கும்மியடி
நம்மையும் நாட்டையும் செம்மை யுறச் செய்யும்
காவிந் வென்று கும்மியடி
தோளெதிர் நின்று கும்மியடி.

கண்ணன் பிறந்தனன் கண்ணைத் திறந்தனன்
கண்ணின் இமையென கும்மியடி
எண்ணித் தொலையாத இன்னல் பறந்தன
இன்ப மீது கண்டு கும்மியடி
அன்பு மது உண்டு கும்மியடி.

தாய்த்தளை நீக்கினன் ராட்டினம் போலொரு
சக்கரம் தாங்கினன் பாரடியோ!

ஏய்க்க நமையினி யாராலு மாகாது
ஆய்க்குல மங்கையே கும்மியடி
சேய்க்கிணை இலையெனக் கும்மியடி.

வெண்ணிறச் சங்கத்தின் பண்ணிசை கேளடி
விண்ணை மயக்குது பெண்ணனமே
தண்முகச் சந்திரன் தன்னில் இருவிழி
கண்டங்கு தாவுதல் ஏன் மனமே?
மண்டலம் யாவும் அவன் இனமே!

ஆயரும் வேயரும் யாவரும் ஓரினம்
ஆணும் பெண்ணும் சமம் என்னு முயர்
நேய தத்துவத்தை நாட்டப் பிறந்திட்ட
நீல மணி வண்ணன் கண்ணனடி
பால ராமன் இவன் அண்ணனடி

கஷ்டங்கள் நீங்கின கவலை மறைந்தன
கங்குல் அகன்றது கண்டனையா?
அஷ்டமி ரோகிணி ஆய நன்னாளிலே
ஐயனைச் சேவித்துப் பாடுவமே
ஆனந்தமாகக் கூத் தாடுவமே.

கோகுல பாலகன் தோன்றிய நாளிதைக்
கொண்டாடுவோர்கள் குறை யகன்று
தேக திடத்துடன் தீர்க்காயுளும் பெற்றுச்
செல்வங்கள் சூழ்ந்திட. வாழ்வரடி
நல் வினை யால் புவி ஆள்வரடி.

அனுமந்தரால்

2. பாட்டு

பல்லவி

சுதந்திரம் தரும் ஒரு சுதன் றனை யீன்றாள்
தோகை தேவகியாள்—இந்நாள் (சுதந்)

அனுபல்லவி

பதந்தொழு முனிவரும் பக்தரும் மகிழ
வானவர் கூடியிவ் வையத்தைப் புகழ (சுதந்)

சரணங்கள்

கொடியன வளர் சிறை கூட மத்தியிலே
கோடி யிரவி யென நாடி யிரவிலே
அடிமைகள் தளையற அஷ்டமி தனிலே
ஆகிய மோகன ரோகிணியதிலே (சுதந்)

இடையர்க ளொடு கழி ஏந்தித் திரிந்து
இனிய குழலிசைத்து தனியருள் புரிந்து
மடுவிலும் மலையிலும் மாடுகள் மேய்த்தே
மண்ணையும் விண்ணையும் மாண்புறக் காத்தே (சுதந்)

கண்ணனும் கோயும்

[கண்ணன் ஒரு கோபியின் இல்லத்தில் நுழைந்தான். உறியைப் பார்த்தான். மேலே வெண்ணெய் இருப்பது தெரிந்தது. மெல்ல ஏறினான்; கலயத்தைக் கையில் எடுத்தான், கோபி வந்து விட்டாள். 'கண்ணா! என்ன செய்கிறாய் இங்கே?'' என்று கேட்டு முறைத்துப் பார்த்தாள். கண்ணன் அவளைப் பார்த்துச் சொல்லுகிறான்.]

(கிருஷ்ண கர்ணாம்ருதத்தில் உள்ள சுலோகங்களின் பொருளைத் தழுவியது கீழ்வரும் பாடல்.

3. பாட்டு

பல்லவி

என்ன நான் செய்துவிட்டேன்
ஏதுக்கு முறைக்கிருய்
எவருக்குன் வெண்ணெய் வேணும்
சீசீ போ, கோபீ (என்)

அநுபல்லவி

மன்னன் நந்த கோபாலன்
மகனென்னைத் தெரியாயோ
மனத்தை அல்லா தெதையும்
கவரேனென் றறியாயோ? (என்)

கன்றுக் குட்டி யொன்று காணுமற் போனது;
சென்றதை எங்கெங்கோ தேடவு மானது;
இன்று உங்கள் உறியில் ஏறிப் புல் மேயுதோ,
என்று எட்டிப்பார்த்தேன்; இல்லை: போறேன் இதோ
(என்)

ஆணாய்ப் பிறந்த என்னை 'அடி நீ' இழுக்கலாமா
சாணே இருந்தாலென்ன சாரம் குறைந்து போமா
வீணுக என்னைத் தீண்டி விழுப்பாக்கி (வி)டலாமா
நாணுது பல்லிளித்தல் நாரியர்க் கழகாமா (என்)

---

(கோகுலத்தில் வாழும் கோபியர் அனைவரும் தத்தம் குடும்பங்களை அறவே மறந்து குழலோசையின் வழியே சென்று கிருஷ்ணனது இருக்கையைச் சேர்ந்தனர்; இதனை அறிந்த அவர்களுடைய பர்த்தாக்கள், தங்கள் மனைவியருடன் மாயனையும் இழுத்துவந்து நந்த கோபன் திருமுன்பு விட்டுக் கூறுவாராயினர்)

5 பாட்டு இசை "ஆசை முகம் மறந்து"

நந்த கோபா! இதுவா நியாயம்—உன்
நந்தன் செய்யும் அநியாயம்.
சிந்தை பொறுக்க முடியாது—நின்
செல்வன் க்ருஷ்ணனுக்கு நீ ஓது.

யமுனை நதிக்கரையில் வாசம்—இந்த
யாதவப் பெண்களெல்லாம் நேசம்.
நமது இனத்தவர்க்கே ரோசம்—உன்
பாலன் செய்வது பெரு மோசம்.

கழுத்திலே நாங்கள் இட்ட தாலி—பெண்கள்
களிக்கவோ க்ருஷ்ணன் இன்ப ஜோலி.
முழுவதும் ஆசையெல்லாம் அங்கே—முணு
முணுப்பதும் கடன் கழிப்ப திங்கே.

குழலை அவன் எடுத்து ஊத—இந்தக்
குமரிகள் கூட்டமங்கே ஓட.
அழமுடியாத குறை ஐயா! இவ்
அக்ரமம் நீதியாசொல் ஐயா!

அடுப்பில் இருந்த உலை நீரை—கோபி
அப்படியே விடுத்துப் போனாள்.
குடத்துடன் சென்ற ஒரு கோபி—அக்
குடத்தைக் குளத்தில் போட்டுப் போனாள்.

தொட்டில் குழந்தை யொன்றைப் பாவம்—கத்த
விட்டுப் போனாளே; அகம் பாவம்!
ஓட்ட வைத்தது போல வீட்டில்—இவர்கள்
உள்ள மெல்லாம் யமுனை ஆற்றில்.

தாகம் பசியுமில்லா மோகம்—சதா
கண்ணனைக் காணும் மன வேகம்.

போக முடியா விட்டால் சோகம்—அங்கே
போனால் அதுவே இந்திர போகம்.

உதித்து விட்டாலே க்ருஷ்ணன் எண்ணம்—இந்த
உலகை மறந்து நிற்கிறார்கள்.
கொதித்துக் கொதித்து நெஞ்சம் புண்ணாய்—மிகக்
குமுறுகின்றார்கள் என்ன சொல்வோம்.

கனவிலும் கண்ணன் இவர் முன்னே—வந்து
காட்சி தருகிறானும் என்ன ?
மனத்தில் அவனை எண்ணி எண்ணி—எம்
மனைவியர் அழைப்பர் துதி பண்ணி.

(நந்த கோபா இதுவா நியாயம்)

— அனுமந்தராவ்.

## "பொங்கலோ பொங்கல்"

பொங்கலோ பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!!

தேடும் பூவில் ஆடும் வண்டு தேனை யுண்டு பாடும் நாள்;
கோடி கோடி தாரகைகள் கோலமதியைக் கூடும் நாள்;
நாடு வாழ வீடுதோறும் நல்லறத்தொண் டாற்றும் நாள்;
ஈடிலாத எங்கள்நாட்டின் இணையிலாத பொங்கல் நாள்.

பொங்கலோ பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!!

மானனைய மாதர்கூடி மங்கலங் கொண்டாடும் நாள்;
யானையேறி தேவராசன் சேனையோடு காணும் நாள்;
பானையேறிப் பொங்கும் பாலில் பாகுந் தேனுந் தங்கும்
நாள்;
வானிலேறி மண்ணையாளும் பகலவற்குப் படைக்கும்நாள்;

பொங்கலோ பொங்கல்!
பொங்கலோ பொங்கல்!!

தருவி லெங்குங் கனிகுலுங்கத் தரைவிளங்குந் திருவின்
நாள்;
மருவிலாது தைபிறந்த திருவிழா வியற்றும் நாள்;
கருதும் பெண்கள் உறவுவாழ களிசிரப்புங் கனுவின்
நாள்;
எருது கொம்பில் விருது கட்டும் எங்கள் நாட்டின்
பொங்கல் நாள்;

பொங்கலோ பொங்கள்!
பொங்லோ பொங்கல்!!

— அனுமந்தராவ்.

1 பாட்டு

## கோ பூஜை

கோ மாதா! கோ மாதா!
மலர்ந்த உலகில் வளர்ந்த புல்லையும்
கனைந்த நீரையும் காய்ந்த வைக்கோலையும்
உணவாய் நீ கொண்டு உயிர்கள் வாழ
மணமார் பாலை மகிழ்வோடளிக்கும் (கோமாதா)

கறந்தபாலுள் மறைந்த வெண்ணெயும்
சிறந்த நெய்யும் செறிந்த தயிரும்
அருந்த இலையேல் அகிலம் பிழைக்குமோ
வருந்திப் பசியால் வாடாதிருக்குமோ. (கோமாதா)

இமையவர் யாவரும் ஏய்ந்துன் உடலில்
அமைந்தனர் என்றே ஆரணம் கூறும்
திருமால் வணங்கிய பெருமையை யுடையாய்
சிறு மானிடர் செயும் சிறுமையை இகழாய் (கோ)

— வைத்யநாதன்.

## கனுவும் காக்கையும்

வா வா வா.

காக்கைப் பிள்ளாய் நீ கரைந்து வா.
கனுவை எடுக்க விரைந்து வா.

ஊக்கமுடன் எம் உறவும் நண்பும்
உவந்தே நலம் பெற பறந்து வா. (வா)

உன்னிட முள்ள ஒற்றுமை யென்னும்
உயர் குணம் எமக்கேன் இல்லையே
தன்னல மறியாத்தன்மையை யுடையாய்
தரணியில் நிகரார்? சொல்லையே? (வா)

எங்களைக் காக்கும் பொறுப்புடையாய் நீ
இங்கே நோக்கி நடந்து வா
பொங்கலும் பாலும் புது மணத்தேனும்
புசிப்பாய் விருப்பாய்த் தெரிந்து வா. (வா)

— அனுமந்தராவ்

## பாரதத் தாய்

(பாட்டு)

பாக்கியவதி நீயே—பாரதத் தாயே
பாக்கியவதி நீயே
நாற்பதுகோடி சேய்களும் வாழ
நற்றவஞ் செய்து சுதந்திரம் ஏற்ற
பாக்கிய வதி நீயே...

## இராமர்

நீதியைக் நாட்டவே பேயிருள் ஓட்டவே
நிலையான பொருள் கூட்டவே
சீதையுந் தம்பியுந் தொடரவே கானகம்
சென்ற ஸ்ரீ ராமசந்திரா...
தியாகமூர்த்தி! உன்னைப்போலே
தெய்வ முண்டோ ரகுராமா
மேக நீல ஸ்யாமளாங்கா
மெய்யில் வாழும் பரந்தாமா

## கண்ணன்

"அனந்யாஸ் சிந்தயந்தோமாம்
ஏ ஜனா: பர்யுபாஸதே
தேஷாம் நித்யாபி யுக்தானாம்
யோக க்ஷேமம் வஹாம்யஹம்
பரித்ராணாய ஸாதூனாம்
விநாசாயச துஷ்க்ருதாம்
தர்ம ஸம்ஸ்தாபனார்த் தாய
ஸம்பவாமி யுகேயுகே"

என்னுங்கீதை தந்த கண்ணா
உன்னை மறவோம் மணி வண்ணா
அன்னை தந்தை குருவுமாகி
அழிவிலாத மகிழ்வு தந்த
உன்னை மறவோம் மணிவண்ணா

### (புத்தர்)

ஓருயிரின் ஓலக்குரல் எங்கிருந்தோ கேட்குதே
"ஆருயிரைக் கொல்லாதே" என்று அபயங் காக்குதே
பேருலகில் கொலைகளெலாம் நீக்கவந்த பௌத்தனே!
பேசிடுவோம் நின்புகழே மாசிலாத மனத்தனே!

### காந்தி

எமக்காகவே பிறந்து எமக்காகவே இருந்து
எமக்காக இறந்த ஐயா!
உமக்காக யாமென்ன புரிந்துளோம் கைம்மாறு
உளமெலாம் நிறைந்த மெய்யா!
அண்ணலே நும் ஆணைபோலே
எண்ணம் செய்கை ஒன்றிமேலே
ஆற்றுவோம் நம் தேசத்தொண்டு கூடி—நிதம்
போற்றுவோம் அஹிம்சை தன்னை நாடி—கொடும்

பொய்யுங் களவுங்
கொலையும் மறந்தோம்
புகலும் அறமே
புகலென் றறிந்தோம்

உய்யும் வழியைக் கண்டுகொண்டோம் யாமே - இனி
உலகில் துயரும் வறுமைப் பிணியும் போமே.........

—அநுமந்தராவ்



## ஸ்தாபகர் வாழ்த்து

வாழ்க! வாழ்க! வாழ்கவே!
வாழ்க! வாழ்க! வாழ்கவே!!
யாம் தரித்தொளிர் வாணி தாஸன்;
அமலன்; வைணவன்; ஆரியன்!
ஐயன் திருமலா சாரியன்! (வாழ்க)

மன்மதத் திரு வாண்டிலே,
புரட்டாசித் திங்களில், ஆயில்யம்
வன்மை யோடுறை நாளிலே,
புவி மாதுளங்களி கூரவே;
பொன் மனத்தவன் நார ஸிம்ம ஸ்ரீ
கிருஷ்ண பூமனின் புதல்வனாய்,
சன்ம மெய்திய சாந்த சற்குணன்
தரணியில் சிரஞ்சீவியாய் (வாழ்க)
வெண்மலை, திருப் பாற்கடல், அன
வாகனம் வளர் தேவியார்,
அண்மை வந்தருள் செய்து தம்மின
ஆக்கம் கண்டகம் குளிரவே;
பெண்மையின் பெருந் தன்மை யோங்கிட,
பெண்கள் கண்கள் திறக்கவே;
உண்மைக் கல்வியின் கோயிலை த்திரு
வல்லிக் கேணியில் நிறுவினான்! (வாழ்க)
அன்ன மிடுவதும், சொர்ன மிடுவதும்
ஆலயம் பல செய்வதும்,
கன்னி யர்க்கருங் கல்வி யீந்திடுங்
கருணையின் நிக ராகுமோ!
சென்னை செய் தவத்தால் பிறந்தவன்
திருவும் புகழு மிகுந்தவன்;
தன்னலங் கருதாத தியாகி இத்
தரை மிசை இறை யாசியால் (வாழ்க)

மங்களம்

பாலும் தேனும் சோறும் பொங்குக!
நாளும் வாழ்வில் நலமே தங்குக!

TAMILNADU ARCHIVES LIBRARY
111077